299

வசந்தம்

விலை
8
அணா

சுபானு - கார்த்திகை

1943 - நவம்பர்

சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங் களுக்கும்
P.A. ராஜசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"

தந்திவிலாசம்: FLOWER. டெலிபோன் நெ. 175.

சௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்.

8-MAY 1944
MADRAS

இரும்பு, எலக்ட்ரிக், மில் ஸ்டோர்ஸ் வியாபாரிகள்,
அவனுசி ரோடு, கோயமுத்தூர்.

சேர்மன் போர்டு ஆப் டைரக்டர்ஸ்

டாக்டர். ராஜா. சர் அண்ணுமலே செட்டியார், KT. LL. D.

ஆப் செட்டிநாடு.

தலைமை ஆபீஸ் செட்டிநாடு.

எங்களிடம், எல்லாவிதமான டாட்டா இரும்புச் சாமான்களும், கலாய் குழாய்களும், நீலகிரி மார்க் சிமிண்டும், குட்லஸ் வால்வர்ணம் வகையருக்களும், சானிபட்டரிச் சாமான்களும், எலக்ட்ரிக் பல்புகள், வயர்கள், பங்காக்கள், மோட்டார், சுவிட்சுகள், முதலியவைகளும், மில் ஸ்டோர்ஸ், பாபின்ஸ், தோல் பெல்ட்டுகள், கிராப்ட் பேபபர், ஊப் தகடுகள், கித்தான்கள் கிடைக்கும்.

பிராடியூஸ் டிபார்ட்மெண்டு,

21/138, 139, ரெங்கய்ய கவுடர் தெரு

நெல், அரிசி, கோதுமை, ரவை, மாவு தினுசுகள், சர்க்கரை நவதானியங்கள், மற்றுமுள்ள மளிகை சாமான்கள் எங்களிடம் மொத்தமாகக் கிடைக்கும்.

பீஸ் கூட்ஸ் டிபார்ட்மெண்டு ("கமர்ஷியல் எம்போரியம்")

21/138, 139 ரெங்கய்ய கவுடர் தெரு

பல மில்களில் தயாராகும் ஷர்ட்டிங், கோட்டிங், மல், லாங் க்ளாத், வாயில்ஸ், சீட்டி தினுசுகள், டிரில், டுவில், வேஷ்டிகள், துண்டுகள், இன்னும் பலவிதமான மில் ஜவுளி தினுசுகளும், எங்களிடம், மொத்தமாகவும், சில்லரையாகவும், சகாயமாகவும் கிடைக்கும்.

அஜாக்ஸ்

உங்கள் தற்காப்புக்காக

வீட்டிலாகட்டும், ஆபீசிலா
கட்டும் அஜாக்ஸ் இரும்புச்
சாமான்கள் பாதுகாப்புடன்,
சோபையுமளிக்கின்றன.
உறுதியான அமைப்பும், அழ
கான தோற்றமு முள்ளவை.

உங்கள் விலையுயர்
ந்த பொருள்களைக்
காக்க **அஜாக்ஸ்**
இரும்பு அலமாரி
களையே தேர்ந்தெ
டுங்கள். திருட்ர்க
ள்முயற்சியை வி
ணைக்குவதிலும் நெ
ருப்பு, கரையான்
முதலிய நாசம் உ
ண்டுபண்ணும் பூச்
சிகள் இவைகளா
ல் சேதமடைவ
தை தடுப்பதிலும்
தலை சிறந்தவை



பெருந் தீயையும்,
பக்காத் திருட்ர்க
ளையும் எதிர்த்து
நிற்க, மிகச்சிறந்த
பொருள்களைக்
கொண்டு ஏற்ற வ
கையில் செய்யப்ப
ட்டவை இந்த இரு
ம்புப் பெட்டிகள்.



Ajax

PRODUCTS LTD.

106, ARMENIAN STREET. MADRAS.

AS-K-6

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: முருகப்பா & சன்ஸ்.

கிளை ஆபீஸ்: நெ. 5, வெரைட்டி ஹால் ரோடு, கோயமுத்தூர்.

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: பம்பாய் சென்னை கிளை: **4 & 5,** முதல் லைன் பீச்

தீ விபத்து, ஆயுள், கப்பல், மோட்டார்கார், தொழிலாளர்கள் நஷ்டஈடு முதலிய இன்ஸ்யூரன்ஸ் திட்டங்களும் அடங்கி யிருக்கின்றன.

"நியூ இந்தியா" வின் பொருளாதார நிலை

வசூலான மூலதனம்

ரூ. 3,50,05,275

1942வருஷத்திய பிரிமிய வருமானம்

தீ	ரூ. 57,46,706
கப்பல்	ரூ. 45,00,706
விபத்துக்கள் முதலியன	ரூ, 14,86,288
ஆயுள் :	
முதல் வருஷத்திய பிரிமியம்	ரூ. 9,85,372
புதுப்பிக்கப்பட்ட பிரிமியம்	ரூ. 47,87,033
ஒற்றைப் பிரிமியம்	ரூ. 5,12,887
கூட்டுப் பிரிமியம்	ரூ. 9,996
உத்தேசிக்கப்பட்ட வருஷ வருமானம்	ரூ. 3,54,091

1942வருஷத்திய புதிய தொழில்கள்

ஆயுள்	ரூ. 2,33,86,850
அவசர வருஷ வருமான பாண்டுகள்	ரூ. 2,88,059
நீண்ட கால வருஷ வருமான பாண்டுகள்	ரூ. 53,825
கூட்டு இன்ஷ்யூரன்ஸ்	ரூ. 14,30,000
மொத்த சாதாரண ஆயுள் பாலிசிகள்	12,07,30,150

செலுத்தப்பட்ட மூலதனம்

ரூ. 71,21,055

31–12–1942ல் இருந்த நிதிகள்

செலுத்தப் பட்ட மூலதனம்	ரூ. 71,21,055
தீ நிதி	ரூ. 54,48,683
கப்பல் நிதி	ரூ. 69,41,776
விபத்துக்கள் நிதி	ரூ. 15,19,516
ஆயுள் சகாய நிதி	ரூ. 2,53,24,543
வாடகை, செலவு நிதி	ரூ. 17,715
பொது சேமிப்பு நிதி	ரூ. 3,50,000
கொள்முதல் சேமிப்பு நிதி	ரூ. 6,99,433
மாற்று சேமிப்பு நிதி	ரூ. 50,679
லாப நஷ்டம்போக மீதம்	ரூ. 11,02,023
மொத்த நிதி	ரூ. 4,85,75,423

உரிமைத் தொகை எட்டுக் கோடி ரூபாய்க்கு அதிகமாக இது வரையிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது

சென்னை மாகாணத்தில் சமஸ்தானங்கள் உள்பட ஏஜெண்டுகள் தேவை.

கே. கணபதி

பிராஞ்சு மானேஜர்.

சுத்த தனி வசீகரம்

மைசூர் சந்தன சோப் உனக்கு உறுதியாக அளிப்பது அதுதான்.

அது குளிர்ச்சியுள்ளது. மிருதுவானது. கூச்சம் மிகுந்த சருமங்களிலும் உபயோகிக்கத்தக்கது.

மைசூர்

சந்தன சோப்

கவர்மெண்ட் சோப் பாக்டரி,
பெங்களூர்.

The Fashionable
Furnishing Fabrics

**DRESS
TEXTILES**

Ladies', Gents', Children's
Underwear Sport Shirts etc.

**S. BEEMIAH
CHETTY,**

**"WHITE SHOP"
COIMBATORE.**

THE VASANTHA DYING WORKS.

**181. Oppanakara Street
Coimbatore.**

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR
To

**THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.**

For all kinds of dying border yarn and tie yarn etc., undertakes any variety of colour dying at reasonably cheap rates for dying all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colourguaranteed.



T.V.S. முன்னிற்கிறது!



T.V.S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷகாலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 4,000-க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன- இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T.V.S இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூடர்களிடம் கேளுங்கள்.

பிரதான அம்சங்கள்

ஸ்டார்டிங் அதிசுலபம்:—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.

சமகனம்:—டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.

மும்முறை வடிகட்டும் வசதி:—சுத்தமான கியாஸ். மேற்பார்வை செலவு குறைவு.

மிகவும் நம்பிக்கையானது:—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.

நேர்த்தியான தோற்றம்:—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்ததோற்றம்.

வாங்கு முன் மாதிரிகளைப் கியாஸ் பிளாண்ட் பாருங்கள்.

T·V·S

)கார், லாரிகளுக்கு ஏற்றவை)

T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்

மதுரை & சென்னை.

TVSK-7TM

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

AVI

வசந்தா

தையல் நூல்

No. 600

ஆரம்பம் முதல் கடைசி வரையில் அருமையாக வருகிறது.

உங்களுக்கு பூரண திருப்தி தரும் என்பதற்கு உறுதி கூறுகிறோம்.

The Vasanta Sewing Thread Company
14/280. Oppanakara Street
COIMBATORE.

பொருளடக்கம்

மலர் 2] [இதழ் 8

நாட்டின் பொதுக் கடன்
சர். ஆர். கே. எஸ். ...

ஆசிரியர் சுந்தரம் பிள்ளை
எஸ். வையாபுரிப் பிள்ளை ... 14

நல்ல வேலை
ஆர். டி. ... 22

திருவலம் சுழி
''சாமி'' ... 26

எண்ணக் கடல்
''சுகி'' ... 30

சாவித்திரி
ஆர். ஷண்முகசுந்தரம் ... 34

புத்தக ஆராய்ச்சி
... ... 47

சிலப்பதிகாரம்
சர். சண்முகம் செட்டியார்... 48

கொடியும் பூவும்
கே. விஜயராகவன் ... 57

பழகிய பாசம்
ரா. நா ... 65

கலைக் கோயில்
சுத்தானந்த பாரதி ... 68

கிராமியக்காட்சி
''ரதி'' ... 80

கலாசாரம்
திருஞானம் ... 82

மலர் மணம்
... ... 86

LEASE-LEND RADIOS

ORDERS BOOKED NOW

FOR

ARRIVING Models of

★ R. C. A.

★ PHILIPS

★ WESTING HOUSE

199790

AT

GOVNT. CONTROLLED PRICES.

MARCONI VALVES

AND

SPARES IN STOCK

SRI RAMA VILAS SERVICE Ltd.,

202-203, MOUNT ROAD, MADRAS.

(Sole distributors for MARCONIPHONE radios for the MADRAS PRESIDENCY including states.)

Vasantham Novr. 43

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்
—கம்பர்

நாட்டின் பொதுக்கடன்

[சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்]

ஆறுமுகம் செட்டியார்: என்ன வேலுசாமி நாயுடு, நேற்று துரைசாமிக் கவுண்டர் இங்கே வந்தபோது, அவரைக் கண்டதும் நீங்கள் தலைமறைவாகப் போய் விட்டீர்களே? உங்களுக்கும் அவருக்கும் ஏதாவது விரோதம் ஏற்பட்டு விட்டதா?

வேலுசாமி நாயுடு: துரைசாமிக் கவுண்டருக்கும் எனக்கும் எந்த வித விரோதமும் இல்லை. பாங்கியிலிருந்து அவருக்கு ரூ. 5,000 கடன் கொடுத்திருக்கிறேன். மூணு வருஷமாக வட்டியும் கொடுக்கவில்லை; அசல் தொகையும் ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. எவ்வளவோ தடவை அவரைக் கேட்டும் பிரயோசனப் படவில்லை. இப்போது அவரைப் பார்ப்பதென்றால் எனக்கு வெட்கமாயிருக்கிறது.

செட்: நீங்கள் சொல்வது ரொம்பவும் வேடிக்கையாயிருக்கிறதே! கடன் வாங்கின ஆசாமி வெட்கப் படவேண்டியது சரி. அதல்லாமல் கடன் கொடுத்தவர் வெட்கப் படுவதென்றால்— பேஷ்! உங்கள் பதிலைக் கேட்டால் சிரிப்பு வருகிறது.

நாயு: என்னைப் போல் பணம் லேவாதேவி நீங்களும் செய்தால், பணத்தைக் கடன் கொடுப்பவர்களுடைய கஷ்டங்கள் உங்களுக்கும் தெரியும். கடன் வாங்கினவன் பயப்படும் காலம் மலையேறி விட்டது. கம்பர் இப்போது இராமாயணம் எழுதுவதாயிருந்தால், "கடன் கொடுத்தார் நெஞ்சம் போலும் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று பாட்டை எழுதியிருப்பார். கடன் பட்ட

ஆசாமிகள் அதிகாரம் செய்யும் நாளல்லவா இந்தக் காலம்!

சேட்: நீங்கள் சொல்வது ஒரு விதத்தில் வேடிக்கையா யிருந்த போதிலும், ரொம்பவும் அதில் உண்மை இருக்கிறது. உலகத்தில் பெரிய பெரிய நாட்டு சர்க்கார்களும் கூட கடன்காரர்கள் தான். அமெரிக்கா, இங்கிலாந்து இவைகளைப் போல செல்வாக்குப் படைத்த நாடுகளுக்குத்தான் கடன் அதிகம். இங்கிலாந்துக்கு இப்போது சுமார் 1500 கோடி பவுனுக்கு மேல் கடன் இருக்கிறது. யுத்தத்திற்காக இன்னும் கோடிக் கணக்காக கடன் வாங்கிக் கொண்டே யிருக்கிறார்கள்.

நாயு: இந்த விஷயத்தைப் பற்றி உங்களிடம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று எனக்கு வெகு நாளாய் எண்ணமுண்டு. நல்ல சந்தர்ப்பமும் இப்போது வாய்த்தது. சர்க்கார் செலவிற்காக குடிகளிடமிருந்து பல விதமான வரிகளை வசூல் செய்கிறார்களே, கடன் ஏன் வாங்க வேண்டும்? வரவுக்கு மீறி செலவு செய்து கடனாளியாவது யாராயிருந்தாலும் நியாயமா?

சேட்: சர்க்காரான போதிலும், குடிகளான போதிலும், எல்லோரும் வரவை அனுசரித்து செலவு செய்ய வேண்டியது தான் நியாயம் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியது தான். ஆனால் யாரும் கடனே வாங்கக் கூடாது என்று முடிவு கட்ட முடியாது. கடன் வாங்குவது சரியா இல்லையா என்பது, எதற்காகக் கடன் வாங்கப் பட்டது என்பதைப் பொருத்திருக்கிறது. ஒரு உதாரணம் சொல்லுகிறேன் கேளுங்கள். உங்களுடைய வரும்படி வருஷம் ஒன்றுக்கு 20,000 ரூபாய் என்று வைத்துக் கொள்வோம். உங்களுடைய சகல செலவுகளும் இதற்கு மேல் போகக் கூடாது. ஆனால் நீங்கள் செய்யும் வியாபாரத்திற்கு 50,000 ரூபாய் வேண்டியிருந்தால் கடன் வாங்கித்தான் தீரவேண்டும். அல்லது ஒரு நல்ல வயல் வாங்குவதற்கு 90,000 ரூபாய் வேண்டியிருந்தால் அதற்காக கடன் வாங்கலாம். இம்மாதிரி செலவுகளை வரும்படியிலிருந்து எடுக்க முடியாது. இது போலவே சர்க்காருக்கும் வரும்படியிலிருந்து எடுக்கக் கூடாத அநேக செலவுகள் இருக்கின்றன. மேட்டூர் அணைக்கட்டு, பைக்காரா மின்சார வேலை, ரயில் பாதைகள் போடுவது, சர்க்கார் கைத்தொழில் சாலைகள் ஏற்படுத்துவது — இவை போன்ற வேலைகளை சர்க்கார் வருஷா வருஷம் செய்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் கோடிக் கணக்காகப் பணம் தேவையாயிருக்கிறது. வரி மூலமாக வசூல் செய்யும் பணத்திலிருந்து இந்தச் செலவுகளைச் செய்ய வேண்டுமென்றால் இன்னும் ஏராளமான வரி போட வேண்டி வரும். ஆகையால் இம்மாதிரி செலவுகளுக்கு சர்க்கார் கடன் வாங்குவது வழக்கம். அணைக்கட்டுகள், ரயில்வே, பைக்காரா — இவைகளிலிருந்து வரும்படி வருமல்லவா? இந்த வரும்படியைக் கொண்டே கடனுக்கு வட்டி செலுத்துவது வழக்கம். இவ்வித கடன்களுக்கு **ஆதாயமுள்ள கடன்** என்று பெயர். இவ்விதமான செலவுகளுக்குக் கடன் வாங்குவதில் எவ்வித ஆட்சேபணையுமில்லை. இவ்விதமான செலவுகளைச் செய்வது மிகவும் அவசியம். ஏனென்றால் இவைகள் மூலமாகத்தான் ஒரு நாட்டின்

செல்வமும், வளப்பும் அதிகரிக்கும். மேட்டூர் அணைக்கட்டினால் லட்சக் கணக்கான ஏக்ரா பூமிகள் சாகுபடி செய்யப்படுகின்றன. பைக்காராத் திட்டத்தினால் எவ்வளவோ கைத்தொழில்சாலைகள் தோன்றிவிட்டன. இவையெல்லாம் நம் நாட்டின் செல்வத்தை அதிகப் படுத்துமல்லவா?

நாயு: அப்படியானால் சர்க்கார் வாங்கும் கடன் எல்லாம் இம் மாதிரியான வேலைகளுக்குத் தானா?

சேட்: இல்லை, இல்லை. நான் சொல்ல வந்த விஷயத்தை இன்னும் முடிக்கவில்லை. சர்க்கார் கடன் படுவதற்கு வேறு இரண்டு காரணங்களும் உண்டு. (1) ஒரு நாடு யுத்தத்தில் தலையிட்டு விட்டால், யுத்த செலவிற்காக கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும். யுத்தச் செலவு முழுமையும் வரிப்பணத்திலிருந்து சரிப்படுத்த முடியாது. கடன் வாங்கித்தான் ஆக வேண்டும். (2) சில சமயங்களில் வரி வசூலுக்குமேல் சர்க்காருக்கு செலவு ஏற்பட்டு விடும். நாட்டில் பஞ்சம் வெள்ளப் பிரவாகம் முதலிய கொடுமைகள் உண்டாகும் போது, வரி குறைந்து விடுவதல்லாமல் செலவு அதிகமாய் விடும். இம்மாதிரி வரவுக்கு மேல் செலவு ஏற்படும் வருஷங்களில் சர்க்கார் கடன் வாங்க நேரிடும். மேற் சொன்ன இரண்டு காரணங்களால் ஏற்படும் கடனுக்கு ஈடாக மூலதனமாவது ஆதாயமாவது இல்லையாகையால், இவைகளுக்கு வருஷா வருஷம் வசூல் செய்யும் வரிகளிலிருந்துதான் வட்டி கொடுக்க வேண்டும். இவ்விதமான கடனுக்கு ஆதாயமில்லாத கடன் என்று பெயர் கொடுக்கலாம்.

நாயு: அப்படியானால் ஒரு நாட்டின் கடன் நிலைமையைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் போது, அந்த நாட்டுக்கு மொத்தக் கடன் எவ்வளவென்று தெரிந்தால் மட்டும் போதாது. கடன் தொகையில் ஆதாயம் உள்ள கடன் எவ்வளவு ஆதாயமில்லாத கடன் எவ்வளவு என்று கணக்குத் தெரிய வேண்டும்.

சேட்: நீங்கள் சொல்வது சரியான பேச்சு.

நாயு: நல்லது. சர்க்கார் யாரிடமிருந்து இவ்வளவு கடனையும் வாங்குகிறார்கள்?

சேட்: அந்தந்த நாட்டின் ஜனங்களிடமிருந்தே தான் சாதாரணமாய்க் கடன் வாங்குகிறார்கள். இந்தக் கடனுக்கு உள் நாட்டுக் கடன் என்று பெயர். சில சமயங்களில் வெளி நாடுகளிலிருந்தும் வாங்குவதுண்டு. இதற்கு வெளி நாட்டுக் கடன் என்று பெயர். கடன் வாங்கும் முறையையும் சொல்லி விடுகிறேன். நம்முடைய இந்திய சர்க்காருக்கு 15 கோடி ரூபாய் தேவை என்று வைத்துக் கொள்வோம். நாட்டின் பண நிலைமையை உத்தேசித்து, என்ன வட்டி கொடுக்க வேண்டும் எத்தனை வருஷ வாய்தாப் போட வேண்டுமென்று முடிவு செய்து கொண்ட பிறகு பத்திரிகைகளில் இந்த விவரங்களை பிரசுரம் செய்வார்கள். "இந்திய சர்க்காருக்கு, 15 கோடி ரூபாய் கடன்; நூத்துக்கு 3 ரூ. வட்டி; 1953 — 1955 வருஷம்" என்று பிரசுரம் வந்தால் நம்முடைய சர்க்கார் 15 கோடி ரூபாய் கடன் ஜனங்களிடமிருந்து வாங்குகிறார்களென்றும், கடனுக்கு வருஷம் ஒன்றுக்கு

100க்கு 3 ரூபாய் விதம் வட்டி கொடுக்கப் படுமென்றும், கடனை 1953 வருஷத்திற்கு மேல் 1955 வருஷத்திற்குள்ளாக திருப்பிக் கொடுக்கப்படும் என்றும் அர்த்தம். குறித்த தேதியில் இஷ்டமுள்ளவர்கள் பாங்கிகளின் மூலம் விண்ணப்பம் கொடுத்து தங்களுக்குப் பிரியமான தொகையைச் செலுத்தலாம். அப்படிச் செலுத்தும் தொகைக்கு ஆதாரமாக ஒரு பத்திரம் கிடைக்கும். இதற்குத்தான் "சர்க்கார் பாண்டு" என்று பெயர். ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வட்டியை வாங்கிக் கொள்ளலாம். குறிப்பிட்ட தேதியில் அசல் தொகையும் வந்து விடும். சர்க்காரிடம் இம்மாதிரி கடனுகப் போட்டு வைக்கும் பணத்தைப் பற்றி கவலைப்பட வேண்டியதேயில்லை.

நாயு: வெளி நாட்டுக் கடன் என்று சொன்னீர்களே, எதற்காக வெளிநாடுகளில் கடன் ஒரு நாட்டுச் சர்க்கார் வாங்க வேண்டும்?

சேட்: நம்முடைய இந்திய சர்க்கார் அடிக்கடி இங்கிலாந்தில் ரயில்வே என்ஜின்கள், வண்டிகள், கைத்தொழில் இயந்திரங்கள் இவை போன்ற அநேக சாமான்களை வாங்குகிறார்கள். இங்கிலாந்தில் வாங்கும் சாமான்களுக்கு ஆங்கில நாணயமாக விலை கொடுக்க வேண்டும். இதற்காக இங்கிலாந்திலேயே ஜனங்களிடம் கடன் வாங்குவது வழக்கம். இங்கிலாந்தில் நம் சர்க்கார் வாங்கும் கடனுக்கு ஸ்டர்லிங் கடன் என்று சொல்வது. ஏனென்றால் நம்முடைய நாணயத்தை நாம் எப்படி ரூபாய் என்று சொல்லுகிறோமோ அது போல் இங்கிலாந்திலுள்ள நாணயத்திற்கு ஸ்டர்லிங் என்று பெயர். உள்நாட்டிலோ அல்லது வெளி நாட்டிலோ ஒரு அரசாங்கத்தார் வாங்கும் கடன்களுக்குப் பொதுவாக நாட்டின் பொதுக் கடன் என்று சொல்லலாம்.

நாயு: இது வரையில் நாட்டின் பொதுக் கடனைப் பற்றி எல்லா நாடுகளுக்கும் உள்ள பொது விஷயங்களைச் சொன்னீர்கள். நம்முடைய இந்திய நாட்டின் பொதுக் கடனைப் பற்றி சற்று விவரமாகச் சொல்லுங்கள்.

சேட்: சொல்லுகிறேன். 1939ம் வருஷம் மார்ச் மாதத்தில் — அதாவது யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் — நம்முடைய நாட்டின் மொத்தக் கடன் 1,205 கோடி ரூபாய். இதில் உள்நாட்டுக் கடன் 736 கோடி ரூபாய். இங்கிலாந்தில் வாங்கிய கடன் 469 கோடி ரூபாய். சென்ற 4 வருஷங்களாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் யுத்தத்திற்காக இந்தியாவில் வாங்கின சாமான்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை ஸ்டர்லிங் நாணயமாகக் கொடுத்து வருகிறார்கள். இதைக் கொண்டு இங்கிலாந்தில் நாம் வாங்கியிருந்த கடனில் பெரும் பாகமும் திருப்பிக் கொடுத்தாகி விட்டது. இங்கிலாந்தில் நாம் பட்டிருந்த 469 கோடி ரூபாய் கடனில் 412 கோடி ரூபாய் கடனைத் தீர்த்தாய் விட்டது. இப்போது நாம் இங்கிலாந்துக்குக் கொடுக்க வேண்டியது 57 கோடி ரூபாய்தான். 1943ம் வருஷம் மார்ச் மாதத்திய கணக்குப்படி நம்முடைய நாட்டின் மொத்தக் கடன் 1368 கோடி ரூபாய். இதில் உள் நாட்டுக் கடன் 1311 கோடி ரூபாய்; இங்கிலாந்துக்கு கொடுக்க வேண்டியது 57 கோடி ரூபாய்.

நாயு: 1368 கோடி ரூபாய் கடனென்றால் பெரிய வேலையாயிருக்கிறதே? இதில் ஆதாயமுள்ள கடன் எவ்வளவு, ஆதாயமில்லாத கடன் எவ்வளவு?

சேட்: கடன் தொகை பெரிதாகத் தோன்றினாலும், பெரும்பாகமும் வரும்படியுள்ள கடன்தான். மொத்தக் கடனும் எப்படியிருக்கிறதென்றால்,

1:	ரயில்வேயில்	ரூ. 757	கோடி
2.	தபால், தந்தி இலாகா	ரூ. 33	,,
3.	மாகாண கவர்மெண்டுகளிடமிருந்து வர வேண்டியது	ரூ. 132	,,
4.	பர்மாவிலிருந்து வர வேண்டியது	ரூ. 48	,,
5.	ரொக்கம்	ரூ. 105	,,
	ஆக மொத்தம்	ரூ. 1075	,,

போக பாக்கி 293 கோடி ரூபாய் தான் ஆதாயமில்லாத கடன் என்று சொல்ல வேண்டும். மாகாண கவர்மெண்டுகளுக்கு கொடுத்திருக்கும் கடன்கள் அணைக்கட்டுகள், ஏரிகள், எலக்டிரிக் வேலைகள் — இம்மாதிரியான வழிகளில் செலவாயிருக்கின்றன. ஆகையினால் நம் நாட்டின் கடனின் மொத்தத் தொகையைக் கேட்டு மலைக்கக் கூடாது.

நாயு: இவ்வளவு கடனுக்கும் வருஷா வருஷம் வட்டியே ஏராளமாய்க் கொடுக்க வேண்டுமே?

சேட்: கடன் தொகை பூராவுக்கும் வருஷம் ஒன்றுக்கு 40 கோடி ரூபாய் வட்டி ஏற்படுகிறது. ஆனால் ரயில்வே இலாக்கா, தபால் இலாக்கா இவைகளெல்லாம் அந்தந்த இலாக்காவுக்கு வாங்கிய கடன்களுக்கு வட்டியை அந்தந்த இலாக்கா வரும்படியிலிருந்து கொடுத்து விடுகின்றன. 33 கோடி ரூபாய் வட்டி இவ்விதம் வசூல் ஆகி விடுகிறது. வரி வசூலிலிருந்து நம்முடைய இந்திய சர்க்கார் வட்டி கொடுப்பது வருஷம் ஒன்றுக்கு 7 கோடி ரூபாய்தான். நம்முடைய நாட்டின் கடன் நிலைமையை இவ்விதம் ஆராய்ச்சி செய்து பார்க்கும் போது, நம் நாட்டின் பொருளாதார நிலைமை ரொம்பவும் சிலாக்கியமானதென்றே சொல்ல வேண்டும்.

★

ஆசிரியர் சுந்தரம் பிள்ளை

ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை பி. ஏ., பி. எல்.
(தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்; சென்னை பல்கலைக் கழகம்)

மனோன்மணீயம் என்னும் தமிழ் நாடகநூலை அறியாதவர்கள் இல்லை. இதில்வரும் தமிழ்த் தெய்வ வணக்கம் தமிழர்கள் அனைவரும் போற்றுவது. இதுதான் நமது மொழியை ஒரு தெய்வமாக்கி ஒரு புதுச்சமயத்தை முதன் முதலில் வகுத்துத் தந்தது. புதிதாய்த் தோன்றிய வழிபாட்டிலே தமிழ்மக்கள் ஒருமுகமாய் உழைத்து ஈடுபடுவாராயின் தங்களிடையிலுள்ள சாதிச் சச்சரவுகள் எல்லாம் ஒழிந்து ஒற்றுமையோடு இன்புற்று வாழ்வர் என்பது திண்ணம்.

மேலும் இந்நாடகந்தான் சில நூற்றுண்டுகளாக மறைந்திருந்த காதல் லட்சியத்தை மீண்டும் நம் மனக்கண் முன் கொண்டு வந்து காட்டி நமது சமுதாய வாழ்விற்குப் புதிய நெறியொன்றை உதவியது. இந்த லட்சியத்தை இந்நூலில் காண்பது போல் தமிழ் இலக்கியத்தில் வேறெவ்விடத்தும் காணமுடியாது.

துன்பே நிறையும் மன்பே ருலகாம்
எரியுங் கானல் விரியும் பாலையில்
திரியும் மனிதர் நெஞ்சம் சிறிது
தங்கி அங்கு அவர் அங்கம் குளிரத்
தாருவாய்த் தழைத்தும்; ஓயாத் தொழிலில்
நேருந் தாகம் நீக்குவான் நிமல
ஊற்று யிருந்து அவர் உள்ளம் ஆற்றியும்
ஆறலைக் கள்வர் அறுபகை மீறில்
உறுதுணையாய் அவர் நெறிமுறை காத்தும்,
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்
ஊன்று கோலாய் அவருக்கம் உயர்த்தியும்,
இவ்விதம் யாரையும் செவ்விதிற் படுத்தி,
இகத்துள சுகத்திற்கு அளவு கோலாகி,
பரத்துள சுகத்தை வரித்த சித்திரமாய்,
இல்லறம் என்பதன் நல்லுயிரே யாய்,
நின்ற காதலின் நிலைமை, நினையில்,
இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மைபோல்,
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றும் தன்மை அன்றி, ஒருவரால்
ஆக்கப் படும் பொருள் ஆமோ? (I, iv, 85—104)

இக்காதற்குரிய பெண்களை மிருகப் பிராயமாய் நடத்தி வந்தோம். இது தமிழ் சமுதாயத்திற்கே ஒரு வசை. இவ்வசையை நீக்கிப் பெண்

களுக்குரிய ஸ்தானத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதைக் குறிப்பது கீழ்வரும் பகுதி :

இயக்கமும் மயக்கமும் செறிவது அரிவையர்,
உள்ளப் பரப்பில் ஒருபுறத் தன்றி,
பள்ளத் தாழ்ச்சியிற் பரிவும், கொள்கை
விள்ளா முரணும், மெய்மையில் தெளிவும்,
உள்ளார். அவர்தம் உறுதிநீ உணராய்...
மாசிலா வையகத்து இவ்வுயிர் வாழ்க்கை
ஆம் பெருங் கடலுள் போம் மரக்கலனும்
ஆடவர் நெஞ்சம், அறத்துறை அகன்று
நீள்திசை சுழற்றும் நிலையிலாக் காற்றும்
நிண்ணயம் அற்ற எண்ணம் இயக்கச்
சென்றுழிச் சென்று நன்றறிவு இன்றி
அலையா வண்ணம் அறத்துறைக் குடாவில்
நிலைபெற நிறுத்து நங்கூரமாய், பின்னும்
செய்வினை முயற்சியிற் பொய்வகைப் புன்னெறிக்கு
எற்றுண்டு அகன்று பற்றென்று இன்றி
ஆசையாம் திசைதொறும் அலைந்து திரிந்து
கெடாவணங் கடாவிக் கெழுமிய அன்புசேர்
அறப்பிடி கடைப்பிடி யாகக் காட்டிச்
சிறப்புயர் சுகத்துறை சேர்த்து சுக்கானய்
நின்றது மங்கையர் நிலைமை............
அன்பும்நற் குணமு முளார் இல் துணைவ ராயின்
இல்ல தென் உலகில்? இவற்றுடன் கல்விசேர்
நல்லறிவு உளதேல் பொன்மலர் நாற்றம்
பெற்றவா றன்றே? எற்றே மடமை!
கேட்டிட வேட்டவை யாவையும் ஈயும்
கற்பக தருவென அற்பமும் கருதாது
அடியுடன் முறித்து முடிபுற எரித்துக்
கரிபெற முயன்ற கம்மியனே என,
தனக்கென வாழும் தனி மிருகத்தின்
மனக்கோள் நிமிர்த்து மற்றையர் இன்பமும்
துன்பமும் தனதா அன்பு பாராட்ட,
மெள்ள மெள்ளத் தன் உள்ளம் விரித்துப்
பொறையும் சாந்தியும் படிப்படி புகட்டிச்
சிறிது சிறிதுதன் சித்தம் தெளித்துத்
தானெனும் நினைப்பும் தனக்கெனும் இச்சையும்
ஓய்வுறச் செய்து மற்றென்றுய் நின்ற
எங்கும் நிறைந்த பேரின்ப வெள்ளம்

மூங்கி அதனுள் மூழ்கிட யாரையும்
பக்குவம் செய்யும் நற்பள்ளிச் சாலை, இவ்
இல்லறம் எவ்பதோர் நல்லுணர் வின்றி ...
கெடுத்திடும் மாந்தரின் கெடுமதி என்னே! (II, ii 125, முதல்)

இவற்றிற்கெல்லாம் அடிப்படையாய் விளங்குவது தேசபக்தியும் சுதந்திர தாகமும். இவற்றையும் முதன் முதலாகத் தமிழ் நாட்டில் விதைத்தது இந்நாடகமே யாகும்.

கேட்பீர் ஒரு சொல்! கிளர்போர்க் கோலம்
நோக்கியாம் மகிழ்ந்தோம். நுமது பாக்கியமே
பாக்கியம். ஆ! ஆ! யார்க்கு இது வாய்க்கும்?
யாக்கையின் அரும் பயன் வாய்த்ததிங் குமக்கே
தாயினும் சிறந்த தயை பூண்டிருந்ததும்
தேயமாந் தேவிக்குத் தீவினை யிழைக்கத்
துணிந்த இவ் வஞ்சரை யெணுந்தொறும் எணுந்தொறும்...
களங்கமில் நும்முகம் காட்டும் இச்சினத்தீ
கண்டு அப்பாண்டியே கொண்டனள் உவகை.
ஒரு துளியேனும் நீர் உண்டுளீ ராயின்
கருதுவீர் தாம்பிர பன்னியின் கட்டுரை.
மக்காள்! அருந்தி வளர் மின்! நுமக்கு
மிக்கோ ரில்லா வீரமாய்ப் பரந்து
முது சுதந்ரத்தின் முத்திரையாகி
இது பரிணமித்து உம்இதயத்து உறைக!
அன்னியன் கைப்படா இந்நீர் கற்பிற்கு
இழிவுறின் மார்பினின்று இதுவே சோரியாய்ப்
பொழிக நீர் பொன்றிடும் அளவும்!' என்றன்றே
வாழ்த்தி நுந்தமை வளர்த்தினள் — அவளுரை
தாழ்த்தாது இவண்நீர் போர்த்த போர்க்கோலம்
பார்த்தால் ஆர்த்து அவள் வாழ்த்தாது என்செய்வள்
பழையோர் பெருமையும் கிழமையும் கீர்த்தியும்
மன்னிய அன்பினும் அன்னையர் பாடி
நித்திரை வரும்வகை யொத்தறுத்து உமது
தொட்டில் தாலாட்ட, அவ் இட்டமாம் முன்னோர்
தீரமும் செய்கையும் வீரமும் பரிவும்
எண்ணி யிருகணும் கண்ணீர் நிறையக்
கண் துயிலாது நீர் கனிவுடன் கேட்ட
வண்தமிழ் மொழியால் மறித்து இக்காலம்
ஆற்றிலம்; ஆண்மையும் உரிமையும் ஒருங்கே
தோற்றனம் எனச் சொலத் துணிபவர் யாவர்!
உரிமைமேல் ஆண்மை பாராட்டார் சாந்தம்,

பெருமையில் பிணத்திற் பிறந்ததோர் சீதம்.
அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னினும்
நாட்டு அபிமானம் உள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க்கு என்றுமே உவப்பு!
போர்க்குறிக் காயமே புகழின் காயம்.
யார்க்கு அது வாய்க்கும்! ஆ! ஆ! நோக்குமின்!
அனந்தந் தலைமுறை வருந்தனி மாக்கள்,
தினந்தினம் தாம் அனுபவிக்கும் சுதந்தரம்
தந்ததம் முன்னோர் நொந்தபுண் எண்ணிச்
சிந்தை யன்பு உருகிச் சிந்துவர் கண்ணீர்,
புண்ணோ? புகழின் கண்ணே. எவரே
புண்படாது உலகிற் புகழுடம்பு அடைந்தார்?
புகழுடம்பு அன்றி இவ் இகழுடம்போ மெய்? (iv, i, 79 முதல்

இங்ஙனமாகத் தமிழ்த் தெய்வ பக்தி, காதற் பெருமை, மகளிர் மாண்பு, நாட்டுப் பற்று, சுதந்திரவுணர்ச்சி என்பனவற்றைத் தமிழ் மக்களுக்கு உணர்த்தும் இந்த அரிய நாடகத்தை இயற்றிய தமிழ்ப் பெரியார் யார்?

ஆசிரியர் சுந்தரம் பிள்ளையே.

இவர் பிறந்தது ஆலப்புழையில் 1855-ம் வருஷம் ஏப்ரில் 4-ம் தேதியில். இறந்தது 1897-ம் வருஷம் ஏப்ரில் 25-ம் தேதி; திருவனந்தபுரத்தில். 42 ஆண்டுகளே உயிர் வாழ்ந்தார்.

1871-ல் மெட்றிக்குலேஷன் பரீக்ஷையிலும் 1873-ல் எப். ஏ. பரீட்சையிலும் 1876-ல் பீ. ஏ. பரீட்சையிலும் தேறிப் பட்டம் பெற்றார். 1880ல் தத்துவ சாஸ்திரத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றனர். இதனால் இவரை எம். ஏ சுந்தரம் பிள்ளையென்று குறிப்பது வழக்கமாயிருந்தது. திருவனந்தபுரம் அரசாங்கத்தில் பிறவகை சிரஸ்தாராக இருந்த சில காலம் தவிர, தமது ஆயுள் முழுதும் அந்நகரிலுள்ள மகாராஜா கல்லூரியில் ஆசிரியராகவே விளங்கினர். இவர் வாழ்ந்த சிறிய கால அளவையில் எவ்வளவு அரிய செயல்களைச் செய்திருக்கிறார் என்று நினைக்கும் தோறும் நமது மனம் பக்தியால் கனிவுறுகின்றது.

பூர்வ சரித்திர ஆசிரியராக இவர் தொடக்கத்தில் நியமனம் பெற்றார். அச் சரித்திரங்களைப் பயிற்றுவித்து வரும்போது தமது நாட்டின் பூர்வ சரித்திரத்தையும் ஆராய வேண்டுமென்று ஓர் அவா இவருக்கு உண்டாயிற்று. திருவிதாங்கூர்ப் பூர்வ அரசியல் வரலாறுகளைப் பற்றி நன்றாக ஆராய்ந்து ஒரு நூல் எழுதினர். இது அந் நாட்டுச் சரித்திரத்திற்கு முக்கிய ஆதாரங்களுள் ஒன்றாக இன்றும் விளங்குகின்றது. இந் நூலின் பொருட்டு, திருவிதாங்கூர் மகாராஜா அவர்கள் இவர் குடும்பத்தினர்கட்குப் பரம்பரையாக மாதந்தோறும் ஒரு நன்கொடைத் தொகை அளித்து வர ஏற்பாடு செய்துள்ளார்கள். இது இச் சரித்திர நூலின் பெருமையை நன்கு விளக்குகிறது.

இந்நூலை இயற்றிவருங் காலத்துத் திருவிதாங்கூரிலுள்ள சிலா சாஸனங்களைப் பரிசோதிக்க வேண்டுவது அவசியமாய் முடிந்தது. ஆனல் அச் சாஸனங்கள் படியெடுக்கப் பெருததனுலேயும் அச்சில் வெளியிடப் பெருமையினுலேயும் பெரிதும் வருந்தி யுழைக்க வேண்டிய தாயிற்று. தாமே பல இடங்களுக்குச் சென்று சிலாசாஸனங்களைக் கண்டு பிடித்துப் படியெடுக்கும்படி நேர்ந்தது. இவ் விடர்ப்பாடுகளை யெல்லாம் திருவிதாங்கூர் அரசாங்கத்தினர்க்கு அறிவித்து அந்நாட்டில் ஒரு சிலாசாஸன இலாகா நிறுவி, அதில் தாமே கௌரவ தலைவராக இருந்து பல அரிய சாஸனங்களை வெளியிட்டுச் சரித்திர வளர்ச்சி பெருகும்படிச் செய்தனர்.

சரித்திர உணர்ச்சியைக் காட்டிலும், உண்மையான விஞ்ஞான உணர்ச்சி அதிகமாகக் குன்றி யிருப்பதை அனுபவ வாயிலாகத் தெரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பு சுந்தரம் பிள்ளைக்குக் கிடைத்தது. தமது கலாசாலையில் தத்துவ போதகாசிரியராயிருந்த டாக்டர் ஹார்வி இங்கிலாந்துக்குச் சென்று விட்டார். உடனே இவரே தத்துவ ஆசிரியராக நியமனம் பெற்று அதைப் பேரார்வத்துடன் கற்பித்து வந்தனர்.

இந்த சாஸ்திரத்தை நன்குணர வேண்டுமாயின் மேலை நாட்டு விஞ்ஞான அறிவினும், நமது நாட்டுத் தத்துவ ஞானத்தில் நல்ல பயிற்சியும் வேண்டுமென்பது விரைவிற் புலப்பட்டது. இவ்விருவகை அறிவும் பொது மக்களிடையே நன்கு பரவ வேண்டும் என்பதையும் சுந்தரம் பிள்ளை எளிதிற் கண்டார். அறிவு வளர்ச்சியின் பொருட்டுத் திருவிதாங்கூர் அரசாங்கத்தினரைப் பொதுப் பிரசங்க ஸ்தாபனம் ஒன்று நிறுவப் பண்ணி, அதில் தாம் அடிக்கடி சாஸ்திரப் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தி வந்தார். தத்துவ சாஸ்திரத்தில் விஞ்ஞான சாஸ்திரப் பாகுபாடு (Classification of Sciences) என்ற பொருள் பற்றி அரிய நூலொன்று 'நூற்றொகை விளக்கம்' என்ற பெயருடன் வெளி வருதற்கு இந்தப் பொதுப் பிரசங்கங்கள் காரணமாயிருந்தன. அயலிடங்களிலிருந்தும் அறிவிற் சிறந்த பிரமுகர்களைக் கொண்டு பல அரிய பிரசங்கங்கள் நிகழ்த்தி வந்தனர். இவரது ஊக்கத்தால் உண்மையான விஞ்ஞான உணர்ச்சியும் தத்துவ நூல் உணர்ச்சியும் நமது தமிழ் நாட்டில் தோன்றத் தொடங்கின.

இந் நுட்பப் பொருள்களை எவ்வளவு ஆர்வத்துடன் போதித்து வந்தனரோ அவ்வளவு ஆர்வத்துடன் கற்றும் வந்தனர்! இப்பேராசிரியர் ஒரு குருவை யடுத்துக் கற்பதை இழிவெனக் கருத வில்லை. 'கல்வி கரையில' என்பதை உள்ளபடி உணர்ந்தவரல்லவா? கோடக நல்லூர் சுந்தர சுவாமிகளைக் குருவாகக் கொண்டு வேதாந்த ரகசியங்களை அறிந்து வந்தனர். இந்த சுவாமிகளை எவ்வளவு அந்தரங்க பக்தியுடன் போற்றியிருக்கிறார் என்பதைக் கீழ் வரும் பகுதி நன்கு தெரிவிக்கின்றது :

* * *

முனிவரர் என்றிடில் கனிவுறும் கல்லும்
சுந்தர முனிவன் சிந்துர அடியும்
வாரிசம் போல மலர்ந்த வதனமும்

கருணை அலையெறிந் தொழுகுங் கண்ணும்
பரிவுடன் முகிழ்க்கும் முறுவலும் பால்போல்
நரைதரு தலையும் புரையறும் உரையும்
சாந்தமும் தயையும் தங்கிய உடலும்
எண்ணுந் தோறும் குதித்து
நண்ணும் என்னுளம் மன்னிய தவத்தே. (I, ii, 89 முதல்)

நூற்றிரட்டை விளக்கத்திலுள்ள முக்கியமான ஒரு பகுதியைக் குறித்து இங்கே குறிப்பிட வேண்டுவது அவசியம். 'கலைச் சொல்லாக்கம்' என்ற தொடர் இப்பொழுது எங்கும் முழங்குகிறது. மாநாடுகள் கூட்டப் படுகின்றன. சாதிச் சச்சரவுகளை விளைத்துத் தமது ஆத்திரங்களைத் தீர்த்துக் கொள்ள இதுவே தக்க தருணம் என்று பலரும் இதில் சேர்ந்துள்ளார்கள்; பலவகை முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் சுந்தரம் பிள்ளை கைக் கொண்டுள்ள சிறந்த முறை நமக்கு ஊக்கம் அளிக்கிறது. நூற்றிரட்டை விளக்கத்திலே ஆங்கிலத்திலுள்ள பல விஞ்ஞானச் சொற்களுக்குரிய மொழிபெயர்ப்புச் சொற்களை இப்பேராசிரியர் தந்திருக்கின்றனர். வட சொற்களை விலக்கும் முயற்சியே இதில் கிடையாது. அறிவுப் பெருக்கம் ஒன்றே குறிக் கொள்ளப் பட்டது. இதற்கு இடையூறு விளைப்பன வெல்லாம் தற்கொலையாகும் என்பது நன்கு கடைப்பிடிக்கப் பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் மக்களது அறிவு வளர்ச்சிக்கும் வேண்டுவன செய்தவர்களில் சுந்தரம் பிள்ளை தலைசிறந்தவர். இவர் காட்டிய முறை கைக் கொள்ளத் தக்கதென்பது கூறவும் வேண்டுமோ?

தத்துவ நூல் மூலமாக அறிவு வளர்ச்சிக்கு முயன்று வந்தது போலவே, தமிழ் வளர்ச்சிக்கும் இவர் பெரிதும் உழைத்து வந்தனர். இவரது தமிழார்வம் இவரோடு உடன் பிறந்ததென்று சொல்லலாம். இளமையிலேயே தமிழ் நன்கு கற்றவர். இவரது முன்னோர்கள் மதுரைப் பிரதேசத்திலிருந்து வியாபாரத்தின் பொருட்டு மலையாளப் பிரதேசத்திற்குச் சென்றவர்கள். பரஞ்சோதி முனிவரது திருவிளையாடற் புராணத்தை இளமையிலேயே ஆர்வத்துடன் கற்றுத் தமிழ்ச் சுவையை நன்கறிந்தவர். தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இவர் ஈடுபட்டது சிறிதும் வியப்பன்று.

இவரது உள்ளத்தைப் பெரிதும் வருத்தியது ஒன்று உண்டு. அது தமிழிலக்கியப் பரப்பில் நாடகம் யாதொன்றும் காணப் பெறுமையே. ஷேக்ஸ்பியர் முதலிய பெருங் கவிஞர்கள் தமது ஒப்பற்ற கவித்வ சக்தியை நாடக ரூபத்தில் வெளியிட்டுள்ளார்கள் அல்லவா? அவ்வகையான நாடகம் தமிழில் வரவேண்டுமாயின், தாம் அம்முறையைத் தமிழுலகிற்கு ஒருவாறு தெரிவித்தல் வேண்டும் என்னும் கருத்து நனவினும் கனவினும் இவரை வருத்தி வந்தது. இதன் விளைவாகத்தான் 'மனோன்மணீயம்' என்ற நாடகம் இவரால் இயற்றப் பட்டது. இந்த நாடகம் இப்பொழுது உயர்ந்த தமிழிலக்கியமாகி (Classic) விட்டது. இதில் தமிழ்ச் சுவையும் கவிச்சுவையும் நாடகச் சுவையும் ஒருங்கு கலந்து தித்திக்கிறது. இலக்கிய இன்பம் இத்தன்மைத்து என்பதை நாம் நுகர்ந்து மகிழச் செய்கிறது. இதிலே வந்துள்ள 'சிவகாமி சரிதம்'

தனிப்பட எடுத்துப் பாராட்டும் தகுதி வாய்ந்தது. ஆங்கிலக் கவிஞர் களின் கருத்துக்கள் மிக அழகாக அமைக்கப் பட்டிருக்கின்றன. பாத் திரங்கள் ஒருவரோடொருவர் உரையாடும் இனிமையும் நயமும் பெருஞ் சிறப்பு வாய்ந்தன. இந்நாடகத்தின் மதிப்புரை யொன்று கிறிஸ்தவக் கலாசாலைப் பத்திரிகையில் (X 148) கமலாம்பாள் ஆசிரியராகிய ராஜ மையர் எழுதியது இங்கே குறிப்பிடத் தக்கது. தமிழும் ஆங்கிலமும் கலந்து பெற்ற அரும் பெறல் மகவு என்று சொல்லலாம் இந்நாடகத்தை. இன்றுவரை இதனோடு ஒத்த சிறப்புடைய நாடகம் தமிழில் பிறி தொன்று தோன்றியதில்லை.

தமிழிலக்கிய வளர்சியைப் பேணி வந்தமை போலவே, இவர் பண் டைத் தமிழிலக்கியச் சுவையையும் பேணினர். பலரும் இச்சுவையை அனுபவித்துத் தமிழின் பெருமையை உணரவேண்டுமெனச் சுந்தரம் பிள்ளை கருதினர். தமிழ் மக்கள் மட்டும் அன்றிப் பிறநாட்டு மக்களும் இந்நுகர்ச்சிப் பயனைப் பெறவேண்டு மென்று விரும்பினர். இக்கருத் திற்கேற்ப பண்டை இலக்கியங்களில் பெருஞ்சுவையுள்ளனவற்றைத் தெரிந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டனர். இவை சென்னை கிறிஸ்தவ கலாசாலைப் பத்திரிகையில் முதன் முதல் வெளி வந் தன. பின்னர் 'தமிழ்ப்புராதன கலைஞன்' (Tamilian Antiquary) என்ற தொகுதியின் வாயிலாக வெளியிடப் பெற்றன. முருகாற்றுப் படை, நெடுநல் வாடை, மதுரைக் காஞ்சி இம்மூன்றும் இங்ஙனம் சுவைபட மொழி பெயர்க்கப் பட்டன. இவற்றால் சுந்தரம் பிள்ளையின் ஆழ்ந்த தமிழ்க் கல்வியும் கவிச் சுவையின் நயத்தையுணரும் பேராற்றலும், அதனைக் கற்போர் மனங் கொள்ளுமாறு ஆங்கிலத்தில் அழகுற விளக் கும் எழுத்து வன்மையும் மிக நன்றாகப் புலப் படுகின்றன. இம் மொழி பெயர்ப்புக்கள் மூலநூல்களைக்கற்று இன்பந் துய்க்கும்படித் தூண்ட வல்லன வாகும்.

தமிழிலக்கியப் பரப்பினையும் அதன் வரலாற்றினையும் சுந்தரம்பிள்ளை யின் காலத்தவர் நன்குணர்ந்தனரில்லை. ஒரு சில ஆங்கில ஆசிரியர்கள், தமது கொள்கைகளுக் கேற்ப, இவ்வரலாறுகளைத் திரித்துணர்ந்து நூல் கள் எழுதி வந்தனர். தமிழ் — இலக்கியங்களே கி. பி 9-ம் நூற்றாண்டில் தான் தோன்றத் தொடங்கின என்று ஒரு சிலர் துணிந்தனர். நாயன் மார்களும் ஆழ்வாராதியர்களும் ஸ்ரீ ராமாநுஜருக்குப் பின்பு வாழ்ந்த வர்கள் எனக் கதை எழுதினர் ஒரு சிலர். இவர்கள் ஒருபுறமிருக்க, நமது நாட்டிலுள்ள ஒருசிலர் கிருதயுகம் முதலியவற்றில் இன்னார் இருந்தனர் எனவும் தொல்காப்பியர் கி. மு. 10,000–ல் வாழ்ந்தன ரென்றும் இங்ஙனம் காலவரையறை செய்து வந்தனர். சரித்திர முறை யில் சான்றுகளைக் கொண்டு இலக்கிய வரலாற்றை நிர்ணயிப்பது அவசிய மாய் முடிந்தது. இந்த வேலையிலும் முதன் முதலாக முனைந்து உழைத் தவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையே. தமிழிலக்கிய வரலாற்றுப் பெருவழியில் சில மைல் கற்களை நடுவித்தவர் இவரே. ஞான சம்பந்த சுவாமிகளின் காலத்தை நிர்ணயிப்பதற்கு எடுத்துக் கொண்டு, இலக்கியச் சான்றுகளாலும் சரித்திரச் சான்றுகளாலும் கி. பி–7ம் நூற்றாண்டின் முற்பகுதியென அக்காலத்தை வரையறுத் தனர். இவரது மரணத்திற்குப் பின் கிடைத்த கல் வெட்டினால் இவர் குறித்த காலம் பெரும்பாலும் சரியென உறுதியடைந்தது. இவரது சரித்திர ஆராய்ச்சியின் பெருமைக்கு இது ஒரு தக்க சான்றாகும்.

தமிழ் இலக்கிய வரலாறு ஒன்று எழுத வேண்டுமென்று இவர் மனத்தில் தோன்றியது. இதற்குரிய கருவிகளைச் சேர்ப்பதிலும் ஆங்கிலத்திலுள்ள பல இலக்கிய வரலாறுகளைக் கற்பதிலும் பற்பல தமிழ் இலக்கியங்களின் காலங்களை வரையறுத்தற் குரிய சான்றுகளைத் தேடித் தொகுப்பதிலும் முயன்ற வண்ணமாயிருந்தார்.

இவற்றையெல்லாம் தமது ஆசிரிய வேலைக்குச் சிறிதும் பங்கம் வராதபடி செய்து வந்தார். கலாசாலையிலே இவரிடம் கற்ற மாணவர்களெல்லாம் இவரது அபூர்வமான போதனைத் திறமையைப் பற்றி மிகவும் புகழ்ந்து கொண்டாடக் கேள்வியுற்றிருக்கிறேன். எப்பொழுதும் புன்னகை ததும்பும் முகம்; எப்பொழுதும் இனிமையாய்ப் பேசுவார். அயலூர்களுக்கு இவர் சென்றால் அங்கெல்லாம் ஆங்கில அறிஞர்களும் சரித்திர அறிஞர்களும் தமிழறிஞர்களும் ஒன்று கூடி இவரோடு உரையாடவும் ஆராய்ச்சி செய்யவும் வந்து விடுவார்களாம். எவ்வளவு நுட்பமான விஷயமாயிருந்தாலும் தெளிவாகவும் ருசிகரமாகவும் எடுத்து விளக்கும் பேராற்றல் படைத்தவரென்று பலரும் சொல்லியிருக்கின்றனர்.

தாம் கடைசியாய் எடுத்துக் கொண்ட இலக்கிய வரலாறு முடியுமுன் இவர் நோய்வாய்ப் பட்டனர். உதகமண்டலம் சென்று சிலகாலம் வசித்துவர எண்ணினர். செல்லும் வழியில் திருக்குற்றாலத்தில் சிலநாட்கள் தங்கினர். அங்கே பிளவை கண்டது. தமது இருப்பிடமாகிய திருவனந்தபுரத்திற்கு மீண்டு வந்தனர். ஏற்கெனவே நீரிழிவு நோயுள்ளவராதலாலே பிளவைக்கு ரண சிகிச்சை செய்தது அபாயமாய் முடிந்தது.

சுந்தரம் பிள்ளை தமிழகத்துப் பெரியார்களுள் ஒருவர். அப்பெரியாரது ஞாபகச் சின்னம் நமது பல்கலைக் கழகங்களில் இல்லாதது தமிழ் மக்களாகிய நமக்கெல்லாம் பெருங் குறையே. இது ஒரு புறம் இருக்க. அவர் செய்து முடித்தற்குக் காலமில்லாது விடுத்த தொண்டுகளை நாம் முற்றுவிப்பதும் அவருடைய ஞாபகத்தைப் போற்றுதற் குரிய ஓர் அறிகுறியாகும். அவ்வழியில் உழைத்து வருதல் நமது கடமையாகும்.

நல்ல வேலை!

[ஆர். டி]

அது ஒரு சின்னக் கிராமம். கிராமத்தின் கோடியிலே ஒரு சிறு குடிசை இருந்தது. அந்தக் குடிசையிலே ஒரு கிழவன் வெகு காலமாக வாழ்ந்து வந்தான். ஆம், வெகு காலமாகத்தான்! அவனுடைய வெண்மையான தாடியும், கூனிக் குறுகிய முதுகும், சுருக்கம் விழுந்த அவயவங்களும், ஆழ்ந்த பார்வையும் சேர்ந்து, பார்ப்போருக்கு அவனைத் 'தாத்தா' வென்று அழைக்கத் தோன்றும். ஊரிலுள்ள 'தாத்தா'க்களுக்கெல்லாம் தாத்தாவாக விளங்கினான் அவன்.

அவனுக்குச் சொந்தமான 'கையகல' நிலம், குடிசைக்குப் பின்புறத்தில் இருந்தது. அங்கு ஒரு மாமரம் செழிப்புடன் வளர்ந்து நின்றது. அம் மரத்தின் இளந் தளிர்களும், பிஞ்சும் கனியும் சதா காற்றில் குலுங்கிக் கொண்டு காண்பதற்கு ஒரே ஆனந்த மயமாக இருந்தது. அந்த மாமரத்திடம் கிழவன் உயிராக இருந்தான். தன் ஆசை அனைத்தையும் அதிலேயே செலுத்தி அன்பு நீர் பாய்ச்சினான். அம் மரமும் குடை போன்று குடிசைக்கு மேல் கவிழ்ந்து, அவனுக்கு நிழல் தந்து கொண்டிருந்தது.

கிழவன் அந்த மரத்திடம் அன்பு வைத்திருந்தது போல, தான் வளர்த்து வரும் நல்ல நாயிடமும் ஆசை வைத்திருந்தான். வயிற்றுப் பாட்டுக்காகப் பிச்சை யெடுக்கத் தான் வெளியே செல்லும் போது, அந்த நாயை மாமரத்தின் கீழே கட்டி விட்டுப் போவான். துஷ்டப் பையன்கள் திருட்டுத் தனமாகப் பழம் பறிக்க வந்து, தொல்லை கொடுப்பதைத் தடுத்து மிரட்டவே, அந்த வழியைக் கையாண்டான். ஆனாலும் 'மாம்பழத் திருடர்' தொல்லை இருந்து கொண்டுதான் இருந்தது!

இருந்தாற் போலிருந்து அந்த வட்டாரத்திலே பஞ்சம் ஏற்பட்டது. எங்கும் துன்பமும் துயரமும் குடி கொண்டது. மக்களின் உள்ளத்திலிருந்து மகிழ்ச்சி மறைந்தது. ஆனந்தக் கண்ணீருக்குப் பதில் சோகத் துளிகளே சிந்தின. நெல் நிறைந்த களங்களிலே புல் மூண்டது.

கிழவன் தன் குடிசையிலே படுத்து அரைத் தூக்கத்திலிருந்தான். அப்போது வெளியிலே சூழ்ந்த அந்தகாரத்தைக் கிழித்துக் கொண்டு ஒரு குரல் கேட்டது: "ஐயோ உயிர் போகிறதே. நிக்க முடியலையே. குடிசைக் கதவு திறக்காது போனால் சாக வேண்டியது தான்."

சட்டெனக் கிழவன் கதவைத் திறந்தான். மிகுந்த பரிவுடன், "அப்பனே! நீ யாராயிருந்தாலும் உள்ளே வா; குளிரைப் போக்க முதலிலே இந்தக் கணப்புக்குப் பக்கத்திலே உட்கார்ந்து சற்று காய்ந்து கொள்ளப்பா" என்றான்.

புதிதாக வந்தவனும் கிழவனைப் போல, இல்லை, கிழவனை விட வயதானவனே. அவனுடைய துணிகளெல்லாம் ஒரே கந்தலாயிருந்தன. அவன் 'வெட வெட'

வென்று நடுங்கிக் கொண்டிருந்தான். கிழவன் அன்புடன், "நல்ல வேளை. கொஞ்சம் நெருப்பும், குச்சியும் இருந்தது. அதோடு இரண்டு வாழைப்பழம் கூட மிச்சம் இருக்கிறது. இதைச் சாப்பிடு; பசி தீர்த்துக் கொள்ளப்பா" என்று பழத்தை எடுத்து வந்து கொடுத்தான்.

அதே சமயம் தன் அருமை நாய், புதியவன் காலை நக்கிக் கொண்டிருப்பதைக் கிழவன் கண்டான். அவன் ஆச்சரியத்திற்கு அளவில்லை.

மறுநாள் காலை, புதியவன் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தான்.

"ரொம்ப சீக்கிரமாக என்னை விட்டுப் போகிறாயே?" என்று கேட்டான் பெரியவன்.

"ஆமாம்" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே புதியவன் சொல்லலானான்: "நீ நினைக்கிறபடி நான் ஒரு தரித்திரம் பிடித்தவன் அல்ல; நான் ஒரு சித்தன். ஆண்டவன் என்னைப் பூமிக்கு அனுப்பி வைத்தார். இந்த உலகத்திலே உண்மையான மனிதனைத் தேடிப் புறப்பட்டேன் நான். எங்கெங்கோ சுற்றினேன். ஏழை பணக்காரன், அரண்மனை அந்தப்புரம் எல்லாம் சென்றேன். ஆனால், யாரும் என்னை வரவேற்கவில்லை. நீ ஒருவனே, ஒண்டியாக இருக்கும் நீ ஒருவனே, அன்புடன் என்னை உள்ளே அழைத்தாய்; உன் நடத்தை என் மனசை அள்ளிக் கொண்டது. உனக்குத் தகுந்த வெகுமதி கிடைக்கும். கேள்; என்ன வேணுமானாலும் கேள். நீ கேட்டதெல்லாம் கிடைக்கும்."

வயோதிகன் அவருடைய பாதங்களிலே சிரம் வைத்து வணங்கினான். "என் ஐயனே, மன்னித்தருள வேண்டும்! குற்றம் குறை இருந்தால் பொருத்தருள வேண்டும். தாங்கள் மகானாயிருக்கக் கொண்டுதான் என் நாய் கூடத் தங்கள் பாதத்தைத் தடவிக் கொடுத்ததாக்கும்!"

"அது சரி. நீ இஷ்டப்பட்டதைக் கேளப்பா" என்றார் அந்த மகான்.

"எனக்கு வேண்டியது ஒன்றும் இல்லை. ஒன்றும் வேண்டாம்" என்றான் விருத்தன்.

"என்ன? ஒன்றுமே வேண்டாமா? இந்தத் துன்பமும் துக்கமும் தொலைய, நிறையப் பணம் வேண்டாமா? விசாலமான நிலங்கள் கூடவா வேண்டாம்? சொல்லு, நீ இஷ்டப் பட்டால் உன்னை ஒரு பணக்காரனாக, இல்லை, ஒரு அரசனாக வேண்டுமானாலும் ஆக்கி விடுகிறேன். நீ வாய் மூடி மௌனமாயிருந்தால், எனக்குப் பொல்லாத கோபம் வந்து விடுமாக்கும்! உன்னை ஒரு 'கர்வக்காரன்' என்று குற்றம் சாட்டவும் இட மேற்படும்."

"நீங்கள் இவ்வளவு தூரம் சொல்வதால், நானும் ஒன்று கேட்கிறேன்" என்று கிழவன் ஆரம்பித்தான்: "எனக்கு வேண்டிய வரம் இது தான். இந்த மா மரத்தில் யார் ஏறினாலும் அங்கேயே ஒட்டிக் கொண்டு விட வேண்டும். என் அனுமதி கிடைக்காத வரை அவர்கள் இப்படி அப்படி நகர முடியாமல் போக வேண்டும். இது ஒன்றே என் ஆசை!"

"அப்படியே ஆகுக" என அவர் கூறிப் பின் மறைந்து விட்டார்.

இதற்குப் பிறகு கிழவனுக்குச் சுக்கிரதசை அடிக்கத் தொடங்கி

யது. இப்போதெல்லாம் வெளியே போகும் போது நாயையும் தன்னேடேயே அழைத்துப் போகத் தலைப்பட்டான்.

வஸந்த காலம். கொத்துக் கொத்தாக மாங்கனிகள் பழுத்துத் தொங்கின. வழக்கப்படியே சிறுவர்கள் வந்தார்கள். ஆனல் அவர்கள் மரத்தைத் தொட்டதும் ஒட்டிக் கொண்டு விட்டார்கள்! வரம் பலனளிக்கத் தொடங்கி விட்டது!

"இனி இம்மாதிரி விஷமம் செய்யாதீர்கள். இப்போது போனல் போகிறது. நான் உங்களை விட்டு விடுகிறேன்" என்று பையன்களை இறக்கி விட்டுக் கொண்டிருந்தான். அந்த மரத் தடியிலே கூச்சலும் கொம்மாளமும் அடங்கியது. போக்கிரிப் பையன்கள் 'பாச்சா' ஒன்றும் பலிக்கவில்லை. அவர்கள் கொட்டம் அடங்கியது. இதன் பின் 'மாம்பழத் திருடர்' அந்தப் பக்கம் தலை காட்டுவதில்லை.!

ஒரு நாள், குடிசைக்கு வெளியே யிருந்து அவனை உரக்கக் கூப்பிட்டார்கள். நாய் கூடப் பயத்தால் அலறியது. கிழவனும் ரொம்ப அலண்டு போனன். வெளியில் தலையை எட்டிப் பார்த்தான். அங்கே மரணதேவன் தயாராகக் காத்திருந்தான்!

"நீங்கள் எங்கு வந்திருக்கிறீர்கள்?" என்று கிழவன் கேட்டான்.

"உன்னைப் பூலோகத்தி லிருந்து கூட்டிப் போக வந்திருக்கிறேன்."

"என்ன இப்போதேயா?"

"ஆமாம், உனக்கும் ரொம்ப வயதாகி விட்டதல்லவா? நீயும் கூனிக் குறுகி, மெலிந்து போனய். அதோடு பரம ஏழை......"

"இல்லை, இல்லை. அப்படி யொன்றும் ஏழை யல்ல, ஸ்வாமி; அப்படி ஒன்றும் வயதும் ஆகி விட வில்லை. போன வருஷப் பிறப்பின் போது தொண்ணூற்று ஒன்பது என நினைக்கிறேன். நீங்கள் சொல்லுகிறபடி அப்படி ஒன்றும் மெலிந்தும் போகவில்லை."

"அது விஷயம் எப்படியோ இருக்கட்டும். என்னேடு புறப்படு. அங்கே ரொம்ப சௌகரிய மாயிருக்கலாம்" என்றுன் மரண தேவன்.

"சரி, ஆகட்டும். இதோ வருகிறேன். சுவாமி, ஒரு காரியம் எனக்காக நீங்கள் செய்ய வேண்டும். வருகிற வழியில் சாப்பிட்டுக் கொண்டு போக, என் உயிருக் குயிரான மாமரத்திலிருந்து இரண்டு பழம் பறித்துக் கொடுங்கள். உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு" என்றுன் கிழவன்.

மரணதேவன் 'சரி' யெனச் சம்மதித்து மரத்தில் ஏறினன். ஆனல், அடுத்த கணமே மரம் தன்னைப் பற்றிக் கொண்டதைக் கண்டான். "இதென்ன இழவு! இம்மியும் நகர முடியவில்லையே? கொஞ்சம் உதவிக்கு வாப்பா" என்று கதறினன் மரணதேவன்.

"நீ அங்கேயே நன்றுகத்தான் இருக்கிறய், அங்கேயே இரு; எனக்குச் சொர்க்கத்துக்குப் போக அவசரம் இல்லை!" என்று சொல்லி விட்டு, கிழவன் வேறு காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தான்.

இதற்குப் பின் வருஷங்கள் வந்து போய்க் கொண்டே இருந்தன. அந்தக் கிராமம், அக்கம் பக்கம் எங்கும் சாவே கிடையாது. பசியும் பட்டினியும், மக்களை மாய்க்க வில்லை! பெரிய பெரிய யுத்தங்கள் நடந்தாலும், படு காயப் பட்டார்களே தவிர, பிராணனை மட்டும் யாரும் இழக்க வில்லை; கண், காது, கால் என்ன போனாலும் உயிர் மட்டும் போக வில்லை. இதனால் பலருக்கு வெறுப்பு. ஆனாலும் என்ன செய்வார்கள்? சீவன் மட்டும், இந்தச் சடலத்தை விட்டுப் பிரிய வில்லை! இப்படிச் சென்றன பல வருஷங்கள்!

கடைசியாக மரணதேவன் இந்த மரத்தில் வந்து மாட்டிக் கொண்டிருக்கிற விஷயம் தெரிந்தது. பலர் கிழவனுடைய காலில் வந்து விழுந்து வணங்கினார்கள். "எங்களுக்கு வாழ்க்கை சலித்து விட்டது. கொஞ்சம் இங்கிருந்து தாட்டி விடப்பா" என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள்.

கிழவனுக்குத் தன்னால் நிகழ்ந்த இந்தப் 'பிரளயங்கள்' தெரிய வந்தது. அவன் மரணதேவனிடம், "நான் உன்னை விட்டு விடுகிறேன். ஆனால் நீ எனக்கு ஒரு வாக்கு அளிக்க வேண்டும்" என்றான்.

"சரி, சொல்லு" என்றான் மரணதேவன்.

"இஷ்டப் பட்ட போது தான் நானும், என் நாயும் வருவோம். அதுவும் நான் மூன்று தடவை உன்னைக் கூப்பிட்டால் தான் நீ இந்தப் பக்கம் கால் எடுத்து வைக்க வேண்டும்" என்றான் கிழவன்.

அதற்குப் பிறகு ஒவ்வொருவரையும், சுவர்க்கத்துக்கோ அல்லது நரகத்துக்கோ அனுப்ப வேண்டிய இடத்துக்கு அனுப்பி வைத்தான் மரணதேவன். ஆனால் கிழவனும் நாயும் தங்கள் தங்கள் வாழ்க்கையிலே திருப்திப் பட்டு, பின்னும் உயிருடன்தான் இருந்து கொண்டிருந்தார்கள்! அந்தப் பரதேசிக் கிழவன் ஒரு தடவை கூட மரணதேவனை அழைக்கவே இல்லை.........!

திருவலம் சுழி

"சாமி"

"இந்த ஸ்டேஷன் பெயரென்ன?" என்று அருகில் உட்கார்ந்திருந்த என் நண்பர் கேட்டார்.

"பரங்கிப் பேட்டை" என்று பதிலளித்தார் எங்கள் எதிரில் உட்கார்ந்திருந்த பிரயாணி.

"பரங்கிப் பேட்டை என்று எப்படிப் பெயர் வந்தது? சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஊர்களின் பெயர். ஒவ்வொரு பெயரும் விசித்திரமாயிருக்கின்றன. பெரிய ஸ்தலங்கள் தவிர மற்ற ஊர்களில் பலவற்றிற்கு பெயர்கள் இடப்பட்டதற்கான காரணமே தெரியவில்லை. கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் உள்ள சம்பந்தந்தான் இந்த ஊர்களுக்கும் அதன் பெயர்களுக்கும் இருக்கின்றன" என்று என் நண்பர் கூறினர்.

இந்த சம்பாஷணை நானும் என் நண்பரும் சென்னையிலிருந்து போட் மெயிலில் தஞ்சைக்கு பிரயாணம் செய்த பொழுது நடைபெற்றது. எங்கள் எதிரில் உட்கார்ந்திருந்த பிரயாணி என் நண்பரின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு சும்மா இருந்து விடவில்லை. ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டு "என்ன ஸார்! அப்படிச் சொல்லி விட்டீர்கள். ஒவ்வொரு ஊருக்கும் பெயரிடப் பட்டிருப்பதற்கு தகுந்த காரணமில்லாமலில்லை. விசேஷ சம்பவம் நிகழ்ந்ததன் விளைவாக சில ஊர்கள் சரித்திரப் பெயர்களுடன் விளங்குகின்றன. புராண இதிஹாசப் பெயர்களை சில ஊர்கள் பெற்றிருக்கின்றன. இம்மாதிரியே ஒவ்வொரு ஊருக்கும் அதன் பெயருக்கும் ஏதாவது நெருங்கிய சம்பந்தம் இல்லாமலிருக்காது. நாம் அவற்றை தெரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இடப் பட்ட பெயர்களுடன் பல ஊர்கள் விளங்குகின்றன. அந்தந்த ஊரிலுள்ள பழைய நாளை மனிதர்களைக் கேட்டால் அந்தப் பெயர்கள் ஏற்பட்டதைப் பற்றிய அபூர்வமான கதைகளைக் கூறுவார்கள். அம்மாதிரி ஒரு ஊரைப் பற்றி நான் கேட்ட கதையைக் கூறுகிறேன், கேளுங்கள். தன் மக்களின் க்ஷேமத்திற்காக தன் உயிரையே தியாகம் செய்து கொண்ட ஒரு வீரமன்னனின் கதை அது" என்று சொன்னர்.

எங்கள் வண்டியிலிருந்த அனைவரும் ஒரே குரலில் "சொல்லுங்கள்" என்று ஆவலுடன் சொன்னேம்.

அந்தப் பிரயாணியும் தன் கதையை ஆரம்பித்தார்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவத்தை கூறுகிறேன்.

கும்பகோணத்திற்கு அருகாமையில் திருவலஞ்சுழி என்று ஒரு ஊர் இருக்கிறது. அந்த நாளில் அதற்கு என்ன பெயர் வைக்கப் பட்டிருந்ததோ தெரியாது. ஏதாவது ஒரு பெயர் இருந்திருக்கத்தான் வேண்டும். அந்தக் காலத்தில் சோழ மன்னர்களின் ஆதிக்கம் உச்ச நிலையில் இருந்தது. பாண்டிய மன்னர்களும் சேர அரசர்களும் சோழர்களுடைய ஆதிபத்தியத்தை ஏற்றுக் கொண்டு கப்பம் செலுத்தி வந்தனராம்.

நாம் கூறப் போகும் சம்பவம் நிகழ்ந்த காலத்தில் சோழ மண்டலத்தை அரசாண்ட மன்னன் — அவன் பெயர் எனக்குத் தெரியாது — குடி மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றவன். அவனுக்கு கீழ்ப் பட்ட சிற்றரசர்களின் மதிப்பை அவன் பெற்றிருந்தான் என்றால், அவன் பெருங் குணத்தைப் பற்றி அதிகம் கூறுவானேன்.

அறிஞர்களும், புலவர்களும், உலகப் பற்றை துறந்த முனிவர்களும் இச்சோழ மன்னனால் பெரிதும் போற்றப் பட்டு வந்தனர். குடி மக்களின் சுக வாழ்வையே பிரதான லட்சியமாகக் கொண்டு செங்கோல் நடத்தி வந்த இம் மன்னன் ஏகண்டமா முனிவர் என்ற துறவியை தன் குருவாகக் கொண்டிருந்தான். எந்தச் சிறு காரியமாயினும் தன் குருநாதனின் புத்திமதியைக் கேளாமல் அவன் செய்வதில்லை.

ஆவணி, புரட்டாசி மாதம் நாடெங்கும் அடைமழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. வெளியில் தலை காட்ட முடியாத நிலைமை. காவேரியிலிருந்து கால்வாய்கள் வரை எல்லாவற்றிலும் நீர் கரை புரண்டு ஓடுகிறது. வயல்கள், புலன்களிலெல்லாம் பயிர்கள் செழித்து வளர்ந்திருந்தன. நல்ல அறுவடை யிருக்குமென்று குடியானவர்கள் ஆனந்தமாக இருந்த இந்த சமயத்தில் இப் பெருமழை பெய்ததைக் கண்டு அவர்கள் மனம் குழம்பினர். பயிர்கள் அழிந்து நாசமாகி விடுமென்று அவர்கள் முடிவு செய்து கொண்டனர்.

இச்சமயத்தில் ஓர் பெரும் அதிசயம் நிகழ்ந்தது. வெள்ளப் பெருக் கெடுத்து, நீர் கரை புரண்டு, ராட்சச வேகத்தோடு ஓடிக் கொண்டு வந்த காவேரி யாறு கும்பகோணத்திற் கருகாமையில் — ஒரு ஊரில் திடீரென்று சுழித்துக் கொண்டு பூமிக்குள் மறைந்து விட்டது.

இச் செய்தியை முதலில் அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள் கேட்டு ஓடோடியும் வந்து பார்த்தனர். திகைத்து நின்றனர். இச் செய்தி தந்தி போல் எங்கும் பரவியது. சுமார் நூறு மைல் தூரத்திலிருந்தும் ஜனங்கள் அங்கு திரண்டு வந்தனர். காவேரி பூமிக்குள் மறைந்த காரணம் அவர்களுக்கு விளங்க வில்லை. நாட்டுக்கு பெரும் கேடு வருவதற்கு அறிகுறியாகவே இச்சம்பவத்தை அம்மக்கள் கருதினர்.

'ஆற்று நீர் பூமிக்குள் மறைந்து விட்டால் பயிர் பச்

சைகள் என்ன ஆவது? சாகுபடி எப்படிச் செய்வது? லட்சக் கணக்கான மக்களின், ஜீவனத்திற்கு இனி வழி ஏது!' என்று ஜனங்கள் ஏக்கத்துடன் பேசிக்கொண்டனர்.

இச்செய்தி தலை நகரான உறையூரில் இருந்த சோழ மன்னன் காதுக்கும் எட்டியது. இதைக் கேள்வியுற்றதும் மன்னன் மனம் கலங்கியது. தன் அரசாட்சி முறையில் குறைபாடு ஏதோ இருப்பதனால் தான் இது நிகழ்ந்திருப்பதாக அவன் கருதினான். தன் குருவான ஏகண்ட மாமுனிவர் தவஞ் செய்து வரும் காட்டிற்குச் சென்று அவரை வணங்கி நிகழ்ந்த சம்பவத்தை அவரிடம் கூறினான்.

அரசன் கூறியதைக் கேட்ட துறவி அந்த இடத்திற்குச் சென்று நேரில் பார்த்து என்ன செய்வதென்பதை முடிவு செய்யலாமென்று சமாதானப் படுத்தினார்.

அரசனும் ஏகண்ட மாமுனிவரும் விஜயம் செய்யும் செய்தியை கேட்ட மக்கள் லட்சக் கணக்கில் அந்த இடத்தில் கூடினர். அரசன் துறவியுடன் தன் பரிவாரங்கள் சூழ அவ்விடம் வந்து சேர்ந்தான். பேரிரைச்சலுடன் காவேரியாறு பெரும் சுழியாக சுழித்துக் கொண்டு பூமிக்குள் சென்று மறைந்ததை அவர்கள் கண்டனர். அதைத் தவிர வேறு எதுவும் அவர்கள் கண்களுக்கு புலப்படவில்லை. அரசன் இவ்வதிசயத்தைக் கண்டு பித்துப் பிடித்தவன் போல் பிரமித்துப் போய் நின்று கொண்டிருந்தான். துறவியோ சிந்தனையிலாழ்ந்திருந்தார். கூடியிருந்த பெரும் ஜனத்திரளும் அரசனையும் ஆண்டியையும் மாறி மாறிப் பார்த்து நின்றனர்.

"மன்னா" என்றார் துறவி.

"சுவாமி" என்று திடுக்குற்றவன் போல் அரசன் தன் நினைவிழந்து பதில் தந்தான்.

"இப்பெருஞ் சுழியில் ஒரு மணி முடியாவது சடைமுடியாவது வீழ்ந்தால் காவேரியம்மன் தன் வழியே செல்வாள்" என்று துறவி கூறினார்.

"தங்கள் ஆக்ஞை. நாடு செழிப்புற்று மக்கள் நல்வாழ்வு வாழ இது பெரிய காரியமல்ல" என்று கூறி அரசன் ஒரு கணமும் தாமதியாமல் அச் சுழிக்குள் குதித்தான். ஜனங்கள் ஓவென்று அலறினர்.

அரசன் தன் உயிரையே மாய்த்துக் கொண்டதைப் பார்த்த முனிவர், தன்னை பலியிட்டுக் கொள்ளாமல் அவசரப்பட்டு அரசனுக்குச் சொன்னதை நினைத்து "நான் நீசன். துறவிக்குரிய குணம் படைத்தவனல்லன். என்னால் ஓர் உத்தமன் உயிர் துறக்கவும், நாடு நாதனை இழந்து தவிக்கவும் நேர்ந்தது. பாபத்திற்குப் பரிகாரமே கிடையாது" என்று

கூறிக்கொண்டே, இப்பொழுது நேராகப் பிரவாகத்துடன் ஓடிக் கொண்டிருக்கும் நதியில் குதித்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

காவேரியாறு அந்த ஊரில் சுழித்துக் கொண்டு பூமிக்குள் போய் மறைந்ததாலும், பின்னர் மன்னனும் முனிவரும் அவ்விடத்தில் தங்கள் உயிரைப் போக்கிக் கொண்டதாலும் அவ்வூருக்கு "திருவலம் சுழி" என்ற பெயர் இடப்பட்டதாம். இதைப் பற்றிப் புலவர் ஒருவர் பாட்டுக் கூட பாடியிருக்கிறார்.

இத மதிக வார்த்தை யெவர்க்கேனு மேலா
மித மெனவே கூறி வித மன்றே யித முறைத்த
வாக்கினால் ஏகண்ட மாமுனியுஞ் சோழனொடு
தேக்கு நீர் வீழ்ந் தொழிந்தான் சேர்ந்து.

பிரயாணி தன் கதையை முடித்தார். எங்கள் வண்டியும் சிதம்பரம் ஸ்டேஷனை அடைந்தது. முதல் தரமான கதையென்று எங்கள் வண்டியிலிருந்த எல்லோரும் ஏகோபித்துச் சொன்னோம்.

எண்ணக் கடல்

"சுகி"

நேற்று நான் நயாகரா நீர் வீழ்ச்சியில் குளித்து விட்டு ஸஹாரா பாலைவனச் சோலையில் காப்பி குடித்தேன். உடனே பாரிஸ் வழியாக லண்டன் மியூஸியத்தை எட்டிப் பார்த்துவிட்டு நேரடியாக ஹிமாலயத்தில் மத்தியானச் சாப்பாடு முடித்துக் கொண்டு, மாலை மூன்று மணிக்கு இலங்கையில் இளநீர் அருந்தி, சினிமா பார்க்க அமெரிக்கா சென்றேன்.

இதெல்லாம் நடக்கக் கூடியதில்லை யெனலாம். இதுமட்டுமல்ல இருட்டின் ஒளியையும், நிலவின் கருமையையும், பாலின் கசப்பையும், குதிரையின் கொம்பையும் உணரலாம். கரடி வெம்புலியை பல்லைக் காட்டவைக்கலாம். ஜலத்தின்மேல் நடப்பது பிரமாதமில்லை; தலைகீழாக நடக்கலாம். சூரியனை வடக்கே உதிக்க வைத்து கிழக்கே அடையவைக்கலாம். சந்திரனை அமாவாசை அன்று பார்க்கலாம். இதெல்லாம் நடக்கக் கூடியது. ஆம், கனவில்தான் — அதிலும் பகற் கனவில்!

கனவு ஒரு மனோரதம். நினைத்த இடங்களுக்கெல்லாம் செல்லும். அதற்குக் குதிரையின் வேகமும், ஒளியென ஊடுருவிப் பாயும் சக்தியும் உண்டு.

நினைத்த இடம், நினைக்காத, நினைக்க முடியாத கற்பனுலோகம், இலக்ஷியத்திற்கு புறம்பட்ட கோளங்கள் முதலானவை புலப்படும். விநோதமான பறவைகள், பச்சைக் குதிரை, நீல மாடு, வெள்ளை மயில் இவைகளைப் பார்க்கலாம். தண்ணீரில் வளர்ந்த மரங்கள், தரையில் வாழும் மீன்களைக்கூடக் காணலாம். இது பார்க்கப் பணம் காசு தேவையில்லை. ரயில் செலவு, டிக்கட் பரிசோதகர் தொல்லை, போர்டர் சண்டை இதெல்லாம் மிச்சம்.

அன்ன ஆகாரமின்றி ஹிமாலயத்தின் எவரெஸ்டு சிகரத்தில் ஏறலாம். களைப்பு, சோர்வு, வராது. ஹிமாலயத்திலிருந்து, மல்லிகார்ஜுன மலைக்குப் பாலமோ இல்லை; இல்லாவிட்டால் என்ன? அந்தக் கவலை நமக்கு வேண்டாம்! நாம் வரலாம். மோட்டார் ரயில் பிரயாணமில்லை. மனோரதம் எங்கு வேண்டுமானாலும் பறக்கும்; பாயும்; ஓடும் ரிக்ஷா வண்டிக்குள் நாமே உட்கார்ந்து கொண்டு ரிக்ஷாவை நாமே இழுக்க முடியும். இப்படியெல்லாம் நடப்பது கனவு ஒன்றில்தான். இதுமட்டுமா? கூடுவிட்டுக் கூடுபாயலாம். கூடுவிட்டுக் கூடு பாய்ந்த ஒருவர் எழுதுகிறார்:—

"நான் திடீரென்று பெண் பிள்ளையாக மாறிவிட்டேன். கிராப் தலை கறுகறுவென்று வளர்ந்து நெளிந்து சுருண்டு புரண்டது. எட்டு முழ வேஷ்டி பதினெட்டு முழமான பட்டாக மாறி பள பளவென்று நெகிழ்ந்தது. 'விநெக்' ரவிக்கையாக மாறியது. அதில் பல தரப்பட்ட பூ வேலைகள்; காதில் வைர லோலக் ஆடுகிறது.

குளிக்கப் போனேன். ஒரு முயல் பச்சை மஞ்சள் கொண்டு வந்தது. மிளாக் குட்டி தாளி பறித்தது. மஞ்சளை ஆமை முதுகில், குரங்கு உறைத்துத்

தந்தது. குட்டியானைகள் தும்பிக் கையால் ஜலத்தை அபிஷேகம் செய்தன.

எங்கிருந்தோ குருவி கொண் டைக்குப் பூ கொண்டு வந்தது. காகம் கண்ணுக்கு மை கொண்டு வந்தது. மைனா திலகமிட்டது. புரு பௌடர் ஒத்தியது."

ஆமாம், நமக்கு குருவியும், காக மும், மைனாவும் கைகட்டி நிற்கும். எப்போது? நாம் சரியாகக் கனவு கண்டால்தான்.

கொண்டைக்கு குருவி பூக் கொண்டு வருவது இலக்கியக் கனவு. நெற்றிக்குத் திலகமிடு வதாக மைனாவைக் காண்பது பகற் கனவு. ஆனால் புரு தூர இடங் களிலிருந்து தபால் கொண்டு வரு கிறதே; இது கனவல்ல; நனவு.

நேற்றைய கனவு இன்றைய நனவு. இன்றைய கனவு நாளைய நனவாகலாம்.

நாம் தற்போது ஆண்டு அனு பவிக்கும் சுக சௌக்கியங்களெல் லாம் நம் முன்னோர் கண்ட கனவு. ரேடியோ, விஞ்ஞானியான மார் கோனியின் கனவு. காசி நகர் புலவர் பேசும் வார்த்தை, காஞ்சி யில் இருப்பவர்களுக்குக் கேட்பது நூறு ஆண்டுகளுக்கு முன் கனவு; இன்றோ நனவு.

'பறக்கச் சிறகிருந்தால்' என்ற ஊமைக் கனவு இன்று கனவில்லை. ஒரு காலத்தில் கற்பனைக்கும் எட் டாத கனவுகள் எல்லாம், இப் போது விஞ்ஞான அற்புதங் களாகத் திகழ்கின்றன. கனவி லிருந்து பிறந்தது விஞ்ஞானம்.

விஞ்ஞானத்தைப் போலவே சமூகம், அரசியல், தத்துவம் எல்லாம் கனவிலிருந்து இலக்ஷிய உலகிற்கு வருகின்றன. நாளடை வில் நனவாகிறது. சிருஷ்டி, ஒரு கனவு. இலக்கியம், சங்கீதம், நடனம், சமயம் எல்லாம் கனவு, ஆரம்பக் கனவு.

கனவு காண்பது சுலபமல்ல. அதற்கு ரஸிக மனப் பான்மை வேண்டும். உயர்ந்த லக்ஷிய நோக் கம், கனிந்த உள்ளம் இருந்தால் கனவு காணலாம்.

மேளகர்த்தா ராகங்கள் என்ன? சங்கீத ரஸிகர்களின் பகற் கனவு. ஸ்வரங்களைப் பின்னிப் பிணைப் பதில், மாறுபாடான ராக வேறு பாடுகள் ஏற்படும் என்று நினைத் தவன், ஆதியில் கனவு தானே கண்டிருக்க வேண்டும்?

சங்கீதத்தைப் போல சமயத்தில் கனவு கண்டவர்கள் இல்லையா? நடராஜ விக்கிரகம் என்ன? மனங் கனிந்த சிற்பியின் பகற் கனவு. கருங்கல்லில் கடவுளின் நடன ரூபத்தை வடிவாக்கினான். பிரபஞ் சக் கூத்தென்னும் மனதிற் கெட் டாத பெரிய தத்துவத்தை சிற்பி புலனுக்குத் தோன்றும்படி உரு வாக அமைக்கிறான். அகக் கண் ணில் கனவு ரூபத்தில் இருக்கும் கருங்கல், நடராஜராக மாறுகிறது. கடவுளைக் காண்பதற்கு சுருக்க மான வழியான கலைவாயிலாகக் காண்கிறான். சாஸ்திரம், சமயம், சிற்பம் எல்லாம் ஒன்றாக்கினான். திருவுருவம் பிறந்தது. சிற்பிக்கு வடிவம் எங்கிருந்து கிடைத்தது? பகற் கனவில் இருந்து தான்.

கருங்கல்லில் கனவு கண்ட சிற்பியைப் போல, வார்த்தைச் சிற்பியும் அதே கனவு காண் கிறான். அவன் கல்லில் செதுக்கிய உருவத்தை கவிஞன் வார்த்தையில் இழைக்கிறான்.

அப்படி இழைக்கும் போது நம் முன் நடராஜரே வருகிறார். ஆம், நடனமாடிக் கொண்டு தான். கல்லிலும், செம்பிலும் நடன மாடிய பெருமாள் அப்பருடைய கவியில் வருகிறார்.

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற்
பால் வெண்ணீரும்
இனித்த முடைய எடுத்த பொற்
பாதமும் காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே.

நடராஜ விக்கிரகம் பக்திப் பெருக்கின் கனவு. இப்படித்தோன்றும் நடராஜர் முதன் முதலில் எந்த சிற்பி கண்ட கனவோ. ஆகா! எத்தகைய மகத்தான, உன்னதமான கனவுகள் இருக்கின்றன. சிவபெருமான், கண்ணபிரான், முருகன், பிள்ளையார், சரஸ்வதி எல்லாம் கனவுத் தெய்வங்களே!

ஆதியில் கடவுள் மனிதனைப் படைத்தார். மனிதன் கடவுளைப் பற்றி கனவு காண ஆரம்பித்தான். கவிஞன் வார்த்தைகளிலும், சிற்பி கல்லிலும், ஓவியன் திரையிலும் கடவுளின் ரூபத்தை வரைந்தார்கள்.

கோயில் தோறும் குடி கொண்டுள்ள தெய்வங்கள், முதன் முதலில் சிற்பியின் கனவுக் கோயிலில் எழுந்தருளியவை. ஓவியக்காரன் இதயத்திலிருந்து திரையில் குடிபுகுந்தவை. கவியின் இதயாசனத்திலிருந்து, ஏட்டில் கோயில் கொண்ட தெய்வங்கள்.

சிவபிரானின் உருவைக் கனக் கண்ட பக்தர்,

விரித்த செஞ்சடையாட, வதன
சந்திரனுட
விரிகமல நயனமாட
வெண்முருவ நிலவாட நன்னுத
மருகம் ஆட
வீசு மொரு செங்கை யாட
தரித்த புலியதளாட அபயகரமா
இரு
சங்கு தோடு சாலாடத்
தாங்கு நூலாட மேலோங்கு நீராட
வொளிர், தண்பவள மேனியாட
உரித்த கரி புரியாட உரக கங்கண
மாட
உபயபரி புரமுமாட
ஒரு பதம் எடுத்தாட ஒரு பத
மிதித்தாட
உள்ளே மகிழ்ந்து சற்றே
சிரித்து மலை மங்கை கொண்டாட
நின்ருடு முன்
திருநடன மென்று காண்பேன்.

என்று பாடிப் பரவசமானுர்.

தெய்வங்களை யாரும் நேரில் பார்த்ததில்லை. ஆனல் நேரில் பார்த்துத்தான் தெரிய வேண்டு மென்பதில்லை. அறிவுக் கண்ணும், கனவு மனப் பான்மையும் இருந்தால் நேருக்கு நேர் சந்தித்த மாதிரி படம் பிடிக்கலாம்:

நாடிப் புலங்கள் உழுவார் கரமும்
நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர்
நாவும் செழுங் கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்
சம்
உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம்
அடைக்கலமே.

என்று கவி உருவகம் செய்கிருர்.

இப்படியாக சிற்பம், சித்திரம், இலக்கியம், விஞ்ஞானம் முதலியன கனவில் பிறக்கும் கலைகள். கனவு காண முடியாதவன் சிருஷ்டி இன்பத்தை அடைய முடியாது.

உலகத்தில் கனவு காண முடிந்தவர்கள் குழந்தை மனப்பான்மை உள்ளவர்கள் தான். குழந்தைக்கு அற்புதமான வஸ்து ஒன்று உண்டு. அது தான் கற்பனை. கூழாங்கல்லும், மண்ணாங்கட்டியும், குதிரைப் படை, யானைப் படையாக நடமாடும்; ரூபா, அணவாகச் செல்லும். பூவரசம் குச்சிகள், நாதசுரமாகப் பொழியும்; வாழைக் குலையாகத் தொங்கும்; சிப்பாயின் குத்து ஈட்டியாகப் பாயும். இதைக் குழந்தைகள் விளையாடும் போது கவனித்தால் தெரியும்.

கற்பனை மனப்பான்மை குழந்தைகளுக்கு உண்டு; கனவு காண்கிறது; அது வேடிக்கையோடு முடிகிறது. அதே குழந்தை யுள்ளம் படைத்த மனிதன் தன் பகற் கனவை வினயமாக்குகிருன் இதிலிருந்து இலக்கியம், சங்கீதம், ஓவியம், சிற்பம், சமயம் முதலானவை மலர்கின்றன.

அல்லாதவை வெறும் நெட்டைக் கனவாக முடிகின்றது.

ஆசிரியர்
சரத்சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்.

கொஞ்ச நேரம் கழித்து நித்திரை கலைந்து சதீஷ் எழுந்ததும் சாவித்திரி ஞாபகம் வந்தது. அதே சமயத்தில் சாவித்திரியும் அவன் எதிரில் வந்து நின்றாள். அவளுடைய முகம் கவலையாலும் கோபத்தாலும் வாடிப் போயிருந்தது. அவள் முகத்தைப் பார்த்ததும் சதீஷ் தலை குனிந்து கொண்டான். சிறிது நேரம் கழித்து சாவித்திரி, "என்ன சாப்பிடுகிறீர்கள் என்று கேட்டுப் போக வந்தேன்?" என்றாள்.

சதீஷ் அவளுடைய முகத்தை ஏறிட்டுப் பாராமலே, "தினம் சாப்பிடுவதுதான்" என்றான்.

"சரி" என்று சொல்லி விட்டுப் போனவள், பிறகு நின்று கொண்டு, "படிப்புப் போலவே இப்போது சாப்பாடும் பிடிப்பதில்லையா?" என்றாள்.

சதீஷ் மெதுவாக, "நான் சாப்பிட்டு விட்டுத்தான் வந்தேன்" என்று பயந்து கொண்டு பொய் பேசினான். ஆனால் வெறுப்பினால் சாவித்திரி 'எங்கே' என்று கேட்கவில்லை. பிறகு கொஞ்ச நேரம் கழித்து, "இந்த இரண்டு நாளாக ஏன் ஓடி ஒளிகிறீர்கள்? ஏன் பயப்படுகிறீர்கள்? என்னால் ஏதாவது கஷ்டமுண்டானால் உடனே சொல்லி விடுங்கள், போய்விடுகிறேன்" என்றாள்.

"நீ என்ன எனக்கு விரோதியா? நான் உனக்கு எஜமானல்ல, பதில் சொல்வதற்கு. விடுதி என்னுடையதல்ல."

"உங்களுடையதாயிருந்தால் பதில் சொல்லுவீர்களோ! சரி, நான் போய் விடட்டுமா?"

சதீஷ் ஒன்றும் பேசவில்லை. அவன் பேசாமலிருப்பதைக் கண்டு சாவித்திரி கோபத்துடன், "நான் போய் விட்டால் சந்தோஷமாக இருப்பீர்களா? உங்கள் காலைப் பிடிக்கிறேன் சதீஷ்பாபு! இரண்டிலொன்று சொல்லி விடுங்கள்" என்றாள்.

அதற்கும் சதீஷ் ஒன்றும் பேசவில்லை. ஏனென்றால் இந்த வீட்டிலே சாவித்திரி தன்னை அதிகமாக நேசிக்கிறாள் என்பது தெரியும். இவ்விதம் திடீரென அவள் போய் விட்டால் எல்லாம் வெளிப்பட்டு விடும். அப்போதே எல்லோர் காதிற்கும் விஷயம் எட்டிவிடும். இந்தப் பாழும் விஷயத்தை உண்

மையென நம்பிப் பயப்பட்டான். சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு மெதுவாக, "என்னை மன்னித்துவிடு சாவித்திரி! நான் இங்கு இருக்கும் வரையிலாவது எங்கும் போகாதே!" என்றான்.

வேறு ஒரு சமயமாயிருந்தால் சாவித்திரி உடனே மன்னித்திருப்பாள். ஆனால் சதீஷைப் பற்றி ஒரு ஆதாரமற்ற சந்தேகத்தைக் கற்பிதம் செய்து கொண்டிருந்தாள். ஆகையால் அவனது பேச்சை நம்பாமல், "நீங்கள் இவ்வளவு பணிவாக மன்னிப்புக் கேட்டு முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறீர்களே! என்னைப் போன்ற நீசப் பெண்களை முந்தானையைப் பிடித்து இழுப்பது இதுதான் முதல் தடவையா? என்னவோ வெட்கப் பட்டுச் சாகிறீர்களே! இதைவிட நீங்கள் வீட்டுக்குப் போய் விடுவது நல்லது. கல்கத்தாவிற்கு வந்து என் வீணாகக் கெட்டுப் போகிறீர்கள்? படிப்புக்கும் உங்களுக்கும் ஒத்துக் கொள்ளாது" என்றாள்.

கோபம் வந்தால் யாரையும் அலட்சியம் செய்து விட்டுப் போகிற சதீஷ், சகிப்புத் தன்மை என்பது பெயருக்குக் கூட இல்லாத சதீஷ், இன்று இவ்வளவு பெரிய அவமானகரமான வார்த்தையைக் கேட்டும் மௌனமாக இருக்கிறான்! பாரம் தாங்காது வழியில் விழுந்து விட்ட வண்டிக்காளை போல அவன் மனதும் படுத்துக் கொண்டது. ஆகையால் சாவித்திரியின் கடுமையான வார்த்தைகளை பொறுத்துக் கொள்வதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. அவன் தலை நிமிர முடியவில்லை. ஆனால் சாவித்திரி சுய உணர்வை அடைந்தாள். அவள் பேசிய வார்த்தைகளே அவள் காதில் ஒலிக்கத் தொடங்கின. அவள் வெகு நேரம் வரையிலும் மௌனமாக நின்றுகொண்டிருந்து விட்டு மெதுவாக வெளியே சென்றாள்.

இன்று சாவித்திரி எல்லாக் காரியங்களையும் கவனித்துக் கொண்டுதானிருக்கிறாள். ஆனால் நாள் முழுதும் அவள் மனதிலே ஒரு சுமை அழுத்திக் கொண்டே இருந்தது. சதீஷ் நேற்றுப் போலவே இன்றும் கோபத்தில் ஏதாவது சொல்லியிருந்தால் ஆறுதலடைந்திருப்பாள். ஆனால் அவன் ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாக தினம் போல வந்து சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடம் போய்விடுகிறான். பிறகு திரும்பி வந்து சத்தமில்லாமல் உட்கார்ந்து கொள்கிறான். மறைவிலிருந்து கொண்டு சாவித்திரி இவைகளையெல்லாம் கவனித்தாள். ஆனால் எக்காரணங் கொண்டும் அவன் முன் செல்லப் பயப் பட்டாள். தினசரி சாயங்காலம் அவன் அறையைச் சாவித்திரி பெருக்கிச் சுத்தம் செய்து வந்தாள். ஆனால் இன்று அவள் பிஹாரியை அனுப்பி விட்டாள். மாலையில் பிஹாரிதான் விளக்குக் கூட ஏற்றி வைத்தான்.

தினம் இந்நேரத்தில் ராக்கால் பாபுவின் அறையில் சதுரங்கக் கச்சேரி ஆரம்பமாகும். இன்றும் ஏக அமர்க்களமாக நடந்து கொண்டிருந்தது. திறந்து கிடந்த மேல் மாடியில் யாரையும் காணோம். சாவித்திரி சுற்றிலும் ஒரு முறை பார்த்தாள். தனது வெட்க மனத்தையும் அடக்கிக் கொண்டு மெதுவாக அடி எடுத்து வைத்து சதீஷ் அறைக்குள் நுழைந்தாள். சதீஷ் படுக்கையில் மல்லாந்து படுத்துக் கொண்டிருந்தான். இவளைக் கண்டதும் அவன் எழுந்து உட்கார்ந்தான். சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு சாவித்திரி, "சந்தியா பூஜைக்குப்

பாத்திரங்களை எடுத்து வைக்கட்டுமா?'' என்றாள்.

"சரி, எடுத்து வை" என்றான். பிறகு சாவித்திரிக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, "ஆமாம், சனங்கள் என்ன சொல்வார்கள்? யோசித்துப் பாருங்கள்'' என்றாள்.

சதீஷ் ஒன்றும் பேசவில்லை.

"நீங்கள் தான் என்னை இங்கு இருக்கச் சொன்னீர்கள். ஆனால் நீங்கள் செய்யும் காரியம் எப்படியிருக்கிறது?'' என்றாள் சாவித்திரி.

"நான் என்ன செய்கிறேன்? ஒன்றுமில்லையே! பேசாமலிருக்கிறேன்.''

"இப்படிப் பேசாமலிருப்பது தான் கெட்டது. எல்லோரும் பேசிக் கொண்டிருக்கும் போது நீங்கள் மட்டும் பேசாமலிருந்தால் ஏன் என்று கேட்பார்கள். உங்களுடைய விருப்பமும் இது தானா?'' என்றாள். பிறகு சிறிது நேரங் கழித்து, "வேண்டுமென்றே துன்பத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளப் பார்க்கிறீர்களா? ஒரு காரணமுமின்றி ஏன் குற்றவாளி போல உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? இதைப் பார்த்து நாலு பேர் என்ன சொல்லுவார்கள்? கேலி செய்ய மாட்டார்களா? நீங்கள் இதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் என்னால் பொறுக்க முடியாது. நான் இங்கிருந்து சீக்கிரம் போய் விடுவேன் போலிருக்கிறது'' என்றாள்.

சதீஷ் மனதிற்குள் மிக வருத்தமடைந்தான். "உண்மையிலேயே நான் ஒரு குற்றமும் செய்யவில்லையா?'' என்றான்.

"இல்லை; ஒரு குற்றமும் செய்யவில்லை. கொஞ்சம் யோசித்துப் பார்த்தீர்களானால் உங்கள் மனதிற்கே நன்கு தெரியும். என்னிடம் நீங்கள் நடந்து கொண்டது ஒன்றும் ....'' என்று கூறி திடீரென நிறுத்தினாள். வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் குதிரை வழியில் ஏதாவது ஆழமான நீர் நிலையைக் கண்டால் எப்படி விலகிப் போகுமோ அம்மாதிரியே சாவித்திரியும் தனது பேச்சை மாற்றி ஓட்டினாள். அவள் இவ்விதம் திடீரென பேசுவதை நிறுத்திக் கொள்ளவே சதீஷ் ஆச்சரியமுற்று தலை நிமிர்ந்து பார்த்தான். அப்போது இருவர் கண்களும் சந்தித்தன. வெட்கத்தால் அவளுக்கு உயிரை விட்டு விடலாம் போலிருந்தது. தன்னைப் போன்ற பெண்ணிடம் அவ்விதம் நடந்து கொண்டது ஒன்றும் மானக் கேடான செயல் அல்ல என்று அவள் சொல்ல விரும்பினாள். ஆனால் வெட்கத்தால் அவள் குன்றிப் போனாள்!

சதீஷ் ஏதோ சொல்ல விரும்பினான். சாவித்திரி அவனைத் தடுத்து, "பேசாமலிருங்கள், போகட்டும், இல்லாததை — பொல்லாததையெல்லாம் எண்ணி வருத்தமடையாதீர்கள். அடே, பிஹாரி! பாபுவின் பூஜை இடத்தை சுத்தம் செய்! நான் ரொம்ப நேரமாக விரிப்பை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருக்கிறேன்'' என்றாள். பிஹாரி ஏதோ வேலையாக இந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தான். உடனே அவன் தண்ணீர் கொண்டு வருவதற்காகப் போய் விட்டான். சாவித்திரி மெதுவாக, "இந்த இரண்டு நாளாக உங்களது நடத்தையால் நான் எவ்வளவு சிரமப் பட்டேன் என்பதை நீங்கள் கொஞ்சமாவது கவனித்தீர்களா?'' என்றாள்.

அவள் சொன்ன இவ்வார்த்தைகளை உடனே அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. இருந்

தாலும் அவன் மனதிலிருந்த பாரம் சற்று குறைந்தது. அதற்கப்புறம் அவன் மன்னிப்பு பெற்ற குற்றவாளியைப் போல, "என் சாவித்திரி! உன்னை நான் அவமானம் செய்யவில்லையா?" என்றான்.

சாவித்திரி திடுக்கிட்டு, "நீங்கள் அறியா விட்டால் என்னால் எப்படி அறிவுறுத்த முடியும்? ஒருதரம் அல்ல, ஆயிரம் தரம் சொல்லுகிறேன்; உங்களால் நான் சிறிதும் அவமானம் அடையவில்லை. தயவு செய்து மனதைச் சமாதானப் படுத்திக் கொள்ளுங்கள். நான் தங்களிடம் இதுதான் வேண்டிக் கொள்வது" என்றாள்.

சதீஷ் இதற்குப் பதில் அளிக்கத் தான் விரும்பினான். ஆனால் சாவித்திரி அவனைச் சைகை செய்து தடுத்து, "பிஹாரி, வந்து விட்டாயா? கொண்டா" என்றாள். பிஹாரி, ஒரு லோடாவில் தண்ணீர் கொண்டு வந்திருந்தான். அவள் அந்தத் தண்ணீரால் அறையின் ஒரு மூலையை நன்றாக மெழுகினாள். பிறகு, "சரி, நீங்கள் போய் கை கால் சுத்தம் செய்து கொண்டு வந்து சந்தியா வந்தனம் செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டு பிஹாரியுடன் வெளியே சென்று விட்டாள்.

சதீஷ் திருப்தியாக சந்தியாவந்தனத்தை முடித்துவிட்டு வந்தான். அதற்குள் சாப்பாடு தயாராகக் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்தது. அறைக்குள் யாரையும் காணா விட்டாலும் தான் தனியாக இருப்பதாக அவன் கருதவில்லை. விரிப்பில் உட்கார்ந்து கொண்டு, "இப்போது இவ்வளவையும் சாப்பிட்டால் ராத்திரிக்கு ஒன்றும் சாப்பிட முடியாது" என்றான்.

"ராத்திரிக்குச் சாப்பிட வேண்டியிருக்காது. விபின்பாபு விட்டிலிருந்து அழைப்பு வந்திருக்கிறது" என்று வெளியிலிருந்து பதில் வந்தது.

சதீஷ் சிரித்தான். "கேலி செய்யாதே, போ. என்னால் எங்கும் போக முடியாது" என்றான்.

சாவித்திரி மறைவிலிருந்து கொண்டே, "ஐயோ, இப்படியும் யாராவது செய்வார்களா! பாவம், சொல்லி விட்டுப் போயிருக்கிறார். எங்கேயாவது போக வேண்டியிருக்கும், உங்களுக்கே தெரியுமே! நீங்கள் போகா விட்டால் செய்து வைத்ததெல்லாம் வீணாகப் போய்விடும். பாட்டுக் கச்சேரி ... ..."

"எப்படியோ போகட்டும்" என்று சொல்லி அதைப் பொருட்படுத்தாமல் மௌனமாக சதீஷ் சாப்பிடத் தொடங்கினான். சாப்பிட்டானதும் ஒரு பாயை விரித்து விளக்கை வைத்து உட்கார்ந்து கொண்டு ஒரு வைத்திய புத்தகத்தை புத்திசாலிப் பையன் போல படிக்கத் தொடங்கினான். ஆனாலும் படிப்பில் அவன் மனம் செல்லவில்லை. அவனது மனம் அவிழ்த்து விடப்பட்ட குதிரை போல நாலா பக்கங்களிலும் ஓடத் தொடங்கியது.

அப்போது சமையலறையில் சமையல்காரப் பிராமணன் அரிசிப் பாத்திரத்தை அடுப்பில் ஏற்றி விட்டு பிஹாரியுடன் கஞ்சா குடித்துக் கொண்டிருந்தான். ராக்கால் பாபுவின் அறையில் விளையாட்டு முசுவில் சத்தம் அதிகமாகிக் கொண்டிருந்தது. அப்போது சதீஷ், "சாவித்திரி!" என்று கூப்பிட்டான்.

சாவித்திரி அறைக்கு வெளியில் தான் உட்கார்ந்து கொண்டிருந்

தாள். அவள் உடனே, "சொல்லுங்கள்" என்ருள்.

"விபின் பாபுவின் அழைப்பிற்கிணங்கிப் போவது மகா பாவம். தெரியாமல் செய்ததென்னவோ செய்து விட்டேன். இனித் தெரிந்தும் பாவம் செய்ய மாட்டேன்."

"பாவம் என்ன?"

"அவன் பாட்டுக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருக்கிற இடத்துக்குப் போவது பாவம்."

ஆனல், அப்பேர்ப் பட்ட இடத்திற்குப் போகாதீர்கள்."

"ஆமாம், போகவே மாட்டேன். ஆனல் அவன் என்னைச் சுலபத்தில் விட்டு விடுவான் போலத் தெரியவில்லை. ஆகையால் முதலிலேயே உன்னை எச்சரித்து விடுகிறேன். யாராவது வந்தாலும் தடுத்து விடு. நான் வீட்டில் இல்லை, ராத்திரிக்கும் வரமாட்டேன் என்று சொல்லி விடு. தெரிந்ததா?

"தெரிந்தது."

சதீஷ் ஒரு முக்கியமான கடமையைச் செய்து விட்டு மூச்சு விட்டான். சிறிது நேரம் பேசாமலிருந்த பிறகு, "ரொம்பக் குளிர் காற்ருக இருக்கிறது. சாவித்திரி, சன்னலைக் கொஞ்சம் மூடு" என்ருன்.

சாவித்திரி அறைக்குள் வந்து சன்னலை மூடினள். சதீஷ் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பார்க்கப் பார்க்க நன்றி விசுவாசம் அவன் உள்ளத்தில் பொங்கி வழிந்தது "சரி, சாவித்திரி, உன்னை என் நீசப் பெண்ணுக நினைத்துக் கொள்கிருய்?" என்ருன்.

"உண்மையான விஷயத்தை என் சொல்லக் கூடாது?" என்ருள்.

"இதைத் துளிகூட நான் நம்ப மாட்டேன்."

சாவித்திரி புன்முறுவலுடன், "என் நம்ப மாட்டீர்கள்?" என்ருள்.

"அது எனக்குத் தெரியாது. உண்மை இல்லாததால் இருக்கலாம். நடத்தையிலோ, பேச்சிலோ, அழகிலோ நீ கீழான வளல்ல. நீ இவ்வளவு படிப்பும் எங்கு படித்தாய்?" என்ருன்.

சாவித்திரி அருகில் உட்கார்ந்து கொண்டு, "எவ்வளவு? சொல்லுங்கள், பார்க்கலாம்?" என்ருள்.

சதீஷ் அதை விவரிக்க ஆரம்பித்தான். திறந்திருந்த புத்தகத்தை ஒரு புறமாகத் தள்ளி வைத்தான். ஆனல், பின் வீணே பேசாமலிருந்து கொண்டான். வெளியில் யாரோ வரும் காலடி ஓசையைக் காது கொடுத்துக் கேட்டான். கணத்தில் அறைக்கு வெளியிலிருந்து கொண்டு யாரோ, "சதீஷ் பாபு!" என்று கூப்பிட்டார்கள்.

அவனை அழைத்துப் போவதற்காக விபின் ஆள் அனுப்பியிருக்கிருன் என்பதை சதீஷ் அறிந்து கொண்டான். சதீஷ் முன்பின் சிறிதும் யோசியாமல் விளக்கை வாயால் ஊதி அணைத்து விட்டு கம்பளியை அடிக்கும் தலைக்கும் போர்த்திப் படுத்துக் கொண்டான். சிறிது தூரத்தில் உட்கார்ந்திருந்த சாவித்திரி, "ஐயையோ! இதென்ன காரியம்?" என்ருள்.

கணநேரத்தில், இருளில் கதவருகில் இரண்டு உருவங்கள் வந்து நின்று கொண்டன.

ஒருவன்: இதுதான் சதீஷ் பாபுவின் அறை.

மற்றெருவன்: பாபு அறையிலிருப்பதாகத்தான் வேலைக்காரன் சொன்னன்.

ஒருவன்: அறை இருளாகக் கிடக்கிறது. யாராவது மாலை இருட்டில் வீட்டுக்குள் உட்கார்ந்து கொண்டிருப்பார்களா?

மற்றவன் பதிலுக்கு ஏதோ சொல்லி விட்டு, ஜேபியிலிருந்த தீப் பெட்டியை எடுத்து ஒரு குச்சியைக் கிழித்தான். படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த சதீஷ் நடு நடுங்கிப் போய்விட்டான். அவனுக்கு உடலெங்கும் வியர்த்துக் கொட்டியது. சாவித்திரியும் வெட்கத்தாலும், வெறுப்பாலும் துடியாய்த் துடித்தாள்.

தீக்குச்சியைக் கிழித்ததும், "அடே! இது யார் உட்கார்ந்து கொண்டிருப்பது?" என்றான்.

அவன் தீக்குச்சியைக் கிழித்ததும் சாவித்திரி எழுந்து நின்று கொண்டாள்.

அங்கு வந்தவன், "சதீஷ் பாபு, எங்கே?" என்றான்.

சாவித்திரி ஒன்றும் பேசாமல் படுக்கையைச் சுட்டிக் காட்டி விட்டுச் சென்று விட்டாள். அவள் போனதும் இருவரும் கை தட்டிக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தார்கள். அந்தச் சிரிப்பின் ஒலியும், அதன் அர்த்தமும் சாவித்திரியின் காதுகளில் ஒலித்தது. சதீஷ் போர்வைக்குள் ஒவ்வொரு கணமும் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தான்! அவர்கள் போர்வையை எடுத்து எறிந்து விட்டு சதீஷை பலவந்தமாக அழைத்துக் கொண்டு போனார்கள்.

அவர்களுடைய சிரிப்பின் ஒலி அந்த வீட்டிலிருந்து மறையும் வரையிலும் சாவித்திரி ஒரு மூலையில் போய் சுவரைப் பிடித்துக் கொண்டு தலையில் இடி விழுந்தவள் போல நின்று கொண்டிருந்தாள்.

இருந்தாலும் விடுதியிலுள்ள யாருக்கும் தெரிந்திருக்க முடியாது. சமையல்காரன் கஞ்சாவை இழுத்து விட்டு பிஹாரியிடம் வேதம் இதை எவ்வாறு முக்தி அளிப்பதற்காகப் புகழ்கிறது என்பதைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தான். வேறொரு அறையில் ராகால் பாபுவின் கோஷ்டி எதையோ சுவாரஸ்யமாக விவாதித்துக் கொண்டிருந்தது.

பாதைக்கு வந்ததும் மூவரும் ஒரே வண்டியில் ஏறிக் கொண்டார்கள். அவர்களுடைய சிரிப்பைச் சகிக்க முடியாமல் போகவே சதீஷ் வருத்தத்துடன் "பேசாமல் இருக்கிறீர்களா, அல்லது நான் இறங்கிப் போகட்டுமா?" என்றான்.

அவன் பேச்சைக் கேட்டதும் ஒருவன், "ரொம்ப சரி! என்று சொல்லி விட்டுப் பலமாகச் சிரித்தான். மற்றவனே அவனை அடக்குகிறவன் போல அதட்டிக் கொண்டு அவனைவிடப் பலமாகச் சிரித்தான். இந்தக் குடிகாரர்களுக்கு அறிவிப்பது வியர்த்தம் எனக் கருதி வண்டிக்கு வெளியே சதீஷ் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

இருளடைந்திருந்த கூடத்துக்குள் சாவித்திரி மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். சாயங்காலம் நடந்த சம்பவத்தையே இன்னும் நினைத்துக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள். அப்போது பிஹாரி வந்து, "எல்லோரும் சாப்பிட்டு விட்டார்கள். நீயும் சாப்பிடலாம் வா" என்றான். சாவித்திரி நிமிர்ந்து பார்த்து, "பிஹாரி இன்று எனக்குச் சாப்பாடு வேண்டாம்" என்றாள்.

பிஹாரி மிகுந்த அன்புடன் அவளை உற்று நோக்கினான்.

பிறகு, "ஏன் சாப்பாடு வேண்டாம்? உடம்புக்கு ஒன்றும் இல்லையே?" என்று கேட்டான்.

"உடம்பு நன்றாகத் தானிருக்கிறது. ஏனோ சாப்பிடப் பிடிக்கவில்லை. போய் நீங்கள் சாப்பிடுங்கள்."

"சரி வா, உனக்குத் துணைக்கு வந்து விட்டு வருகிறேன்."

"ஹூம் வா. ஆனால் ஒரு விஷயம். சதீஷ் பாபு இன்னும் திரும்பி வர வில்லை. அது வரையில் நீ விழித்திருக்க முடியுமா?"

பிஹாரி திடுக்கிட்டு, "நானா! என் தேகமெல்லாம் பழைய படி வலி எடுக்க ஆரம்பித்து விட்டது" என்றான்.

"பின் என்ன செய்வது பிஹாரி?"

"சமையல்காரனைக் கூப்பிட்டுச் சொல்லிப் போனால்............"

"வேண்டாம். பாபுஜிக்கு இந்தக் குளிரில் தொந்தரவு கொடுக்கக் கூடாது."

பிஹாரிக்கு விருப்ப மில்லா திருந்தும் சிறிது யோசித்து விட்டு, "சரி, நானே இருக்கிறேனே, வா, போவோம்" என்றான்.

சாவித்திரி எழுந்து இரண்டு எட்டு வைத்து விட்டு நின்று கொண்டு, "பிஹாரி, வேண்டாம். நீ போய்ச் சாப்பிடு. அதற்கப்புறம் போகலாம்" என்றாள்.

பிஹாரி சென்ற பிறகு அவள் அங்கேயே உட்கார்ந்து கொண்டாள். மௌனமாக இருள் மயமான ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். இன்று சதீஷைக் குறித்து அவள் கவலைப் பட்டாள். அவன் குடிகாரர் வசமானதைத் தன் கண்ணாலேயே கண்டாள். ஆகையால் அவள் மனம் வீட்டிற்குப் போவதற்கு இடம் கொடுக்க வில்லை. இந்த சதீஷ் செய்கையால் அவமானம் பொறுக்க முடியாமல் போகவே இந்த வேலையை விட்டுப் போய் விடுவதென்ற தீர்மானத்திற்கு வந்திருந்தாள். ஆனால் இப்போதோ அந்த சதீஷ் கெட்டுப் போவானே என்று கவலைப் படுகிறாள்! சதீஷின் தவறுகளை மறக்காமலும், அவனுக்கு வரப் போகும் கேடுகளுக்கு ஒரு வழி செய்யாமலும் அவளால் வீட்டுக்கு எப்படிப் போக முடியும்? பிஹாரி சாப்பிட்டு வந்த பிறகு, "பிஹாரி நீ போய்த் தூங்கு. நான் இங்கேயே இருந்து கொள்கிறேன்" என்றாள்.

பிஹாரி ஆச்சரியத்துடன், "வீட்டிற்குப் போக வில்லையா?" என்றான்.

"பாபு திரும்பி வரட்டும். அதற்கப்புறம் போக முடியாதா?

"ஏன் முடியாது? நன்றாகப் போகலாம்."

"அப்போ, அது தான் நல்லது. நான் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். நீ போய்த் தூங்கு."

பிஹாரி மகிழ்ச்சியுடன் சென்று விட்டான். சாவித்திரி ஒரு போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள். இங்கு வந்து போன இரண்டு குடிகாரர்களும் அவசியம் சனங்களிடம் சொல்வார்கள். இதில் அவளுக்குத் துளிகூடச் சந்தேகமில்லை. யாரும் இதை வேறு விதமாக நினைக்க மாட்டார்கள் என்பதிலும் அவளுக்குச் சந்தேகமில்லை. விபினை அவளுக்கு நன்கு தெரியும். அவன் இதைப் பற்றிக் கேள்விப் படுவான். அவன் இங்கு வரப் போக இருப்பதால்

இங்குள்ளவர்களுக்கும் தெரியாமல் போகாது. இதற்கப்புறம் சதீஷ் எந்த முகத்தைக் கொண்டு இங்கு தங்கியிருக்க முடியும்? இந்த அபவாதத்தை எவ்விதம் அவன் சகிக்க முடியும்? அசந்தர்ப்பமாக நடந்தது என்னவோ நடந்து விட்டது. இதற்கு மேல் அவளால் யோசிக்க முடியவில்லை. ஆனால் எவ்வளவு யோசித்தும் சதீஷ் சம்பந்தமாக அவள் மூளை வேலை செய்ய மறுத்து விட்டது.

மெள்ள மெள்ள இரவு நீண்டு கொண்டு வந்தது. ஆனால் சதீஷைப் பற்றி ஒரு தகவலும் இல்லை. அருகில் எங்கேயோ உள்ள கடிகாரத்தில் மணி இரண்டடித்தது. சந்தடி யற்ற ஆழ்ந்த இரவிலே கடிகாரத்தின் சத்தம் நன்கு கேட்டது. குளிர் காற்று அவளைத் தாலாட்டியது. இருந்தாலும் அவள் விழித்துக் கொண்டேயிருந்தாள். கோழி கூப்பிடும் நேரத்தில் வண்டிச் சத்தம் கேட்கவே திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். வண்டி வீட்டின் முன் வந்து நின்றது போலிருந்தது. சாவித்திரி பேசாமல் கீழே இறங்கி வந்து கதவருகில் நின்று கொண்டாள். வேறு யாராவதோ என்னவோ என்று கதவு திறக்கப் பயந்தாள். நேரம் ஆகத் தொடங்கியது; ஆனால் யாரும் கதவைத் தட்ட வில்லை. உடனே அவளுக்கு ஒரு சந்தேகம் உண்டாகியது, கதவைத் திறந்தாள். சதீஷ் நிலவு வாசற் படியருகில் துவண்டு கிடந்தான். அவனது முகம் வெளுத்துப் போயிருந்தது; கண்கள் மூடியிருந்தன. அவன் சட்டையில் சேறு படிந்திருந்தது. அவனது நெற்றியிலிருந்து ரத்தம் கசிவது கேஸ் லைட் வெளிச்சத்தில் நன்கு தெரிந்தது. இதைக் கண்டு சாவித்திரி மிகுந்த துக்க மடைந்தாள். உடனே அவள் அவன் எதிரில் வந்து மண்டியிட்டுக் கொண்டு, "பாபுஜி, மேலே வாருங்கள்" என்றாள்.

சதீஷ் தலையை அசைத்துக் கொண்டு, "முடியாது" என்றான்.

சாவித்திரி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு. "எங்கேயாவது காயம் பட்டு விட்டதா?" என்றாள்.

"இல்லை. என்னை விட்டு விடு."

"இது வீதியாச்சே. வீட்டிற்குள் வாருங்கள்."

சதீஷ் தலையை அசைத்துக் கொண்டு, "வர முடியாது" என்றான்.

சாவித்திரி சிறிது கோபமாக, "கேட்க மாட்டீர்களா? எழுங்கள், உள்ளே போகலாம்" என்றதும் அவனது சிவப் பேறிய கண்கள் திறந்தன. அவன் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு அவள் பக்கம் கையை நீட்டிக் கொண்டு, "வா" என்றான். அவள் தோளைப் பிடித்துக் கொண்டு எழுந்தான். பிறகு அவளுடைய உதவியால் இருட்டுக்குள் மெத்தைப் படியேறி அறைக்குள் வந்து படுத்துக் கொண்டான். தடுமாறும் குரலில் அவன், "சாவித்திரி! உனது நன்றியை நான் எந்த ஜென்மத்திலும் மறக்க முடியாது" என்றான்.

"சரி, நீங்கள் தூங்குங்கள்."

சதீஷ் உடனே எழுந்து உட்கார்ந்து கொண்டான். "என்ன? தூங்குவதா? ஒருக்காலும் முடியாது"

சாவித்திரி, "மறுபடியும் அதையே பேசுகிறீர்களே!" என்று மிரட்டினாள்.

சதீஷ் படுத்துக் கொண்டான். ஒரு கணம் பேசாமலிருந்து விட்டு, "ஆனால் உனது நன்றி..........." என்றான்.

சாவித்திரி, "சரி" என்று கூறி விட்டு விளக்கை எடுத்து காயத்தைப் பார்த்தாள். பிறகு, "எங்கே, எப்படி விழுந்தீர்கள்?" என்றாள்.

"இல்லையே, விழுவில்லையே!"

சாவித்திரி தழதழத்த குரலில் "இனி எப்பவாவது நீங்கள் சாராயம் குடித்தீர்களானால் உங்கள் காலிலேயே மண்டையை உடைத்துக் கொண்டு உயிரை விட்டு விடுவேன்" என்றாள்.

"இனி எப்பொழுதும் குடிப்பதில்லை."

"என்னிடம் சத்தியம் செய்யுங்கள்" என்று கூறி சாவித்திரி தனது வலது கையை நீட்டினாள்.

சதீஷ் தனது இரு கைகளாலும் அவளது குளிர்ந்த கரத்தைப் பிடித்துக் கொண்டு, "இதோ சத்தியம் செய்கிறேன். இனி எப்போதும் குடிப்பதில்லை" என்றான்.

சாவித்திரி கையை இழுத்துக் கொண்டாள்.

"ஞாபகம் இருக்குமா?" என்றாள்.

"ஞாபகம் இல்லா விட்டால், நீ ஞாபகப் படுத்து."

"சரி, நான் போகிறேன், நீங்கள் தூங்குங்கள்" என்று கூறி விட்டு சாவித்திரி மௌனமாகக் கதவை மூடி விட்டு வெளியில் வந்து நின்று கொண்டிருந்தாள். எதிரிலே ஆகாயத்தில் வெடி வெள்ளி பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் சாவித்திரி அழுது கொண்டு இரு கரங்களையும் கூப்பி, "ஆண்டவா! நீ தான் சாக்ஷி?" என்றாள்.

இரவின் இருள் மங்கிக் கொண்டு வந்தது. வீதியில் மாட்டு வண்டிகளின் 'கட புடா' சத்தமும் மாவு மில்லின் இரைச்சலும் கேட்கத் தொடங்கியது. சாவித்திரி வேகமாக கீழே இறங்கிப் போய் சமயலறையின் ஒரு மூலையில் போர்த்திப் படுத்துக் கொண்டாள். நித்திரை கெட்டிருந்ததால் படுத்ததும் அவளுக்குத் தூக்கம் வந்து விட்டது.

4

மணி பத்தாகி விட்டது திவாகர் குளித்து விட்டு சமயலறைக்கு வந்து, "ஜல்தியாகச் சாப்பாடு போடு; ரொம்ப நேரமாகி விட்டது" என்றான்.

உக்கிராண அறை அடுத்து இருந்தது. அவன் குரலைக் கேட்டு மகேஸ்வரி வெளியில் வந்து, "திவு! நான் உன்னைத் தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். மேலே கோவில் வீட்டுக்குப் போய் பூஜை செய்து விட்டு வந்து விடு. எல்லாம் தயாராக வைத்திருக்கிறேன். சிறிதும் நேரமாகாது"

மகேஸ்வரிதான் இந்த வீட்டுக்கு எஜமானி. விதவையாகி நான்கு வருஷமாகி விட்டது. அப்பொழுதிருந்து தகப்பன் வீட்டிலேயே இருக்கிறாள். திவாகர் அங்கேயே நின்று கொண்டான். "என்னால் முடியாது அக்கா! பூஜை செய்யப் போனால் இன்றும் காலேஜுக்கு ஒரு மணி தாமதமாகிவிடும்" என்றான்.

மகேஸ்வரி சிரித்துக் கொண்டு "காலேஜுக்கு ஒரு மணி தாமதமானால் என்ன? பூஜையின் பலன் கிடைக்குமல்லவா?" என்றாள்.

"பண்டிதர் எங்கு போய் விட்டார்? இன்றைக்கு அவருக்கு என்ன வந்து விட்டது?"

"அவர் அப்பாவோடு சதுரங்கம் விளையாடிக் கொண்டிருக்கிறார். எப்பொழுது எழுந்திருப்பார்களோ; அவர்களுக் கென்ன கணக்கு?"

"அக்கா, அண்ணாவிடம் சொல்லு; இன்று அவருக்குக் கச்சேரி கிடையாது."

"தீரேந்திரனுக்கு நேற்றிலிருந்து ஏனோ உடம்பு சரியாய் இல்லையே, பூஜை எப்படிச் செய்வான்?"

"ஆனால், சின்ன அண்ணாவிடம் சொல்லு; அவர் பனிரெண்டு மணிக்கு அப்புறம் தான் கச்சேரி போவார். இன்னும் அவருக்கு ரொம்ப நேரமிருக்கிறது."

மகேஸ்வரி கோபத்துடன், "உன்னோடு தர்க்கம் செய்ய முடியாதப்பா! நேற்று உபேந்திரன் நாடகத்திற்குப் போயிருந்தான். இன்னும் தூங்கி எழவில்லை. இந்நேரமாகியும் இன்னும் பல் கூட விளக்கவில்லை. ராத்திரி முழுவதும் விழித்திருந்ததால் உடம்புக்கு எப்படி இருக்கிறதோ? அதைத் தவிர அவன் எப்பவாவது பூஜை செய்திருக்கிறானா, இன்று செய்வதற்கு?"

சமையல்காரன் உணவு பரிமாறி விட்டு கூப்பிட்டுக் கொண்டிருந்தான்.

திவாகர், "தினம் தினம் புதிய புதிய தடை வந்து ஒவ்வொரு மணி வீணாகி விடுகிறது. நான் எப்படித்தான் பரீட்சை தேறுவேன்?" என்றான்.

மகேஸ்வரி மிகுந்த கோபமடைந்தாள். "பரீட்சை தேறா விட்டாலும் பரவாயில்லை. ஆனால் சுவாமிக்கு பூஜை செய்யாமலிருக்க முடியாது. உன்னோடு தர்க்கம் செய்து கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. வேறு வேலை இருக்கிறது" என்றாள்.

சமையல்காரன் மறுபடியும் "திபு பாபு! வந்து உட்காருங்கள். சாப்பாடு போட்டு விட்டேன்" என்றான்.

மகேஸ்வரி கோபத்துடன், "அடே, உனக்குத் துளி கூடப் புத்தி கிடையாது. நான் அவனை பூஜைபண்ணப் போகச் சொல்கிறேன், நீ சாப்பிடக் கூப்பிடுகிறாயே! தட்டுக்களை அப்பால் எடுத்துக் கொண்டு போ" என்று கூறி விட்டு உக்கிராண அறைக்குள் சென்று விட்டாள்.

திவாகர் சிறிது நேரம் கவலையுடன் நின்று கொண்டிருந்து விட்டு மேலே சென்றான். அங்கே பூஜைக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் தயாராக இருந்தன. வீட்டில் விஷ்ணுவின் சிலை பிரதிஷ்டை செய்யப் பட்டிருந்தது. தினசரி பூஜைக்கு புரோகிதன் நியமிக்கப் பட்டிருந்தான். அவனும் இந்த வீட்டில் தான் வசித்து வந்தான். எஜமானர் சிவப்பிரசாதரைப் போலவே அவரும் சதுரங்க விளையாட்டுப் பிரியர். சிவப்பிரசாதர் இப்போது உத்தியோகத்தை விட்டு விலகி பென்ஷன் பெற்று வருகிறார். காலையில் சாயா குடித்தானதும், "போனா, பூஜாரியைக் கூப்பிடு. ஒரு ஆட்டம் ஆடலாம்" என்பார். பிறகு, ஒரு ஆட்டம், இரண்டு ஆட்டம் என்று நடந்து கொண்டேயிருக்கும். பூஜாரிக்கு அப்புறம் பூஜை செய்ய நேரமிருக்காது. இதற்கு முன்பு மகேஸ்வரி ஆள் அனுப்பிப் பார்த்தாள். ஆனால் அவர்கள், "ஆச்சு வந்து விட்டேன்— இன்னொரு ஆட்டம்" என்று காலங் கடத்திக் கொண்டே இருப்பார்

கள். இதனுல் பூஜைக்கு ரொம்ப நேரமாகிவிடும்; யாரும் கவனிப் பதேயில்லை. தந்தைக்கும் உடம்பு சரியில்லாதிருந்தது. ஆட்டத்தில் அதை மறந்து சிறிது உற்சாகமாக இருப்பார் என்று மகேஸ்வரி கருதி திவாகரையே பூஜை செய்ய அனுப்பி வந்தாள்.

திவாகருக்கு சாயாக் காலையில் குடிக்கும் பழக்கம் கிடையாது. அதற்கு அவனுக்கு நேரமும் இருப்பதில்லை. தினம் காலையில் வேலைக்காரனேடு கடைக்குப் போக வேண்டும். இன்று கடை யிலிருந்து திரும்பி வந்து ஒருவாறு காரியங்களை எல்லாம் முடித்துக் கொண்டு சாப்பிடப் போய்க் கொண்டிருந்தான்.

திவாகர் பூஜை செய்ய உட் கார்ந்தான். ஆனல் அவன் உட் கார்ந்து கொண்டு, 'அந்நியர் வீட் டில் வசிப்பது இதுதான்' என்று நினைத்தான். அவன் நினைவு தெரிந் ததிலிருந்து இங்கு தான் வளர்ந்து வருகிறுன். கஷ்டங்களை சகிக்கும் சுபாவமும் ஏற்பட்டிருந்தது. இருந்தாலும் மனிதனை விட்டு நீங் காத மேலுக்கு வர வேண்டு மென்ற ஆசையானது அவன் உள்ளத்தை வாட்டியது. கோபத் தால் அவன் மனம் வெந்து கொண் டிருந்தது. சுவாமி தலையில் மந்தி ரம் ஒன்றும் சொல்லாமல் தண்ணீ ரை ஊற்றினுன்.

சந்தன புஷ்பங்களிடுவது, மணி யடிப்பது எல்லாம் அவனை அறி யாமல் அவன் கை செய்து விட் டது. ஆனல் கோபாக்கினியில் அகப்பட்டுக் கொண்டிருந்த வாய் மட்டும் ஒரு மந்திரம் கூடச் சொல்லவில்லை.

பூஜையை முடித்துக் கொண்டு எழுந்ததும், இன்று பூஜை சரிவர வே நடைபெற வில்லை என்பதை உணர்ந்தான். ஆனல் காலே ஜுக்கு இன்றும் அதிக நேரமாகி விடுமெனக் கருதி கீழே இறங்கி வந்தான். அவன் நேராகக் கீழி றங்கி வெளியே போவதைப் பார்த்த மகேஸ்வரி, "அடே, சாப் பிடவில்லையா?" என்றுள்.

"இல்லை, நேரமில்லை"

"ஆனல், காலேஜிலிருந்து சீக்கிர மாகத் திரும்பி வந்து விடு," என்றுள்.

திவாகர் ஒன்றும் பேசாமல் போய் விட்டான். வெளி அறை க்கு வந்து சட்டை அணிய அணிய அவன் கண்களில் நீர் நிறைந்தது. எதிர் அறையிலிருந்து சதுரங்கம் விளையாடுபவர்களின் சத்தம் கேட் டுக் கொண்டிருந்தது. யாரோ கதவு திறக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்; வேலைக் காரி நின்று கொண்டிருந்தாள். அவன் அவசரமாக கண்ணைத் துடைத்துக் கொண்டு, "ஏன்?" என்றுன்.

"அம்மா கூப்பிடுகிறுர்கள்."

"வருகிறேன், நீ போ."

வேலைக்காரி போன பிறகு, சிறிய டைம்பீஸை எடுத்துப் பார்த் தான். பிறகு கையிலிருந்த புத்த கத்தை மேஜை மீது வைத்து விட்டு சொக்காய் துணியால் கண்ணை நன்றுகத் துடைத்துக் கொண்டு உள்ளே சென்றுன்.

திவாகரை அழைத்து வரச் சொல்லி விட்டு சுரபாலா அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். திவாகர் அருகில் வந்து "ஏன்?" என்று கேட்டான்.

சுரபாலா தலையில் முக்காடு போட்டுக் கொண்டிருந்தாள். அவள் அதைச் சரி செய்து கொண்டு, "உள்ளே வா" என்று கையால் சமிக்ஞை செய்தாள். பிறகு ஒரு ஆசனம் விரித்து ஒரு

கிளாசில் பாலும் நாலைந்து ரசகுல் லாவும் கொண்டு வந்து வைத்து விட்டு, "இதைச் சாப்பிட்டு விட்டு காலேஜுக்குப் போ" என்ருள்.

திவாகர் பேசாமல் சாப்பிடு வதற்கு உட்கார்ந்து கொண்டான்.

அருகில் சின்ன அண்ணு உபேந் திரன் அரைத் தூக்கமாகக் கட்டி லில் படுத்துக் கொண்டிருந்தான். திவாகர் சாப்பிட்டுப் போன பிறகு, "என்ன விஷயம்?" என்று கேட்டான்.

சுரபாலா எச்சிலை சுத்தம் செய்து கொண்டிருந்தாள். "ஓ! நீங்கள் விழித்துக் கொண்டிருக் கிறீர்களா?" என்ருள்.

"நான் விழித்து இரண்டு மணி யாகிறது. பதினெரு மணிவரை யிலும் யாரால் தூங்க முடியும்?"

சுரபாலா சிரித்துக் கொண்டு, "நீங்கள் தூங்குவீர்கள் இல்லா விட்டால், இவ்வளவு நேரம் யாரா வது விழித்துக் கொண்டே படுத் திருப்பார்களா?" என்ருள்.

"எல்லோராலும் முடியாது தான்; ஆனல் என்னல் முடியும். இதற்குக் காரணம் என்ன தெரி யுமா? உலகத்தில் நித்திரையைப் போல சுகம் அளிக்கக் கூடியது வேறு ஒன்றுமேயில்லை. சரி, திவா கர்........."

"அவன் பசியோடு காலேஜுக் குப் போனுன், ஆகையால் இங்கு கூட்டி வந்தேன்."

"காரணம்?"

"கோபம்தான். காலையிலே படிக்க முடிவதில்லை; கடைக்குப் போக வேண்டும். திரும்பி வந்த தும், 'பூஜை செய்' என்கிருர்கள். ஒவ்வொரு நாளும் பதினெரு மணி, பன்னிரண்டு மணி ஆகிவிடுகிறது. நீங்களே சொல்லுங்கள், அப்பு றம் அவன் எப்படி படிக்கப் போவான்?"

"ஆம், நன்ருகத் தானில்லை! என்ன, பூஜாரிக்கு உடம்புக்குச் சரியில்லையா?"

"இல்லை, அப்பாவோடு சதுரங் கம் விளையாடுகிருர். இதில் அவர் பேரில் என்ன குற்றம்? அப்பா கூப்பிடும் பொழுது வர முடியாது என்று எப்படிச் சொல்லுவார்?"

"ஆம் வாஸ்தவம் தான். முன் அவர் தானே வேலைக்காரனேடு கடைக்குப் போய்க் கொண்டிருந் தார்?"

அவரிஷ்டமாகச் சில நாள் போய்க் கொண்டிருந்தார். இல் லா விட்டால் சிறிய மைத்துனர் தான் போவார்." என்ருள். உபேந்திரன் அவள் கூறுவதைக் கேட்டுக் கொண்டே மறுபுறம் திரும்பிப் படுத்தான். உடனே சுரபாலா, "அப்புறம் இதென்ன? மறுபடியும் என் திரும்பிப் படுக்கி றீர்கள்?" என்ருள்.

உபேந்திரன் மறுபடி ஒரு ஐந்து நிமிஷம் வரையிலும் பேசாமல் படுத்துக் கொண்டிருந்தான். பிறகு எழுந்து வெளியே சென் ருன்.

இன்று பூஜை சரிவர நடைபெற வில்லை என்று எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டே திவாகர் காலே ஜுக்குச் சென்ருன். அவன் மன தில் அதே எண்ணம் தான் அடிக் கடி தோன்றிக் கொண்டிருந்தது. எத்தனையோ அசந்தர்ப்பங்களிலும் அவன் பகவத் பூஜையைக் கை விட்டதில்லை. "கடவுள் ஒரு இடத்தில் நன்கு பூஜிக்கப் படாவிட்டாலும் இன் ெனரு இடத்தில் பூஜிக்கப் படுவார். இருந்தாலும் வீட்டுத் தேவதை கோபமடையத்தானே செய்யும்"

என்ற கவலை அவன் மனதை விட்டகல வில்லை.

காலேஜிலே புரபசர் வராததால் முதல் வகுப்பு நடை பெறவில்லை என்று கேள்விப் பட்டுச் சந்தோஷமடைந்தான். மாணவர்கள் பரிட்சை சமீபித்து விட்டதால் தாங்கள் காலேஜுக்கு ஆஜரான நாட்களை அறிய போய்க் கொண்டிருந்தார்கள். திவாகரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு போனான். ஆனல் ஆபீஸ் அறைக்கு எதிரில் வந்ததும் தான் பூஜையைச் சரிவரச் செய்யாதது ஞாபகத்துக்கு வரவே கால்கள் போக மறுத்தன.

"ஏன் நின்று கொண்டாய்?" என்று ஒரு நண்பன் கேட்டான்.

"இன்று வேண்டாம்!"

"ஏன் வேண்டாம்? இன்றே தெரிந்து கொள்ள வேண்டும்."

"போக வேண்டாம்" என்று கூறிவிட்டு திவாகர் திரும்பி விட்டான். இவன் ஆஜரானது சம்பந்தமாக பல சந்தேகங்கள் இருந்தன. அவைகளை எல்லாம் இன்று கிளறிப் பார்க்க அவன் மனம் உடன் படவில்லை.

சாப்பிடாமல் வந்தும் கூட அவனுக்கு வீடு சீக்கிரமாகச் செல்ல வேண்டு மென்ற விருப்பமில்லை. பல காரணங்களால் இன்று அவனுக்குப் பசியில்லை. வகுப்புக்கு வந்து பார்த்தான். அவனது தோழர்கள் ஏதோ வாதம் செய்து கொண்டிருந்தார்கள். அவன் வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டு கங்கையை நோக்கி நடந்தான். கங்கைத் துறை இடிந்து சிதறிப் போய்க் கிடந்தது. ஒரு காலத்தில் இதற்கும் உடல் இருந்தது; அதில் உயிரும் இருந்தது என அங்கங்கே குவிந்து கிடந்த செங்கற்கள் சொல்லிக் கொண்டிருந்தன. எந்தக் காலத்தில் யார் இதைக் கட்டினர்களோ, யார்யாரெல்லாம் இங்கு வந்து உட்கார்ந்தார்களோ, ஸ்நானம் செய்தார்களோ என்பதை யாரால் கூற முடியும்?

குளிரில் நடுங்கிக் கொண்டு வந்த கங்கை இந்தக் கட்டத்தருகில் சிறிது தங்கி இளைப்பாறுமல் ஒரே வேகமாகச் சமுத்திரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

கரையில் குவிந்திருந்த மணல் வெயிலைப் பொருட்படுத்தாமல் கங்கையைக் காத்து நின்றன. அந்தக் கரையிலே உள்ள மணல் வழியாக அவன் துறைக்கு வந்து சேர்ந்தான்.

ஒருபுறம் குவிந்திருந்த செங்கல் குவியலருகில் செருப்பை கழற்றி விட்டான். சொக்காயைக் கழற்றி வைத்து அதன் மேல் புத்தகத்தை வைத்து ஜலத்தில் இறங்கி தலையில் கங்கா ஜலத்தைத் தெளித்துக் கொண்டு வீட்டுச் சுவாமியை தியானித்தான்.

முதலிலிருந்து கடைசி வரையிலும் எல்லா மந்திரங்களையும் கூறி வணங்கிய பிறகுதான் அவன் மனதிலிருந்து ஏதோ பாரம் அகன்றது போலிருந்தது. சொக்காயை அணிந்து கொண்டு புத்தகத்தை எடுத்துக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பினன்.

பொழுது மறைய வில்லை. அப்பொழுது கூடப் பெண்கள் துறையின் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு தலையில் தைலத்தைத் தேய்த்துக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

★

புத்தக ஆராய்ச்சி.

★

[பிரீ இந்தியா தசரா மலர்: 'பிரீ இந்தியா' ஆபீஸ் சேலம்.
விலை ரூ. 1—8—0]

அழகிய ஆர்ட் காகிதத்தில் அறிஞர்களின் அருமையான கட்டுரைகளோடு வெளி வந்திருக்கும் இம்மலரில் எங்கே பார்த்தாலும் வர்ணப் படங்களும் சேர்ந்து தேஜோ மயமாகக் காட்சி அளிக்கிறது. சிறந்த விஷயங்களுடன் தசரா மலரைத் தயாரித்திருக்கிறார். ஸ்ரீ இ. ஆர். கோவிந்தன் அவர்கள். கலா ரசிகர்களுக்கு இது ஒரு இனிய விருந்து.

★

[தமிழ்ப் பெரியார்கள்: ஆசிரியர் வ. ரா. பிரசுரம்: தமிழ்ப் பண்ணை, தியாக ராய நகர், சென்னை.
விலை ரூ. 2—8—0]

"தமிழ்ப் பெரியார்கள்" என்னும் தலைப்புக் கொண்ட இந்தப் புத்தகத்தில் பனிரண்டு பேர்களைப் பற்றி ஆசிரியர் வ. ரா. மனம் போன போக்கில் எழுதி இருக்கிறார். மற்ற நாடுகளில் "குணச் சித்திரம்" எழுதும் ஆசிரியர்களின் நோக்கம் அந்த அந்த பெரியார்களுடைய இதயப் பாங்கை பொது மக்களுக்கு தெளிவாக காட்ட வேண்டும் என்ற மேலான கருத்தைத் தவிர வேறில்லை. அப்படி ஆராயும் உண்மையான விமர்சனத்தில் சொந்த விருப்பு—வெறுப்புக்கு துளி கூட இடமிருக்க நியாயமில்லை. ஆனால் தமிழ் நாட்டின் சாபக் கேடு வேறு விதமாயிருக்கிறது. சம்பந்தா சம்பந்தமில்லாத விஷயங்கள் மலிந்து கிடக்கின்றன. அதை யெல்லாம் அலசிப் பக்கத்தை வீணாக்க விரும்ப வில்லை நாம்.

★

[மிதிலைச் செல்வி: ஆசிரியர் ப. நீலகண்டன். பிரசுரம்: கலை வாணிக் கழகம், புதுக்கோட்டை.
விலை ரூ. 1—8—0]

கம்பனை அனைவரும் படித்து இன்ப மடைய வேண்டும் என்ற எண்ணத்தால் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கலைவாணிக் கழகத்தார் பதிப்புரையில் சொல்கிறார்கள். கம்பனுடைய இனிய பாக்களை எல்லோரும் அனுபவித்து ஆனந்த மடைய வேண்டியது தான். ஆசிரியருக்கு நாடு ஆதரவளித்தால் நல்ல முயற்சிகள் வளர்ந்து மேலோங்கும். எளிய நடையில் அமைந்த இந்தப் புத்தகத்தை யாரும் வாங்கிப் படிக்கலாம்.

★

சிலப்பதிகாரம்

சர்-ஆர்.கே.சண்முகம் செட்டியார்

அரங்கேற்று காதை

மாதவி என்னும் நாட்டியப் பெண் சோழ மன்னனுடைய சபையில் தன் ஆடல் பாடலை அரங்கேற்றிப் பரிசு பெற்றதும், மாதவியின் அழகைக் கண்டு மயங்கிய கோவலன் அவள் வீட்டை அடைந்து, அவள் மையலிலே மயங்கி தன் மனைவியையும் தன் வீட்டையும் மறந்ததும் — முதலிய செய்திகள் இந்த அரங்கேற்று காதையில் சொல்லப் படுகிறது.

பண்டைக் காலத்து தமிழ் மக்களுடைய வாழ்க்கையில், நாட்டியக் கலை மிகவும் சிறப்பாய் வளர்ச்சி பெற்றிருந்தது. மொழியை இயல் இசை நாடகம் என மூன்று வகையாகப் பிரித்து, நாட்டியக் கலைக்கு இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் ஒரு முக்கிய இடத்தைக் கொடுத்தது, தமிழ் மொழிக்குத் தனியாய் அமைந்த சிறப்பு என்று சொல்ல வேண்டும். சிவபெருமானை நடன மூர்த்தியாக வழிபடுவதும் தமிழ் நாட்டில் தான்.

ஒரு சமயத்தில் அகத்தியர் இந்திர சபைக்குப் போனார். தமிழ் முனிவராகையால், தமிழ் நாட்டுக் கலையாகிய நாட்டியக் கலையை அவருக்கு முன் நடத்தி அவரைக் களிப்பிக்க வேண்டுமென்று, இந்திரன் ஊர்வசியை நடனமாடும்படி செய்தான். நாட்டியமாடும் போது, சபையிலிருந்த இந்திரன் மகன் சயந்தன் மேல் ஊர்வசி மோகம் கொண்டு, அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். சயந்தனும் அதே நிலைமையில் இருந்தான். இதைக் கண்ட அகத்தியர் கோபங் கொண்டு இருவரும் மண்ணுலகத்தில் பிறக்க வேண்டுமென்று சாபம் கொடுத்தார். இது ஒரு கதை; ஆனால் இந்தக் கதையிலிருந்து ஒரு விஷயம் வெளிப்படையாகின்றது. தமிழ் நாட்டில் நாட்டியக் கலைக்கு புனிதமான இடத்தைத்தான் கொடுத்தார்கள்; ஆகையால் நாட்டியக் கலையை காமவிகாரத்தால் இழிவு படுத்தியவர்களுக்கு சாபம் நேர்ந்தது.

அகத்தியருடைய சாபத்தால் மண்ணுலகில் பிறந்த ஊர்வசியின் குலத்தில் தோன்றிய சித்திராபதி என்பவளுடைய மகள் மாதவி. தேவ மகளாகிய ஊர்வசியின் குலத்தைச் சேர்ந்தவர்களாதலால் இவர்

களுக்கு தேவ அடியார்கள் என்று பெயர் வந்தது. மாதவி பெருந்தோளும், நீண்ட கருங் கூந்தலுமுடைய கட்டழகி. அவளுக்கு ஐந்து வயது ஆன உடனே அவள் தாய் அவளுக்கு நாட்டியக் கலை கற்பிக்க ஏற்பாடு செய்தாள். ஏழு வருஷம் கலையைப் பயின்றாள் மாதவி. பனிரண்டாவது வயதில் ஆடல் பாடல் அழகு இம் மூன்றிலும் மாதவி சிறந்து விளங்கினாள். அவளுடைய கலையை சோழ மன்னன் முன்னிலையில் அரங்கேற்றுவிக்க விரும்பினார்கள்.

அரங்கேற்று காதையில் இசைக் கலை, நாட்டியக் கலை இவைகளின் இலக்கணத்தைப் பற்றி மிகவும் விரிவாகச் சொல்லப் படுகிறது. இந்தக் காதையில் வரும் அநேகம் கலைச் சொற்கள் இப்போது வழக்கத்திலில்லை. இவைகளின் சரியான பொருளும் விளங்கவில்லை. அடியார்க்கு நல்லாருடைய உரையைக் கொண்டு இலக்கியம், இசை, நாட்டியம் இம் மூன்றிலும் தேர்ச்சி யடைந்தவர்கள் எவ்வளவோ ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது. அநேகம் கலைச் சொற்களுக்கு பொருள் விளங்காத படியால், பதவுரை தெளிவாக எழுத முடியவில்லை. சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதியிருக்கும் **சிலம்புச் செல்வம்** என்னும் புத்தகத்தில், அரங்கேற்று காதையில் சொல்லப் பட்ட விஷயங்கள் கூடிய வரையில் தெளிவாக்கப் பட்டிருக்கிறது.

நடனப் பெண்ணான மாதவியின் லட்சணங்களைப் பற்றி முதலில் ஆசிரியர் சொல்லுகிறார்.

தெய்வ மால்வரைத் திருமுனி அருள
எய்திய சாபத்து இந்திர சிறுவனொடு
தலைக்கோல் தானத்துச் சாபம் நீங்கிய
மலைப்பு அருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பின் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பின் குன்றாப் பெருந்தோள் மடந்தை
தாது அவிழ் புரிகுழல் மாதவி தன்னை,
ஆடலும் பாடலும் அழகும் என்று இக்
கூறிய மூன்றின் ஒன்று குறை படாமல்,
ஏழாண்டு இயற்றி ஓர் ஈ ராறு ஆண்டில்
சூழ்கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி ;

பதவுரை

[தெய்வ மால்வரைத் திருமுனி — தெய்வத் தன்மை பொருந்திய உயர்ந்த மலையில் உள்ள அகத்திய முனிவர்; அருள — அருள் செய்ததால்; எய்திய சாபத்து — உண்டான சாபத்தையுடைய; இந்திர சிறுவனொடு — இந்திரன் மகனொடு; தலைக்கோல் தானத்து — நாடக மேடையில்; சாபம் நீங்கின — சாபம் நீங்கப் பெற்ற; மலைப்பு அரும் சிறப்பின் — வியப்பதற்கு அரிய சிறப்பினையுடைய; வானவர் மகளிர் — தெய்வ மகளிரின்; சிறப்பின் குன்றா — சிறப்பினின்றும் குறைவு படாத; செய்கையொடு பொருந்திய — நாடகத் தொழி

லோடு பொருந்திய; பிறப்பில் குன்று — தெய்வ மகளிர் குடிப்பிறப்பில் குறைவு படாத; பெருந் தோள் மடந்தை — பெரிய தோளையுடைய பெண்ணை; தாது அவிழ் புரிகுழல் — தாதுகள் உதிர்ந்து பிரிவு பட்ட கூந்தலையுடைய; மாதவி தன்னை — மாதவியை;

ஆடலும், பாடலும், அழகு என்று — கூத்தும், பாட்டும், அழகு என்ற; இக் கூறிய மூன்றின் — ஒன்று குறை படாமல்; ஏழு ஆண்டு இயற்றி — ஏழு ஆண்டு களாகப் பழகி; ஓர் ஈராறு ஆண்டில் — பன்னிரண்டாம் வயதில்; சூழ்கடில் மன்னற்கு — வீரக்கழலையணிந்த சோழ மன்னனுக்கு; காட்டல் வேண்டி — அவளுடைய நாட்டியத்தைக் காட்ட வேண்டி;]

★

நாட்டியப் பெண்ணின் அமைதியைச் சொன்ன பின் நாட்டியத்திற்கு வேண்டிய பல ஆசிரியர்களின் அமைதியைப் பற்றி ரொம்பவும் விவரமாகச் சொல்லுகிறார். இவர்கள் (1) ஆடலாசிரியன், (2) இசையாசிரியன், (3) நாட்டியக் கவிஞன், (4) தண்ணுமை ஆசிரியன், (5) குழலாசிரியன், (6) யாழாசிரியன்.

ஆடலாசிரியன்

இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து,
பலவகைக் கூத்தும் விலக்கினின் புணர்த்துப்,
பதினோ ராடலும் பாட்டும் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க அறிந்து ஆங்கு,
ஆடலும், பாடலும், பாணியும், தூக்கும்
கூடிய நெறியின கொளுத்துங் காலைப்
பிண்டியும், பிணையலும், எழிற்கையும், தொழிற்கையும்
கொண்ட வகையறிந்து கூத்துவரு காலைக்,
கூடை செய்தகை வாரத்துக் களைதலும்,
வாரஞ் செய்தகை கூடையின் களைதலும்,
பிண்டி செய்தகை ஆடலின் களைதலும்,
ஆடல் செய்தகை பிண்டியின் களைதலும்,
குரவையும் வரியும் விரவல செலுத்தி
ஆடற்கு அமைந்த ஆசான் தன்னொடும்;

பதவுரை

[இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து — அகக் கூத்து புறக் கூத்து என்ற இரண்டு கூத்துகளின் இலக்கணத்தைத் தெரிந்து; பல வகைக் கூத்தும் — பல வகைப் பட்ட நடனங்களையும்; விலக்கினின் புணர்த்து — 'விலக்கு' என்னும் பாட்டுகளுக்கு உறுப்பாய் பொருந்தும் படி செய்து; பதினோராடலும் — அல்லியம் என்பது முதல் கொடு

கொட்டி என்பது வரையிலுள்ள பதினொரு வகை ஆடல்களும்; பாட்டும் — அந் நாட்டியங்களுக்குத் தகுந்த பாடல்களும்; கொட்டும் — அக் கூத்துகளுக்கு வேண்டிய பலவகை வாச்சியங்களும்; விதி மாண் கொள்கையின் — நூல்களில் விதிக்கப் பட்ட உயர்ந்த கொள்கைகளை ஒட்டி; விளங்க அறிந்து — தெளிய உணர்ந்து;

ஆடலும் பாடலும் —; பாணியும் — அவைகளுக்கு ஒத்த தாளங்களும்; தூக்கும் — அத்தாளங்களில் பிறக்கும் வேறு வேறு தாளங்களும்; கூடிய நெறியின — இவையெல்லாம் ஒன்றேடொன்று பொருந்திய கூத்துகளை; கொளுத்துங் காலை — ஆடிப் பாடச் செய்யும் பொழுது;

பிண்டியும் — ஒற்றைக் கையைக் கொண்டு நடித்தலும்; பிணையலும் — இரண்டு கைகளையும் கொண்டு நடித்தலும்; எழிற்கையும் — அழகு பெறக் கை காட்டுதலும்; தொழில்கையும் — சில தொழில்கள் புலப்படும்படி கை காட்டுதலும்; கொண்ட வகை அறிந்து — இவற்றை அந்தந்தக் கூத்துக்குப் பொருந்திய வகையறிந்து; கூத்து வருகாலை — அவ்வக் கூத்து வரும் பொழுது; கூடை செய்தகை — ஒற்றையாகக் கொண்டு செய்த கையின் தொழில்; வாரத்துக் களைதலும் — இரட்டியில் செல்லாமலும்; வாரம் செய்தகை இரட்டியின் களைதலும் — இரட்டையாகக் கொண்டு செய்த கைத்தொழில் இரட்டிக் கிரட்டியினும் ஒற்றையினும் செல்லாமலும்;

பிண்டி செய்தகை — ஆடல் செய்யும் பொழுது; ஆடலின் களைதலும் — அபினயம் செய்யாமலும்; ஆடல் செய்தகை — அபினயம் செய்யும் பொழுது; பிண்டியின் களைதலும் — ஆடல் நிகழாமலும்;

குரவையும் வரியும் — குரவைக்கு ஆடும் கால் முறையும், வரிக் கூத்திற்கு ஆடும் கால் முறையும்; விரவல செலுத்தி — ஒன்றேடொன்று தடுமாறுமல் செய்து;

ஆடற்கு அமைந்த ஆசான் தன்னெடும் — இவ்விதம் இலக்கண முறைப்படி ஆட்டுவிக்கும் திறமையுடைய ஆசிரியனேடும்;]

★

இசையாசிரியன்

யாழும், குழலும், சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கித்
தேசிகத் திருவின் ஓசை கடைப் பிடித்துத்
தேசிகத் திருவின் ஓசையெல்லாம்
மாசு இன்று உணர்ந்த அறிவின னகிக்
கவியது குறிப்பும் ஆடல் தொகுதியும்
பகுதிப் பாடலும் கொளுத்துங்காலை

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
19970
சென்னை-600 008

35 வசை அறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
36 அசையா மரபின் இசையோன் தானும் ;

பதவுரை

[யாழும், குழலும் — யாழ் பாடலும், குழல் கருவியில் **பாடும்** பாடலும்; சீரும் — தாளத்தின் வகைகளைத் தெளியக் காட்டும் தன்மையும்; மிடரும் — வாய்ப் பாட்டும்; தாழ் குரல் தண்ணுமை — தாழ்ந்த ஓசையையுடைய மத்தளக் கருவியை வாசித்தலும்; ஆடலொடு — பதினொரு வகை ஆட்டத்துடனே;

இவற்றின் இசைந்த பாடல் — இவைகளுக்குப் பொருந்திய பாடல்களை; இசையுடன் படுத்து — இனிய இசையுண்டாகும்படி செய்து;

வரிக்கும் ஆடற்கும்—வரிப்பாடல் ஆடற்பாடல் என்ற இரண்டிற்கும்; உரிப் பொருள் இயக்கி — உரிய பொருள்களான இயக்கங்களைச் செய்து; தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்து — சொல் வகைகளின் ஓசை ஒன்றோடொன்று சேரும் முறையைக் கடைப் பிடித்து அறிந்து; தேசிகத் திருவின் ஓசையெல்லாம் — அப்படி இசை பொருந்துகின்ற வகைகளை யெல்லாம்; மாசு இன்று உணர்ந்த—குற்ற மில்லாமல் தெரிந்த; அறிவினன் ஆகி—;

கவியது குறிப்பும் — பாட்டைச் செய்த புலவனுடைய கருத்தும்; ஆடல் தொகுதியும் — ஆடலாசிரியன் பாட்டிற்குப் பொருந்த ஆடும் ஆடலும்; பகுதிப் பாடலும் — ஆசிரியன் கருத்தும் பாடலின் பொருளும் பொருந்தும் படியான பகுதியையுடைய பாடலும்; கொளுத்துங் காலை — ஆடுமிடத்து;

வசை அறு கேள்வி; குற்ற மற்ற நூல் முறைப்படி; வகுத்தனன் விரிக்கும் — இங்கு சொல்லப் பட்ட முறைகளை யெல்லாம் வகுக்கவும் விரிக்கவும் வல்ல; அசையா மரபின்—கெடாத சிறப்பினையுடைய; இசையோன் தானும் — இசையாசிரியனும்;]

★

நாட்டியக்கவிஞன்

37 இமிழ்கடல் வரைப்பின் தமிழகம் அறியத்
தமிழ் முழுது அறிந்த தன்மைய னாகி,
வேத்தியல், பொதுவியல், என்றிரு திறத்தின்
40 நாட்டிய நன்னூல் நன்கு கடைப் பிடித்து,
இசையோன் வக்கிரித்து இட்டதை உணர்ந்தாங்கு,
அசையா மரபின் அதுபட வைத்து,
மாற்றோர் செய்த வசைமொழி அறிந்து,
44 நாத்தொலை வில்லா நன்னூற் புலவனும்!

பதவுரை

[இமிழ்கடல் வரைப்பின் — ஒலிக்கும் கடலை எல்லையாக உடைய; தமிழகம் அறிய — தமிழ் நாட்டார் அறிய; தமிழ் முழுது அறிந்த தன்மையனாகி — இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழையும் அறிந்த தன்மை உடையவனாய்;

வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்தின் — வேத்தியல் பொதுவியல் என்று இரண்டு பிரிவினையுடைய; நாட்டிய நன்னூல் — நல்ல நாட்டிய நூலை; நன்கு கடைப் பிடித்து;

இசையோன் வக்கிரித்து இட்டதை உணர்ந்து — இசை நூற் புலவன் பாட்டின் இசைப் போக்கை அமைத்த முறையை உணர்ந்து;

ஆங்கு — அம்முறைப்படி; அசையா மரபின் அது பட வைத்து — அம்முறை கெடாத சிறப்போடு பொருந்தும்படி வைத்து;

மாற்றோர் செய்த — இம்முறைக்கு மாறானவர்கள் பிழைபடச் செய்த; வசை மொழி அறிந்து — பிழை மொழிகளையெல்லாம் தெரிந்து;

நாத் தொலைவு இல்லா — நாவின் வலிமையில் சிறிதும் கேடு இல்லாத; நன்னூல் புலவனும் — நாடக நூல்களைக் கற்றறிந்த ஆசிரியனும்;

வேத்தியல் என்பது வேந்தர் முன் ஆடும் நாட்டியம்; பொதுவியல் என்பது பொதுவான மற்ற இடங்களில் ஆடும் நாட்டியம்.]

★

தண்ணுமை ஆசிரியன்

ஆடல், பாடல், இசையே, தமிழே,
பண்ணே, பாணி, தூக்கே முடமே,
தேசிகம், என்று இவை ஆசின் உணர்ந்து,
கூடை நிலத்தைக் குறைவின்று மிகுத்து, ஆங்கு
வார நிலத்தை வாங்குபு வாங்கி,
வாங்கிய வாரத்து யாழும் குழலும்
ஏங்கிய மிடலும் இசைவன கேட்பக்,
கூர் உகிர்க் கரணம் குறியறிந்து சேர்த்தி,
ஆக்கலும் அடக்கலும் மீத்திறம் படாமைச்
சித்திரக் கரணம் சிதைவின்று செலுத்தும்
அத்தகு தண்ணுமை அருந்தொழில் முதல்வனும்;

பதவுரை

[ஆடல் பாடல் — எல்லா வகைக் கூத்துகளும் பாடல் இயல்புகளும்; இசையே — இசை வேறுபாடுகளும்; தமிழே — தமிழ் மொழிக்கு தனிப்படையாக உள்ள இயல் இசை நாடகம் என்னும் முத்தமி

மும்; பண்ணே, பர்ணி, தூக்கே — பண்களும், தாளங்களும், தூக்குகளும்; முடமே — இவற்றின் குற்றங்களும்; தேசிகம் — அந்தந்த நாட்டிலுள்ள சொல் வழக்கம்; இவை ஆசின் உணர்ந்து — இவைகளையெல்லாம் குற்றமறத் தெரிந்து;

கூடை நிலத்தைக் குறைவின்று மிகுத்து — ஓர் உருவை இரட்டிக்கிரட்டி சேர்க்கும் போது நெகிழாதபடி நிரம்ப நிறுத்தவும்; ஆங்கு வார நிலத்தை வாங்குபு வாங்கி — அந்த இடத்தில் பெறும் இரட்டியைபாக உருவான வழி நிற்கும்படி நிறுத்தி, கழியுமானங் கழிக்கவும் வல்லமை உடையவனாய்;

வாங்கிய வாரத்து — இப்படி நிகழ்ந்த உருக்களில்; யாழும் குழலும் — யாழ்ப் பாடலும் குழலின் பாடலும்; ஏங்கிய மிடலும் — ஒலி பொருந்திய கண்டப் பாடலும்; இசைவன கேட்ப — கேட்போர் செவிக்கு இன்பமாயிருக்க; கூர் உகிர்க் கரணம் — கூரிய நகத்தையுடைய விரலின் செய்கையால்; குறியறிந்து சேர்த்தி — குறியறிந்து சேர வாசிக்க வல்லவனாய்;

ஆக்கலும் அடக்கலும் — மற்றக் கருவிகளின் குறையை நிரப்புதலும், மிகுதியை அடக்குதலும்; மீத்திறம் படாமை — இவ்விதம் செய்யும்போது இசையில் இரந்திரம் தோன்றாமல் செய்தலும்;

சித்திரக் கரணம் சிதைவின்றி செலுத்தும் — இவைகளையெல்லாம் செய்யும்பொழுது கைத்தொழில் அழகு பெறச் செய்து காட்டலும் வல்லவனாய்; அத்தகு — அத்தன்மை யுடைய; தண்ணுமை அருந்தொழில் முதல்வனும் — தண்ணுமை கருவியின் அரிய தொழிலை உடைய ஆசிரியனும்;

முடம் — குற்றம்; கூர் உகிர் — கூரிய நகம்; கரணம் — செய்கை]

தண்ணுமைக் கருவிகள் தோலால் செய்யப் பட்ட கருவிகள். அடியார்க்கு நல்லார் உரையில் தண்ணுமைக் கருவிகள் எத்தனை வகைப்பட்டவை என்று சொல்லுகிறார். அவை:— பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை.

★

குழலாசிரியன்

56 சொல்லிய இயல்பினிற் சித்திர வஞ்சனை
புல்லிய அறிந்து புணர்ப்போன் பண்பின்
வர்த்தனை நான்கும் மயல் அறப் பெய்து, ஆங்கு
ஏற்றிய குரல் இளி என்றிரு நரம்பின்

ஒப்பக் கேட்கும் உணர்வினன் ஆகிப்,
பண் அமை முழவின் கண்ணெறி அறிந்து
தண்ணுமை முதல்வன் தன்னெடும் பொருந்தி,
வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்து, ஆங்கு
இசையோன் பாடிய இசையின் இயற்கை
வந்தது வளர்த்து வருவது ஒற்றி
இன்புற இயக்கி இசைபட வைத்து,
வார நிலத்தைக் கேடின்று வளர்த்து, ஆங்கு
ஈர நிலத்தின் எழுத்தெழுத் தாக
வழுவின்று இசைக்கும் குழலோன் தானும்;

பதவுரை

[சொல்லிய இயல்பினில் — நூல்களில் சொல்லப் பட்ட முறைப் படி; சித்திர வஞ்சனை புல்லிய அறிந்து — சித்திரப் புணர்ப்பு என்ற இரண்டு வகைக் கூத்தினையும் அறிந்து; புணர்ப்போன் பண்பின்— புணர்க்கவல்ல பாடலாசிரியனை ஒத்த அறிவுடையவனாய்; வர்த்தனை நான்கும் மயல் அறப்பெய்து — வர்த்தனை நான்கையும் தன்னிலை குலையாமல் காட்ட வல்லவனாய்;

ஆங்கு — அந்த இடத்தில்; ஏற்றிய குரல், இளி என்று இருநரம்பின் — குரல் நரம்பு இரட்டிக்க வரும் அரும்பாலையும், இளி நரம்பு இரட்டிக்க வரும் மேற் செம்பாலையும், இவை போல் அல்லாத பாலைகளையும்; ஒப்பக் கேட்கும் உணர்வினன் ஆகி — இசை நூல் வழக்கால் இணை நரம்பு தொடுத்துப் பாடும் அறிவினை உடையவனாய்;

பண் அமை முழவின் கண்ணெறி அறிந்து — பண்ணுதல் அமைந்த முழவின் கண்ணெறியை அறிந்து; தண்ணுமை புதல்வன் தன்னேடும் பொருந்தி — தண்ணுமைக் காரனேடு பொருந்தி; வண்ணப் பட்டை யாழ்மேல் வைத்து — நிறத்தையுடைய நரம்பினை யாழ்மேல் வைத்து; ஆங்கு — அதன் வழியே; இசையோன் பாடிய இசையின் இயற்கை — இசைக்காரன் பாடின பாட்டின் இயல்பை; வந்தது வளர்த்து — பண்ணின் வரவுகளுக்கு சுரம் குறைவு படாமல் நிறுத்தி; வருவது ஒற்றி — அந்தப் பண்ணுக்கு அயல் விரவாமல் நோக்கி; இன்புற இயக்கி — பாடலின் இயல் வழக்கெல்லாம் சுவை பொருந்தக் காட்டி; இசை படவைத்து — பண் இலக்கணம் நிரம்ப வைத்து; வார நிலத்தை கேடின்று வளர்த்து — வாரப் பாடலை அளவு நிரம்ப நிறுத்த வல்லவனாய்; ஆங்கு அப்பாடலிடத்தில்; ஈர நிலத்தின் எழுத்து எழுத்தாக — சொன்னீர்மைகளின் எழுத்துக்கள் சிதையாமல் எழுத்தெழுத்தாக இசைக்கும்; வழுவின்று இசைக்கும் குழலோன் தானும் — குற்றமில்லாமல் வாசித்துக் காட்டும் திறைமையுடைய குழலாசிரியனும்;]

★

யாழாசிரியன்

இனி யாழ் வாசிப்பவனுடைய லட்சணங்களைப் பற்றி சொல்லப் படுகிறது. தமிழர்களுடைய இசைக் கருவிகளில் யாழ் மிகவும்

மேன்மை பெற்றதென்று தெரியவருகிறது. யாழ் என்பது ஒரு நரம்புக் கருவி என்பதில் சந்தேகமில்லை. பண்டைக் காலத்து யாழ் உருவத்தில் எப்படியிருந்தது என்று இப்போது உறுதியாகச் சொல்ல முடியாது. இப்போது வழக்கத்திலிருக்கும் வீணை யாழைச் சேர்ந்த ஒரு கருவி என்பது பொதுவான அபிப்பிராயம். அடியார்க்கு நல்லாருடைய உரையில் யாழ் நான்கு வகைப்படும் என்று சொல்லுகிறார். அவையாவன: (1) 21 நரம்புகளுள்ள பேரி யாழ், (2) 19 நரம்புடைய மகர யாழ், (3) 14 நரம்புடைய சகோட யாழ், (4) 7 நரம்புடைய செங் கோட்டி யாழ். இப்போது வழங்கும் வீணை பெரும் பாலும் செங்கோட்டி யாழைப் போன்றது என்று சுத்தானந்த பாரதியார் அபிப்பிராயப் படுகிறார்.

யாழாசிரியனைப் பற்றி அடியே வரும் வரிகளுக்கு சரியாகப் பொருள் தெரிய வேண்டுமானால் தமிழ் இசையைப் பற்றிய கொள்கைகள் முதலில் தெரிய வேண்டும். திருவாளர் நா. மு. வேங்கிடசாமி நாட்டார் பதிப்பித்திருக்கும் சிலப்பதிகாரத்தின் 74 முதல் 81 பக்கங்களில் இந்த வரிகளின் உரையைப் பார்க்கலாம். இந்த உரையும் கூட சாதாரண மக்களுக்கு மிகவும் கடினமாகையால், இந்த வரிகளுக்கு இங்கே உரை கொடுக்க வில்லை.

ஈரேழ்தொடுத்த செம்முறைக் கேள்வியின்
ஓரேழ் பாலை நிறுத்தல் வேண்டி
வன்மையிற் கிடந்த தார பாகமும்
மென்மயிற் கிடந்த குரலின் பாகமும்
மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ளக்
கைக்கிளை ஒழிந்த பாகமும் பொற்புடைத்
தளராத் தாரம் விளரிக்கு ஈத்துக்
கிளைவழிப் பட்டனள் ஆங்கே கிளையும்
தன்கிளை அழிவுகண்டு அவள் வயிற் சேர
ஏனை மகளிரும் கிளைவழிச் சேர
மேலது உழையிளி கீழது கைக்கிளை
வம்புறு மரபிற் செம்பாலை ஆயது
இறுதி ஆதி யாக ஆங்கு அவை
பெருமுறை வந்த பெற்றியின் நீங்காது
படுமலை செவ்வழி பகர் அரும் பாலை எனக்
குரல் குரலாகத் தற்கிழமை திரிந்தபின்
முன்னதன் வகையே முறைமையில் திரிந்து ஆங்கு
இளி முதலாகிய எதிர்படு கிழமையும்
கோடி விளரி மேற்செம்பாலை, என
நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கையின்
இணை நரம்புடையன அணைவுறக் கொண்டு ஆங்கு
யாழ் மேற்பாலை இடமுறை மெலிய
குழல்மேற் கோடி வலமுறை மெலிய
வலிவும் மெலிவும் சமனும் எல்லாம்
பொலியக் கோத்த புலமையோன் உடன்;

(தொடரும்)

கொடியும் பூவும்

[கே. விஜயராகவன்]

அவள் அந்த ஆலமரத்து நிழலில் கால்களை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். செம்பான் அவள் மடியில் தலையை வைத்துக் கொண்டு ஒரு பக்கமாகச் சாய்ந்த வண்ணம் படுத்திருந்தான். அவள் அவன் தலையை லேசாக வருடிப் பேன் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த இன்பத்திலே அவனுக்கு தன்னை மறந்த ஒரு சின்னத் தூக்கம். அப்போது மாசி வெயில் கடுமையாகக் காய்ந்து கொண்டிருந்தது. இயற்கையாகப் பரந்து ஓங்கி வளர்ந்த அந்த ஆலமரத்தின் நிழலில், பக்கத்திலே உள்ள தென்னந் தோப்பிலிருந்து லேசாகக் காற்று வீசிக் கொண்டிருக்க அவள் மடியிலே தலையை வைத்துத் தூங்குவது அவனுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருந்திருக்க வேண்டுமோ!

இந்த நித்திரையும், இந்த இன்பமும் எவ்வளவு நேரம். இன்னும் கொஞ்ச நேரந்தான். அவனோ உழைப்பாளி. தூங்கிக் கொண்டிருக்க அவனால் முடியுமா? காலை முதல் உச்சிப் பொழுது வரை உடம்பை எரிக்கும் வெயிலில் பாத்திகளுக்கு நீரைப் பாய்ச்சுவான். அவன் இடுப்பிலே ஒரு துணியும் தலையிலே ஒரு முண்டாசும் தவிர வேறு உடுப்புக் கிடையாது. வாய்க்கால் வழியாகத் தண்ணீர் போகுமிடமெல்லாம் அவனும் போய்க் கொண்டிருப்பான். அவனுக்குத்தான் ஏதாவது உலக விசாரம் உண்டா? தன்னைப் பற்றித்தான் ஏதாவது சிந்திக்கிறானா? சற்று நாளிகைக்கொருதரம் அந்த விசாலமான நிலப்பரப்பை தன் கண்களால் அளந்து பார்ப்பான். பொழுது அடிச்சாய்வதற்குள் இவ்வளவு காடும் பாயவேணுமே என்ற கவலை தான் அவனுக்கு.

கிணற்றிலிருந்து எஞ்சின், குழாய் வழியாகத் தண்ணீரை இழுத்துக் கொட்டிக் கொண்டிருக்கும். அது மடமட வென்று வாய்க்கால் வழியாக வழிந்து ஓடி வந்து இவனுடைய கால்களையும் அணைத்துக் கொண்டு ஒவ்வொரு பாத்தியிலும் பிரவேசிக்கும். அந்த எஞ்சினுக்குத்தான் ஏதாவது சிந்தனை உண்டா? அதற்கு சக்தி உள்ளவரை தண்ணீரைக் கொட்டிக்கொண்டே இருக்கிறது. இடையில் யாராவது நிறுத்தினால் தவிர அது ஓடிக் கொண்டே இருக்கும். செம்பானும் அதைப் போலவே தான் வேலை செய்து கொண்டே இருப்பான்.

இந்தப் பரந்த உலகம். அதில் உள்ள எண்ணற்ற ஜீவராசிகள், இதைப் பற்றி அவன் சிந்தித்ததே கிடையாது. அவனுடைய உலகத்தில் அவனுடைய எசமான், எசமானி அடுத்தபடி அவள். இம்மூவரும் தான் இடம் பெற்றிருந்தார்கள். அவனை ஒரு அபூர்வப் பிறவி என்று சொன்னாலும் தகும். ஆறு அல்லது ஏழு வயது இருக்கலாம் அப்போது தான் மைனர் மயிலுச்சாமிக் கவுண்டர் பண்ணையத்தில் சேர்ந்தான். இப்போது அவனுக்கு வயது முப்பதுக்கு

மேல் ஆகிறது. இன்னும் அவன் அதே இடத்தில் தான் இருக்கி ருன். அவன் பஞ்சமன். அவனுக் குப் பெற்ருேர்களோ உடன் பிறந்தவர்களோ ஒருவரும் கிடை யாது. அவர்கள் பல வருஷங் களுக்கு முன்னதாகவே இவனை விட்டுப் பிரிந்து விட்டார்கள். அன்று முதல் இன்று வரை தன் எசமானையே காத்துக்கிடக்கிருன். அவனுடைய வாழ்க்கையே எச மானனுக்காகத் தான். அவருக் காக அவன் உயிரையே கொடுக்க வும் சித்தமாக இருக்கிருன். சுய நலத்தைக் கருதியா? இல்லை. எச மானருடைய தூய அன்பு அவனி டம் சுயநலத்தை வளர்க்கவில்லை. அப்படி அவனுடைய எசமானர் என்னத்தைச் செய்து விட்டார் என்று கேட்கிறீர்களா? அது தான் கதை.

* * *

மைனர் மயிலுச்சாமிக்கவுண் டரைப் பற்றியும் அவருடைய மயி லைக் காளைகளைப் பற்றியும் அந்த வட்டாரத்தில் நூறு மைலுக்குத் தெரியாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். அவரைவிட அவ ருடைய காளைகளுக்குத் தான் கியாதி அதிகம். அந்தக் காளைகள் ஒரு இடத்தில் நிறுத்தப் பட்டிருந் தால் ஜனங்கள் ஒரு தேர்க்கூட் டம் போலக் கூடி நின்று வேடிக் கை பார்ப்பார்கள். முதல் தர மான மோட்டார் வண்டிக்குச் சரியாக எத்தனையோ தடவை அவைகள் ஓடியிருக்கின்றன. அவைகளோடு போட்டியிட்டுக் காலொடிந்த குதிரைகளும், காளை களும் அநேகம். பந்தயங் கூறி தோல்வி அடைந்து அவமானப் பட்டவர் பலபேர்.

தாமரைக்குளம் கிராமத்திலே அவருடைய வீடு ஒன்றுதான் மிகப் பெரியது. அதோடு அவ ரும் பெரும் பணக்காரராக இருந் தார். கிராமத்திலே அவரைப் 'பெரியூட்டு அப்பன்' என்று குறிப்பிடுவார்கள். அவர் யாருக் கும் அஞ்சாத நெஞ்சு படைத் தவர். ஆனல் பிறருக்குத் தீங்கு செய்யக் கனவிலும் நினைக்க மாட் டார். அவருடைய சிரித்த முகம் எல்லோரையும் ஆட்டி வைக்கும். ஏழை எழியவர்களிடம் ரொம்ப வும் அன்பு உடையவர். அவர்க ளுக்கு கை கூசாமல் பொருளுதவி செய்வார். கலியாணங்கள் செய்து வைப்பார். அவருடைய ஆதரவில் பல பேர்கள் சுக வாழ்க்கை நடத்தினர்கள். அவர் அடிக்கடி விருந்துகள் நடத்துவார் அவருடைய வீடு அரண்மனையைப் போல எப்போதும் கலகலப் பாகவே இருக்கும். கேட்பவர்க ளுக்கு இல்லை என்று சொல்லாமல் கொடுப்பார். அடிக்கடி காளை கள் வாங்குவதும் விற்பதும் அவ ருக்கு ஒரு பைத்தியம்.

இத்தகைய செலவுகளால் அவ ருடைய செல்வம் நாளடைவில் குறைந்து விட்டது. அவருடைய மனைவி மாரக்காள் மகா உத்தமி எனப் பேர் பெற்றவள். கணவ னேடு போட்டி போட்டுக் கொண்டு ஏழை எழியவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தாள். கவுண்டர் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டு அறியாதவர். ஆனல் வாங்கிய பணத்துக்கு பூமி யை விற்றுக் கடனை அடைத்தார். ஒருவருக்கும் ஒரு சல்லிக் காசு கூட பாக்கி வைக்கவில்லை. இப் போது மிஞ்சியது எஞ்சின் தோட் டமும் அதைச்சேர்ந்த தோப்பும் மட்டுந்தான். எத்தனையோ பேர் அவரை விட்டுப் போய் விட்டார் கள். ஆனல் செம்பான் மட்டும் அவரை விட்டு நகர வில்லை. அதோடு அவர் மேஜராகிப் பல வருஷங்கள் ஆகியுங்கூட 'மைனர்' என்ற பட்டமும் அவரை விட்டுப்

போகவில்லை. கவுண்டருக்கு செம்பானிடம் அளவற்ற பிரியமும் நம்பிக்கையும் உண்டு. அவனுடைய பார்வையில்த்தான் எஞ்சின் தோட்டத்தை விட்டிருந்தார். அவனுக்குத் துணையாக இரண்டு சிறுவர்களை மட்டும் வைத்திருந்தார். செம்பானுக்கு கவுண்டர் வீட்டிலிருந்து தான் தினமும் சாப்பாடு போகும். மாரக்காள் அவனைத் தன் குடும்பத்தில் ஒருவனாகவே நினைத்திருந்தாள். அவனுடைய வஞ்சனையற்ற உழைப்பு அவர்களை அவ்வளவு தூரம் கவர்ந்து விட்டது.

மாரக்காள் கவுண்டரிடம் செம்பானுக்கு ஒரு கலியாணம் செய்து வைக்கும்படி அடிக்கடி சொல்லுவாள். கவுண்டருக்கும் ரொம்ப நாளாகவே அந்த ஆசை உண்டு. ஆனல் உள்ளூர்ச் சேரியிலுள்ளவர்களின் பழக்க வழக்கங்கள் அவருக்குப் பிடித்ததாயில்லை. அவர்களோடு சேர்ந்து செம்பானும் கெட்டுப் போவான் என்ற எண்ணத்தினல் நாள் நகர்ந்து கொண்டே வந்தது. "நம்ப செம்பானுக்கு எங்கெயாச்சும் ஒரு பொண் பொறந்து வளந்துகிட்டு இருப்பா! ஒரு நாளைக்கி வராமையா போரு?" என்று மாரக்காளுக்கு சமாதானம் சொல்லுவார். செம்பானுக்கு நல்ல விதமாகக் கலியாணம் செய்ய வேண்டுமென்பது கவுண்டரின் ஆசை. அவனுக்கு உரிய பெண் எங்கே இருக்கிருள்? அதுதான் அவருடைய கேள்வி.

* * *

செம்பான் ஒவ்வொரு வருசமும் செஞ்சேரி மலைத் (தென் சேரி கிரி என்றும் சொல்லுவார்கள்) தேருக்குப் போவது உண்டு. இந்த வருசமும் தேருக்குப் போயிருந்தான். தேருக்குப் போகும் போதெல்லாம் கவுண்டர் அவனுக்கு வேண்டிய பணம் கொடுத்து அனுப்புவார். மலையைச் சுற்றி வேடிக்கை பார்ப்பதிலும் கொடைத்தூரி ஆடுவதிலும் அவனுக்கு ரொம்பப் பிரியம். இந்த வருசம் கொடைத்தூரி ஆடுவதிலேயே உற்சாகமாக இருந்தான். குழந்தைகளும் கலியாணமான, ஆகாத ஆண்களும் பெண்களும், பெரியவர்களும் அந்தத் தூரியில் உட்கார்ந்து ஆடி, ஆடி ஆனந்தப் பட்டுக் கொண்டிருந்தார்கள். செம்பானுக்குத் தூரியை விட்டு நகரவே பிரியமில்லை. அவன் மட்டுமென்ன? கிராமத்துச் சனங்களே அப்படித்தான். தூரி சுற்றிச் சுற்றி வருவது அவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது.

அவன் பத்தாவது தடவையாக ஒரு சிம்மவாகனத்தின் மீது ஏறி உட்கார்ந்தபோது அவனுக்குப் பக்கத்தில் ஒரு இளம் பெண், குதிரை வாகனத்தின் மீது வந்து அமர்ந்தாள். தூரி சுற்ற ஆரம்பித்தது. முதல் இரண்டு மூன்று சுற்றுக்கள் மெதுவாகவே வந்தது. வரவர வேகம் அதிகமாயிற்று. செம்பானுக்கு ஒரே ஆனந்தம். அந்த ஆனந்தத்தில் தன்னை மறந்து சீக்கியடித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் மீது ஏதோ திடீரென மோதவே அவன் முதலில் பயந்தே போய்விட்டான்.

கவனித்துப் பார்க்கும் போது வேறுயாருமில்லை. அவன் பக்கத்திலிருந்த பெண்தான். தூரி வேகமாகச் சுற்றி வந்ததால் மயக்கம் வந்து அவன் மேல் சாய்ந்து விட்டாள். அவன் அவளை அப்படியே கைகளால் தாங்கிக் கொண்டான். அப்போது தூரி வேகமாகச் சுற்றி வந்துகொண்டிருந்தது. அந்த நிமிசம் அவனுக்கு இன்பமோ, துன்பமோ யாரால் சொல்ல முடியும்?

தூரி நின்ற போது தான் 'அப்பாடா' என்று ஒரு பெருமூச்சு விட்டான். அப்போதும் அவளுக்கு மயக்கம் தெளியவில்லை. மெதுவாகத் தூரியிலிருந்து இறக்கி வெளியில் கொண்டுவந்தான். வெளிக்காற்றுப் பட்ட கொஞ்ச நேரத்துக்குப் பின் அவள் லேசாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். அப்போது அவளுடைய தலை செம்பானுடைய மடிமேல்தானிருந்தது. தான் இன்னொருவர் மடிமேல் அதுவும் தனக்கு அறிமுகம் இல்லாதவன் மடிமேல் இருப்பதை உணர அவளுக்கே வெட்கம் வந்து கண்களை இறுக மூடிக் கொண்டாள். அவனைச் சுற்றிலும் நின்றவர்கள் ஒன்று அவனுடைய மனைவியாகவோ அல்லது தங்கையாகவோ இருக்கவேண்டும் என்று நினைத்தார்கள். ஒரு பெரியவர் தன் கையிலிருந்த விசிறியை செம்பானிடம் கொடுத்து அவளுக்கு கொஞ்சம் காற்றுப் படும்படி விசிறச் சொன்னார். செம்பான் லேசாக விசிறினான். கூட்டமும் சற்று விலகியது. அந்தப் பெண் சிவுக்கென்று எழுந்து உட்கார்ந்தாள். செம்பானை ஒரு பார்வை பார்த்து விட்டு தலையைக் குத்திக் கொண்டாள். செம்பான் போவதற்காக தன் உடையிலிருந்த மண்ணைத் தட்டிக் கொண்டு எழுந்திருந்தான். அவனுடைய கால்கள் நகரவில்லை. எதையோ தேடுபவன் போல அவன் கண்கள் மிரள மிரள விழித்தன. அவளும் புறப்படத் தயாராக எழுந்து நின்றாள். அவனுக்கு அவளை ஏதோ கேட்க வேணும் போலத் தோன்றியது. ஆனால் அவன் வாயிலிருந்து வார்த்தை வரவில்லை. அவள் இரண்டடி நகர்ந்தபோது தான் எங்கே போறே என்று தைரியமாகக் கேட்டு விட்டான். 'எங்கப்பங்கிட்டே' என்றாள்.

'உங்கப்பன் எங்கிட்டு இருக்கிறான்'?

'அவனா, அந்த மரத்துக்கடியே தூங்கியிட்டு இருப்பா.'

'தூங்கிட்டா!'

'ஆமா, நா தூரியாட வந்தப்போ அதோ அந்த மரத்து நிழல்லே படுத்து தூங்கிக்கிட்டு இருந்தா'

'அங்கிட்டு இப்பொக் காணமே'

'ஐயோ!'

இருவரும் அந்த இடத்துக்குப் பாய்ந்து சென்றார்கள். அங்கு அவன் இல்லை. இருவரும் மலையைச் சுற்றிலும் தேடி வந்தார்கள். கூட்டமாக இருந்த இடங்களிலெல்லாம் நுழைந்து நுழைந்து பார்த்தார்கள். அவன் இவர்கள் கண்ணில் படவேயில்லை. பொழுது சாய்ந்து விட்டது. நிலாக்கிளம்பி வெகுநேரம் வரைக்கும் தேடித் தேடி அலுத்துப் போய்விட்டார்கள். செம்பான் அவளைப் பற்றிய செய்தியெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டான். அவள் பெயர் செல்லி. அவளும் அவனுடைய சாதியைச் சேர்ந்தவள் தான். அவளுக்கு வயது சென்ற தகப்பனைத்தவிர வேறு யாரும் இல்லை. ஒரே பெண்ணாகையால் கிழவன் பிரியமாக வைத்திருந்தான். அவனும் அவளும் கூலி செய்து ஜீவனம் செய்து வந்தார்கள். அன்று தந்தையும் மகளும் தேர் பார்க்க வந்திருந்தார்கள், கிழவன் நடந்து வந்த அலுப்பில் மரத்தடியில் படுத்துத் தூங்கிவிட்டான். அவள் இளம் பெண் தானே. வேடிக்கை பார்க்கக் கிளம்பிவிட்டாள். அவன் தூக்கங் கலைந்து மகளைத் தேடிப் பார்த்தான். அவன் கண்ணுக்கு அவள் தென் படவில்லை. ஊருக்கே போயிருப்பாளோ என்று சந்தேகித்து

ஊர்ப் பக்கமாகக் கிளம்பிவிட்டான்.

இப்போது அவளுடைய தகப்பனைக் காணவில்லை. அவன் அங்கு இருந்தால்தானே? பொழுதோ ஏறிக்கொண்டே போகிறது. செம்பானுக்குப் பெரிய கவலை வந்துவிட்டது. அவளை என்ன செய்வது? விட்டுச் செல்வதா? தன்னோடு கூட்டிப் போவதா? அவள் வருவாளா? இந்தக் கேள்விகள் அவன் மனதில் எழுந்தன.

'நீ என்னோடு வாரியா' என்று அவன் ஆரம்பித்தான்.

'உஹூம்' என்று அவள் அழுதாள்.

'செல்லீ, இங்கிட்டுப்பாரு. உங்கப்பனை எங்கிட்டும் காணம். நீ ஊருக்குப் போறதுண்ணுப் போயிரு'

செல்லீ என்று அவன் பேர் சொல்லிக் கூப்பிடவும் அவளுக்கு வெட்கம் வந்து விட்டது. கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தாள்.

'என்ன பேசமாட்டே'

'ஒண்டியா, எப்படிப் போறது,

'அப்போ பேசாமே எம்பின்னேடே வந்திடு'

'உம்பின்னேடேயா? எதுக்கு''

'எதுக்கா'

'ஆமா அது தாங் கேக்கறது'

'செல்லி, விளையாடாதே. பொழுது கிளம்பரதுக்குள்ளே போகவேணும் தெரிஞ்சுதா''

'போறது'

செம்பான் நடந்தான். அவன் கொஞ்சதூரம் போகும் வரை செல்லி பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள். அவளுக்குத் துக்கம் பொத்துக் கொண்டு வந்தது. அப்பனையுங் காணும். இராத்திரி நேரம். என்ன செய்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை. இடையில் வந்த இவனை விட்டுப் பிரியவும் அவளுக்கு மனம் வரவில்லை. காந்தம் ஊசியை இழுப்பது போல அவளுடைய நெஞ்சையே அவன் பிளந்து கொண்டு போகிறான். எழுந்து பைத்தியக்காரியைப்போல் அவன் பின்னே ஓடினாள். அவன் கையை பிடித்து இழுத்து நிறுத்தினாள்.

'நீ என்ன ஆம்புளே. என்னே ஒண்டியா உட்டிட்டுப் போறயே'

'சரி, வா'

'எங்கே கூட்டியிட்டுப் போறே'

'எங்க ஊருக்கு'

'அங்கே யாரு இருக்கறுங்க'

'எல்லா இருக்குறுங்க'

'யாரு எல்லாம்'

'எங்கப்பன் அம்மா எல்லாம்'

'என்னெக் கூட்டிப் போறயே அவுங்க ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா'

'என்ன சொல்வாங்கோ, உன்னைக் கண்ணாலம் கட்டிக்கச் சொல்லுவாங்கோ'

இருவரும் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே அந்தக் காட்டு வழியிலே நடந்தார்கள். முதல் கோழி கூப்பிடும் நேரம் இருவரும் வழி நெடுகப் பேசிக் கொண்டே தோட்டத்தை அடைந்தார்கள். இவர்களுடைய சத்தத்தைக் கேட்டு நாய் ஒன்று குலைத்துக் கொண்டு வந்தது.

அது பக்கத்தில் வந்ததும்,

'அடே கருப்பா, என்ன சும்மா சத்தம் போடறயே' என்றான் செம்பான். தன் தோழனை

அறிந்து கொண்ட கருப்பன் வாலை ஆட்டிக் கொண்டே அவளை உற்றுப் பார்த்தான்.

'அவ, எம் பொஞ்சாதி. சும்மா பாக்காதே' என்றான் செம்பான்.

'உங்கோ அப்பன், அம்மா எல்லாம் எங்கே' என்றாள் அவள்.

'வெடிஞ்சப்பறம் வருவா. படுத்துத் தூங்கு' என்றான் அவன்.

ஆளுக் கொரு தென்னங் தடுக்கைப் போட்டுக் கொண்டு சாலையின் முற்றத்தில் படுத்துக் கொண்டார்கள். நடந்து வந்த அலுப்பினால் அவள் சீக்கிரம் கண் அயர்ந்து விட்டாள்.

செம்பானுக்குத் தூக்கம் வரக் கொஞ்ச நேரம் பிடித்தது. காலையில் எசமானன் வந்து அவளைப் பற்றிக் கேட்டால் என்ன சொல்வது என்று சிந்தித்த படியே தூங்கி விட்டான்.

* * *

கிராமத்தில் பொதுவாக எல்லாக் குடியானவர்களுமே எவ்வளவு செல்வம் உடையவர்களாக இருந்தாலும் சரி அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் தங்களுடைய வயலோ, தோட்டமோ எதுவானாலும் போய் சுற்றிப் பார்த்து வந்த பின்னிட்டுத்தான் மற்ற வேலை. ஆனால் மயில்சாமிக் கவுண்டருக்கு அந்தப் பழக்கமே கிடையாது. அத்தி பூப்பது போல அன்று மட்டும் அதிகாலையில் எழுந்து தோட்டத்துக்குக் கிளம்பி விட்டார். அன்று எழுந்திருக்கும் போதே அவருடைய மனதுக்கு உற்சாகமாக இருந்தது. காரணம் இன்னதென்றே அவருக்குப் புரியவில்லை.

ஆனால் இன்று காலையில் தோட்டத்துக்குப் போவதற்கு மட்டும் காரணம் இருந்தது. இராத்திரி ரொம்ப நேரம் வரை செம்பான் வரவில்லை யென்று தெரியும். அவன் வந்தானா என் வரவில்லை என்பதை அறியவே அவர் அதி காலையில் சென்றார்.

கவுண்டர் களத்தை அடைந்ததும் அவர் கண்ணில் பட்ட முதல் உருவம் செல்லிதான். அப்படியே மெய்மறந்து நின்று விட்டார் கவுண்டர். இளஞ்சூரியனின் பொன் கிரணங்கள் செல்லியின் முகத்தில் விளையாடிக் கொண்டிருந்தது. அவளுடைய முகப் பொலிவையும் அழகையும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை. அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். செம்பான் கொஞ்ச தூரத்தில் வைக்கோல் சுருணைகளை தலைக்கு வைத்துக் கொண்டு நித்திரை என்ற சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான். அவனுடைய முகத்தில் கவலை நிரம்பிய குறிகள் தென்பட்டன. கவுண்டருக்குச் சுய ஞாபகம் வரக்கொஞ்ச நேரம் பிடித்தது. அவருடைய உள்ளத்தில் அப்போது தோன்றிய கட்டுக்கடங்காத சந்தோஷத்தில் அவளை அப்படியே கட்டித் தழுவலாம் போலத் தோன்றியது. 'எஞ் சோசியம் சரியாப் போச்சு' என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தார் கவுண்டர்.

'என்னங்கோ காலங்காத்தாலே, செம்பான் வந்திட்டானா?'

'ஆமா, நம்ப செம்பானோடே ஒரு அழகான பொண்ணு வந்திருக்கறா. ராணிண்ணு அவளைத் தான் சொல்ல வேணும்.'

'அப்படியா! பாவம் ராத்திரி சாப்பாடு எங்கிட்டு சாப்பிட் டாங்களாம்'

'அட, அவுங்க இன்னம் தூங்க ருங்க. என்னப் பாத்தா வெக்கப் படுவாங்களா இல்லியா? நீ போயி சுருக்கா எல்லாத்தையும் விசாரிச்சிட்டுவா. சீக்கிரம் கண் ணாலம் செஞ்சு போடலாம்'

மாரக்காள் ஒரு பானை நிறைய பழய சோறு கரைத்துக் கொண்டு உடனே கிளம்பினாள் தோட்டத் துக்கு. அப்போதுதான் எழுந்த செல்லி அந்தப் புதிய இடத்தை வெருண்ட பார்வை யோடு சுற் றிச் சுற்றிப் பார்த்துக் கொண் டிருந்தாள். மாரக்காள் தாய்மை கலந்த பரிவோடு, 'வா அம்மணி, வா. பயப்படாதே' என்று அவ ளைக் கூப்பிட்டாள். எசமானி யின் குரலைக் கேட்ட செம்பான் சுருட்டியடித்துக் கொண்டு எழுந் திருந்தான். 'ஏண்டா, செம்பா நீ வருசா வருசம் கோயிலுக்குப் போனது வீணாப் போகுலையுடா எங்க பாரம் இண்ணக்கித் தாண் டா இறங்குச்சு. போங்க வாய்க் கால்லே பல்லெத் தேச்சிகிட்டு வாங்கோ, பழய சோறு குடிக்க லாம்' என்ற எசமானியின் வார்த் தைகள் அவனுக்கு ரொம்பவும் ஆறுதலாக இருந்தது.

மாரக்காள் கவுண்டரிடம் அவர்கள் சந்திப்பைப் பற்றிச் சொன்ன போது அவர் சிரி சிரி என்று சிரித்தார். அடுத்த மாதத் திலேயே செல்லியின் அப்பனையும் வரவழைத்து கலியாணத்தை களத் துச் சாளையிலேயே சிறப்பாக

நடத்தி வைத்தார். உள்ளூர் சேரி யிலுள்ளவர்களுக் கெல்லாம் முதல் தரமான விருந்து. கவுண் டரின் மேதையை அறிந்தவர்கள் அவரைப் போற்றினர்கள். செம் பான் கலியாணத்தை ஒட்டி அவர் ஊருக்கெல்லாம் ஒரு விருந்து வைத் தார். அவரைக் கண்டித்தவர் களும் கூட விருந்துக்கு வரத் தவற வில்லை. கவுண்டரும் மாரக்கா ளும் தங்களுடைய குழந்தை களுக்கு நடந்த கலியாணமாகவே பாவித்துச் சந்தோஷப் பட்டார் கள்.

* * *

சென்ற மாசம் தீபாவளிப் பண் டிகை வத்த தல்லவா? பாவம் இந்த இளந் தம்பதிகள் தீபாவ ளிக்கு எங்கு போவார்கள். செல் யின் தகப்பனும் கலியாணத்துக் குப் பின் இங்கேயே தங்கி விட் டான். கவுண்டர் மட்டும் தம்பதி களை மறந்து விடவில்லை. அவர்க ளுக்கு புதுவேஷ்டி சேலை எல்லாம் வாங்கிக் கொடுத்தார். மாரக் காள் பலகார பட்சணங்க ளெல் லாம் தன் பங்குக்கு அதிகமாகச் செய்து கொடுத்தாள்.

தீபாவளியன்று அதிகாலையில் இந்த இளம் தம்பதிகள் குளித்து விட்டு புதிய ஆடைகளை உடுத்துக் கொண்டார்கள். செல்லியின் அழகு அன்று அழகுக்கு அழகு செய்தது போல இருந்தது. அவள் அந்தக் காட்டு மல்லிகை மரத்தடி யில் அதைத் தழுவி நின்று கொண் டிருந்தாள். மருதை அவளுடைய கூந்தலில் காட்டு மல்லிகையை கொத்துக் கொத்தாக ஒடித்துச் சொருகி அழுகு பார்த்துக் கொண் டிருந்தான். பிறகு அவள் தாழ மடல் பக்கத்தில் போய் பூப்பறிக்க உட்கார்ந்தாள். சற்று தூரத்தி லிருந்து அதை வேடிக்கை பார்த் தான். அவனுடைய ஆசைக்கு எல்லை யில்லாமல் போய்க் கொண் டிருந்தது.

இரண்டு உருவங்கள் இந்தக் காட்சியைக் கண்டு ஆனந்தப் பட் டன.

பக்கத்தில் எசமானருடைய காலடியைக் கேட்டதும் செம் பான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த் தான்-

அப்படியே பொங்கி எழுந்த அன் பினல் கட்டுண்ட அவன் அவர் கால்களில் விழுந்தான். 'அடடே புதுவேட்டி யெல்லா, மணுகு தேடா' என்று அவனைத் தூக்கி மார்போடு தழுவிக் கொண்டார். அதைக் கண்டு மனம் பொறுத மாரக்காள் செல்லியைத் தன் அரு கில் இழுத்து கட்டி அணைத்துக் கொண்டாள். செல்லியின் கண்க ளிலிருந்து முத்துப் போன்ற கண் ணீர்த்துளிகள் அரும்பி உதிர்ந்தன. ஆனந்தத்தாலா, தாய்மை நிறைந்த மாரக்காளின் அன்பு அணைப்பி னலா?

எதுவானலென்ன?

தேவர்கள் பூமாரி பொழிய வில்லை. ஆனல் அந்தக் காட்டு மல்லிகை மரம் குலுங்க மலர்கள் பொலபொல வென உதிர்ந்தன!

★

பழகிய பாசம்

[ரா. நா]

நான் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காலம். இடைவேளை சாப்பாட்டிற்கு பிறகு என் வகுப்பிலிருந்து ஜன்னல் வழியாக வடக்கே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது வழக்கம். காரணம் அந்தப் பக்கம் காவிரி ஓடுகிருள் என்பதுதான். அதுவும் அவள் பூரித்து பெருமிதம் கொண்டு தவழ்ந்து துள்ளிக் குதிக்கும் பொழுது அவளுடைய பூரண சௌந்தரியத்தை அள்ளிப் பருகாமல் இருக்க முடியாது. சில சமயம் தத்தித் தத்தி, பெருகி என் பள்ளியின் வடபுறத்துச் சுவரை அவள் மெல்லிய கரங்களால் தட்டிக் கொடுப்பாள். மெய் மறந்து போன நிலையிலிருக்கையில் மணியடித்து விடும். பாடம் படிக்க வேண்டுமே என்று ஏங்கி என் உள்ளத்தை காவிரியிடம் பறிகொடுத்து விட்டு வந்துவிடுவேன். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு உபாத்தியாயர் என்ன சொல்லுகிருர் என்பது காதில் விழாது. அவளுடைய சலசலப்பு மிகுந்த அன்பழைப்புத்தான் ஒலித்துக் கொண்டிருக்கும். சில மணி நேரங்களில் பள்ளிக் கூடத்திலிருந்து 'அவிழ்த்து' விடுவார்கள். உடனே கிழே இறங்கி காவிரியிடம் சென்று கூடிக் கலந்து மகிழ்ந்து விட்டு இருள் குறுக்கிட்டவுடன் வீடு செல்வேன். இந்த சல்லாபம்' தினசரி நடந்தது.

*   *   *

என்னைக் காவிரியின் தனிப் பெருங் காதலனுக மதித்து இருமாந்திருந்ததில் ஒரு நாள் ஏமாற்றமடைந்தேன். எனக்கு அடுத்த வகுப்பில் இதே மாதிரி 'பித்து'ப் பிடித்தவர் ஒருவர் இருந்தார். ஒரு நாள் மணி யடித்தவுடன் ஜன்னலருகிலிருந்து எழுந்திருக்கையில் அகஸ்மாத்தாக அவர் கண்கள் என் கண்கள் சந்தித்தன. அன்று மாலை நான் ஜலக்கிரீடைக்குச் செல்லுகையில் அடுத்த வகுப்பு பேர்வழியும் வந்தார். சில நாட்களில் எங்கள் நேசம் வளர்ந்தது.

இந்த உள ஒற்றுமைக்குக் காரணம் நாங்கள் இருவரும் காதலித்த காவிரி என்பதை உணர்ந்தேன். வர்ணுசிரம தர்ம முறையில் நாங்கள் இருவரும் வெவ்வேறு ஜாதியினர். ஆனல் எங்கள் உள்ள எழுச்சியில் எங்களுக்குள் வேற்றுமையில்லை. இந்த நேசத்தில் ஒரு விசேஷம். நாங்கள் சுமார் நான்கு வருஷங்கள் ஒரே இடத்திலிருந்தோம். அதற்குப் பிறகு அவர் வேறு ஊருக்குச் செல்ல நேரிட்டது. நாங்கள் ஒன்ருயிருந்த நான்கு வருஷங்களில் நிரம்ப பேசியதில்லை ஆனல் படிக்கும் நேரம் தவிர இதர நேரங்களில் ஒருவரையொருவர் பார்க்காமலிருக்க முடியாது. காவிரிப் பெருக்கு குறைந்து எங்களை விட்டு அவள் விலகியிருக்கையில் பசுமை நிறைந்த வயல்களைக் கடந்து ரயில் பாதையோரமாய் கைகோர்த்துக் கொண்டு காவிரியை நோக்கிச் செல்வோம். அப்பொழுதும் ஒரே மௌனமாகத் தானிருக்கும். அந்திப் பொழுதானவுடன் "போகலாமா" என்று நானே அவரோ கேட்பதுண்டு. உடனே எழுந்து வீட்டுக்குத் திரும்புவோம், இப்பொழுதெல்லாம் நண்பர்களைக்

கண்டால் பேசாமலிருக்க முடிய வில்லை. பேசாமலிருப்பது அசம் பாவிதம் என்று தோன்றுகிறது. ஆனல் அந்த நாட்களில் பேசா மலிருப்பது இயற்கையாயிருந்தது. பேசியிருந்தால் அந்த இதய ஒப்பந்தம் முடிந்து போயிருக்கு மோ என்னமோ?

நண்பர் எங்கள் ஊரை விட்டுப் புறப்படும் போது அவரை வழி யனுப்பச் சென்றிருந்தேன். ரயில் புறப்படும் வரையில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந் தோம். ரயில் புறப்படும் சமயம் நான் விலகினேன். என்னை யறி யாமல் கண்களில் நீர் ததும்பிற்று. அதே சமயம் நண்பரும் கண்ணைத் துடைத்துக் கொண்டார். ரயில் புறப்பட்டது. அந்த 'ஆசை முகம்' மறைந்தது. கொஞ்ச நாட்களுக்கு எல்லாம் சூன்யமா யிருந்தது. அவரிடமிருந்து கடிதத் தை எதிர் பார்த்து நிற்பேன். கடிதம் வந்ததும் அதைப் பருகு வேன். ஒன்ருயிருக்கும் போது பேசாதவர்கள் நிரம்ப எழுதிக் குவித்தோம். ஆனல் நாளடைவில் எழுத்தில் சலிப்பு ஏற்பட்டது. காகிதங்கள் சிறுக ஆரம்பித்தன. எண்ணிக்கையும் குறைய ஆரம் பித்தது. அவ்வளவுதான் காட்சி யும் மறைந்தது.

* * *

சில வருஷங்கள் கழிந்தன. காலேஜ் மாணவன் அந்தஸ்துக்கு வந்தேன். அறிவு வளர்ச்சி, உள் ளத் தெளிவு கண்டேன். திருஷ்டி மாறியது. உலகம், மனிதர்கள் பற்றிய மதிப்பின் மாதிரியும் மாறியது. புதிய காலம் புதிய நண்பர்கள்.

நான் பி. ஏ. மாணவன். என் வகுப்பு ஆசாமிகளுடன் சேர்ந்து பழக்கம். என் நண்பர்களில் ஒரு வருடைய மருமகன் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தான். துருதுருப்பு ஜாஸ்தி. சதா பேசு வான். இருந்த இடத்தில் இருக்க மாட்டான். அலைந்து கொண்டே இருப்பான். அவன் நல்ல ஸ்திதி க்கு வருவான் என்று அவன் முகக்களை காட்டிற்று. ஒருநாள் எங்கேயோ ஒரு இடத்திற்கு அவன் ஒரு 'காலாடி'ப் பைய னுடன் சென்று கொண்டிருந்த தைப் பார்த்தேன். அவனுடன் சேர்ந்த இவனும் பாழாய்ப்போய் விடப் போகிருனே என்று கவலை ஏற்பட்டது. அந்தப் பைய னுடன் நான் அதற்கு முன் னம் பேசியதில்லை. அவனு டைய மாமனிடம் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். அவர் இவனைக் கண்டித்திருப்பார் போலிருக் கிறது.

ஒரு நாள் நான் கல்லூரி யிலிருந்து வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தேன். யாரோ பின் ஞலிருந்து 'ஸார்' என்று கூப்பிடு வது போலிருந்தது. திரும்பிப் பார்த்தேன். அவனே தான். "என் நண்பனைப் பற்றி என் மாமனிடம் தாறுமாருக கூறினீர்களாமே! எப்படிக் கூறி னீர்கள்?" என்று சரமாரியாகப் பொழிந்து தள்ளினன். அவன் கோபாவேசம் தணியும் வரையில் காத்திருந்து "தம்பி! நான் சொன் னது வாஸ்தவம் தான். நீ உன் நண்பனை யறியாமல் சற்று கவனி. பின்னர் தெரியும் அவன் உனக்கு உற்ற நண்பன என்பது. தவறு என்று தெரிந்தால் உன் மாமன் முன்னிலையில் மன்னிப்புக் கேட் டுக் கொள்கிறேன்" என்றேன். "சரி" என்று சொல்லி விட்டு வேகமாகப் போனன்.

சில நாட்களுக்குப் பின் என்னை சந்தித்து "நீங்கள் சொன்னது சரி தான். நான் பதட்டமாகப் பேசி

யதற்கு மன்னிக்க வேண்டும். இனி என்னை உங்கள் நண்பனாகக் கருத வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். அன்றிருந்து அவனும் நானும் தான் சேர்ந்து போவோம். என்னை விட ஏழு வயது சிறியவன். ஆனால் உலக விஷயமெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற ஆவல் ஜாஸ்தி. சிலகாலத்தில் சரிசமான மாகப் பேசக் கூடிய பக்குவமடைந்து விட்டான்.

எங்கள் வாழ்வு அன்றிருந்து ஒன்றுக் கொன்று பின்னிக் கொண்டுவிட்டது. எந்த விஷயமும் என்னைக் கேட்காமல் செய்ய மாட்டான். என் மேல் காத்து கூடப் படலாகாது அப்படிக் காப்பது அவனுக்கு இயற்கையாகப் போய்விட்டது.

* * *

இவ்வளவிலும் வாழ்க்கை லட்சியங்களில் இருவருக்கும் மாறுபாடு உண்டு. அந்த லட்சியங்களை மாற்ற வேண்டும் என்று நாங்கள் எண்ணியதில்லை. அவன் வாழ்க்கைத் துறையில் வெற்றி பெற்றான். அது கண்டு நான் பெருமிதம் கொள்வேன். அரசியலில் இறங்கி என் பெயர் அடி பட்டது. அச்சமயம் என்னைப் பாராட்டுவான். அரசியல் என்னை ரொம்ப தூரம் இழுத்துச் சென்ற நாட்களில் வெளித்தோற்றத்துக்கு எங்கள் தொடர்பு அறுந்து விட்டதோ என்று எண்ணும் படி இருந்தது. அந்தச் சமயம் அவன் எனக்கு எழுதினான். "நீங்கள் என் கைக்குக் கிடைத்த கனி என்று எண்ணினேன். அது என் கையை விட்டு நழுவி விடப் போகிறதா? இவ்வாறு என் மனம் அல்லல் படுகிறது" என்று எழுதினான்.

"அப்படியல்ல நான் உன்னிடமே இருக்கின்றேன். வாழ்க்கைக் கொந்தளிப்பு அடங்கியவுடன் இது நன்கு தெரியும், கவலைப் படாதே" என்று எழுதினேன்.

அவன் வடக்கே இருக்கிறான். குடும்பம் பெரிதாகி விட்டது. பொறுப்புக் கேற்ப சிற்சில சமயம் கவலையும் அதிகரிக்கும். இப்பொழுதெல்லாம் கடிதம் வருவதில்லை. ஒருவேளை நாளாக நாளாக ஓவியத்தின் ஒளி மங்குவது போல் நேசத்தின் தீட்சண்யம் மங்கி விட்டதோ என்று தோன்றியது. கடிதம் எழுதிக் கேட்டேன். அலைமோதிக் கொண்டு வருவது போல் பதில் வந்தது. "மறப்பதா? உங்களை எப்படி மறப்பது? என்னை ஆளாக்கினவரை மறப்பதா. குடும்பக் கவலை அதிகரிக்கையில் மனம் கடிதம் எழுதுவதில் ஒன்ற மாட்டேனென்கிறது. ஆனால் உள்ளம் பழைய நாட்களை நினைத்து ஆறுதலடைந்து உரம் பெருகிறது" என்று எழுதியிருந்தான்.

வாழ்க்கையில் துயரமில்லாமலில்லை. துயரமில்லையேல் தூய்மையில்லை. ஆனால் ஆளை அமிழ்த்தும் துயரம், தலை தூக்கும் சமயத்தில் கைதூக்கி, உள்ளத்தை உருக்கி என்னை மனிதனாக்குவது நேயனின் பாசம்தான். அதுதான் வாழ்க்கைக் கப்பலின் நங்கூரம்.

23. கப்ஸாபாய்

மனிதனிடம் மூன்று தத்துவ சரீரங்கள் உள்ளன— தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண் சரீரம்; தோல், எலும்பு, தசை, நரம்பு, இரத்தம், மூளை, இருதயம் அதில் துடிக்கும் உயிர் — இத்தனையும் சேர்ந்தே தூல தேகமாம். இத் தூல தேகத்தை நடத்தும் சக்தி சூக்ஷ்ம தேகம்; நுண்ணுடல். அதில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு தத்துவங்கள் உள்ளன. அவையே வாழ்வின் போக்கைத் தீர்மானிக்கின்றன. பொறி புலன்களை ஆளுகின்றன. மனம் எப்படியோ அப்படியே மனிதன் இருப்பான். மனம் போல மங்கலம். மனத்தை அடக்கியாளும் மனிதனே உண்மை மனிதன். யாரந்த மனிதன்? எங்கேயிருக்கிறான்? மனத்திற்கு மேல் ஒரு காரண தேகம் உள்ளது; அதிலே தான் மனிதனுடைய தெய்வத் தன்மைகள் அடங்கியுள்ளன. அதிலே தான் உண்மை மனிதன், மனிதனுள் மனிதன் இருக்கிறான். அவனையே பரிசுத்தான்மா என்று யோகிகள் அறிவர். உண்மை, அறிவு, இன்பம் — இதுவே அதன் சொரூபம். இந்த மூன்றினாலே தான் அதை அடையலாம். தியான, பக்தி சாதனங்களால் சூக்ஷ்ம சரீரமான அந்தக்கரணங்களை அடக்கி வென்று, மனம் அலையாமல், சித்தஞ் சுழலாமல், அகம்பாவம் கிளம்பாமல், புத்தி பேதிக்காமல் நிச்சஞ்சலமாக, சங்கல்பரகிதனாக, உபசாந்தனாக உள்ளே லயித்திருக்கப் பழகினால் அதுதான் யோகம்; யோகம் என்பது சூக்ஷ்ம தேகம் காரண தேகத்திலுள்ள சுத்தாத்மாவைப் பொருந்தி நிற்பதாம். ஆனால் யோகமே சாதனத்தின் முடிவன்று; யோகம் ஒரு இடைநிலை; யோகத்தின் சிகரம் ஞானம். சுத்தான்மாவுடன் இரண்டறக் கலந்த சுத்தசிவன், நித்திய ஞானானந்தப் பரம்பொருளின் அறிவே ஞானம். அந்த அறிவாயிருப்பது தான் ஞான நிலை; அதையே துரியநிலை, சுகானந்த நிலை என்பர். இந்த நிலையை எட்டிய மகான்கள் மிகச் சிலரே. கோடிக் கொருவரே. சரியை கிரியை, யோகம் ஞானம் என்று படிப்படியாக நமது சித்தாந்த முனிவர் இந்தச் சுத்த சுகானந்த நிலைக்கே வழி காட்டியிருக்கிறார்கள். அரிதாகச் சிலருக்கு பூர்வ ஞானத்தால் இந்நிலை வாய்க்கும்; சிலருக்குக் குருவருளால் சிறிது புலப்படும்; திருவருளாலேதான் இந்த நிலையை மனிதன் ஊகிக்கக் கூட வியலும். சுத்த சுகானந்தநிலை பெற்ற ஞானிகளைச் சுற்றி அருட்காந்தம் வீசும்;

அவர்கள் முன் அமர்ந்தாலே அமைதியுண்டாகும்; கவலை பறக்கும்; மனந்தெளியும். அவர்கள் சும்மா இருந்தாலும் எல்லையற்ற நன்மைகளை நுட்பமாகச் செய்தவராவார். அவர்கள் நினைத்தது நினைத்தபடியே நடக்கும். இத்தகைய மகான்களில் சட்டிச சாமியார் ஒருவர். அவர் நினைத்த மாத்திரத்தில் எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறார். ஆனால் அவர் தன்னை குருவென்று சொல்லிக் கொள்வதில்லை; சிஷ்யர்க் கூட்டம் சேர்ப்பதில்லை. எவரையும் தம் காலில் விழச் சொல்வதில்லை; யாருக்கும் தனி முறையில் உபதேசிப்பதில்லை. அவர் காற்றைப் போலத் திரிவார்; காற்றைப் போல நன்மை புரிவார். "தான், தனக்கு" என்ற அகம் பாவமும், ஆடம்பரமும், தடபுடல்களும் வரங் கொடுக்கும் நாடகமும் அவரிடம் இல்லை.

அவற்றை யெல்லாம் குத்தகை யெடுத்த திருமேனி இதோ வருகிறது பாருங்கள்— சாமி சுடலையாடி! சிரிக்காதீர்கள்! நெற்றிக் கண்ணைத் திறந்துவிடுவார்; சாமி சுடலையாடி யார்? ஊரென்ன? என்ன செய்வார்! கொள்கை என்ன, திறனென்ன? என்றெல்லாம் கேட்காதீர்கள் — அபசாரம். எல்லாம் அவர் திருவாக்கினின்றே அகம்பாவப் புயலாகக் கிளம்பும். அப்போது கை கட்டி வாய் மூடிக் கேளுங்கள்— சிரிக்காதீர்கள்— கவனம்! சாமி சுடலையாடிக்கு சிஷ்ய கூட்டம் உண்டு— ஆஷாடபூதிக் கூட்டம் என்று எதிரே சொல்லாதீர்கள். யோகதண்டம் உங்கள் மண்டையில் விழும். ஒன்று மட்டும் நினைப்பில் வைத்துக் கொள்ளுங்கள்—சிஷ்யர் கூட்டம் சாமியாரின் ஐந்தாம் படை.

"கெஸ்டாபோ" என்றால் பத்திரிகை படிப்பவர்களுக்குத் தெரியும்— நாஜி ஒற்றர். சாமியாரின் ஐந்தாம் படையை நாச ஒற்றர் என்றே மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். வெளியில் சொல்லாதீர்கள்— இவர்களுக்குச் சாமியார் பாடையில் (பாஷையில் அல்ல) "அடியார்கள்" என்று வழங்கும். அடியார்கள் என்றால் யாரையும் அடிக்க மாட்டார்கள். சாதுக்கள் பிறர் அடித்தாலும் சிவன் செயல் என்றிருந்து விடுவார்கள் என்று நினையாதீர்கள். அடியார்கள் என்பதில் 'அ' வை அழித்து விட்டு "த" வைப் போட்டு மனதிற்குள் வைத்துக் கொள்ளுங்கள்!

சிஷ்யர்களை நமது சித்தர்கள் என்பார் குரு; சித்தர்கள் பலே எத்தர்கள். பெரிய சித்தர் வாலைச் சாமி (வலைச்சாமி) இரஸவாதம் செய்து உங்கள் வீட்டுப் பாத்திரம் பண்டமெல்லாம் தங்கமாக்க வருவார். ஆனால் பாத்திரம் பத்திரம்; வீட்டுப் பெண்கள் கவனமாயிருக்க வேண்டும்; அடுத்தவர் மந்திர சித்தர். மந்திரம் போட்டு எதிராளியைக் கை கால் முறிப்பார். (மந்திரத்திற்குப் பின்னால் இருக்கும் குண்டர்களை எண்ணாதீர்கள்) அடுத்தவர் காந்தச் சித்தர். வசிய மருந்து தயாரிப்பார்; உப் என்று விபூதியை ஊத வேண்டியதுதான். ஆள் அவர் பின்னே வந்து விடுவான். மற்றொரு சித்தர் ஹோராபாய் குறி சோதிடம் சொல்வார். உங்கள் விஷயங்களை யெல்லாம் பக்கத்தில் விசாரித்துக் கொண்டே தான் வருவார். அவரை ஜடாபாய் என்றும் சொல்வார். அடுத்தவர் அகராதி சித்தர். சித்தாந்தங்களையும் அலசிப் பிழிவார். அவர் வாயைக் கிளப்பாதீர்கள்.

கதை நீண்டு போகும். அவர் சொல்லும் செய்யுளுக் கெல்லாம்

பதவுரை எழுதிக் கொண்டிருப்ப தாஞல் காயிதக் கட்டுப்பாட்டில் முடியாத காரியம். இன்னெரு சித்தருக்கு உளவு பார்க்கும் வேலே; ஊரில் பணக்காரர்களேப் பார்த்துச் சாமியாரின் சிந்துகளே யும் மகிமைகளேயும் ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லி ஆளே மயக்க வேண்டியது — இவருக்குப் பெயர் வாசாபாய் — நாம் கப்ஸா பாய் என்பது அவர் காதிற் படா திருக்கட்டும்; இன்றேல் நம் மைப் பற்றியும் கயிறு திரித்து அவருக்கு அடுத்துள்ள தண்ட சித்தரிடம் (தண்டப்ரயோக சித் தர்) காட்டிக் கொடுத்து விடுவார்; பலமான தடியாராதனே கிடைக் கும்: சாமி சுடலேயாடி தமது சி(எ)த்தர் கூட்டத்திற்குச் சரியான படி ஒத்திகை நடத்தி இன்னரிடம் இப்படிப் பணம் பறிக்க வேண்டு மென்று தயார் செய்து வைத்திருக் கிருர். ஊரில்யார் பண மூட்டை கனமாயிருக்கிறது. யார் ஏமாளி என்று மோப்பம் பிடித்தறிந்து கப் ஸாபாயை முதலில் அனுப்பி விட்டு இங்கே மற்றவர்களேத் தயார் செய்வார்.

சென்ற ஒரு வாரமாக சிவநே சம் நெல் மண்டியில் இந்தக் கூட் டம் புகுந்து தட புடல் செய் கிறது. சிவநேசர் பய பக்தியு டன் "சாமி வரட்டும்; வேண் டியதைச் சாப்பிடட்டும்; ஞான மொழி பேசட்டும்" என்று உபச ரிக்கிருர். மீஞக்ஷி கலியாணத்தில் குண்டோதரன் புகுந்தது போல் முகல் தெரு சாப்பாட்டுக் கடை யை ஆறு காலம் பூஜையால் காலி யாக்குகிருர்கள் எத்தர்கள். வயிறு தான் சாமி; அதற்குக் கவளங் கவளமாக அள்ளியடைப்பதே வழிபாடு — சுருக்கமாக சாப் பாடு தான் வழிபாடு; தூக்கந் தான் நிட்டை. ஒரு நாள் சிவநேசர் தன்னே மறந்து

எந்தவடி வாகிலும் வந்தென்னே
ஏன்றுகொள்
இருவினேயகற்று குருவே!

என்று கதறிக் கொண்டிருந்தார். கேட்டார் கப்ஸாபாய் — "பக்தா கவலே யொழி; பரமாசாரியார் வந்து விட்டார்; உனது பக்குவ நிலே கண்டு உபதேசிக்க வந்திருக் கிருர்" என்று ஆவேசமாகப் பேசி வந்தான்.

சிவ: சாமி வரட்டும், வணக் கம்...... நல்ல செய்தி; பரமா சாரியாரைத் தான் தேடித்தேடி எங்குகிறேன். என்னப்பன் எங்கே யிருக்கிருன்?

கப்ஸா: உன்னப்பன் கைலாசத் திற்குப் போய் மறுபடி உன்னே யும் கூட்டிச் செல்ல வந்திருக்கி ருன். அன்பா நம்மை நம்பு; உனக்குக் குரு தரிசனம் செய்து வைத்து முறையாக தீக்ஷையும் நடத்துகிறேம். குருநாதர் உன் மேல் மனங்கனிந்தார்; உன் மனேரதம் பலித்து விட்டது; அடி யாரை அன்பு செய்தாய்; இதோ குருநாதர் உன்னே ஆட்கொள்ளப் (ல்லப்) போகிருர்.

சிவ: சாமி குருநாதரே இங்கு வருவாரா?

கப்ஸா: உங்க வீட்டு நாய்க்குட் டியா? தோ தோ வென்ருல் வர? அது துரியானந்த நிலேயில், எட்டாம் மாடத்தில் கட்டை செத்து நிட்டையி லிருக்கிறது. நிட்டையிலிருந்தே மூன்றுலகி லும் உள்ள அடியார்களேக் காக்கிறது.

சிவ: அப்படியா? எப்படிக் காக் கிறது சாமி.

கப்ஸா: சாமியைச் சாமானிய மென்ரு நினேத்தாய்? பொன் ஞர் மேனியனே — மாற்றறி யாத பசும் பொன்னே (கொஞ்

சம் பாட்டு) அருவாயிருப்பவனே உருவாகி, குருவாய் வந்திருக்கிருன். பூத கணங்களெல்லாம் காற்றிலே மறைந்திருந்து அங்கே இட்ட கட்டளைகளைத் திட்டமாக நடத்து கின்றன.

சிவ: சாமி அதிசயமாயிருக்கிறதே! குருநாதர் பூதகணங்களுக்குக் கட்டளையிடுவதை நான் கேட்க முடியுமா?

கப்ஸா: ஆஹா! இரவு பனிரண்டு மணிக்கு மேலே வந்தால் தாராளமாகக் கேட்கலாம்.

சிவ: குருநாதர் என்னுடன் பேசுவாரா? அவரைப் பார்க்க வேண்டிய முறையென்ன?

கப்ஸா: சாமானியமாக அவரை ஊன் விழியாலே காண முடியாது; உனக்குக் கொஞ்சம் பக்குவ மிருப்பதால் குருநாதர் கிருபை செய்வார். ஒரு அரசனைப் பார்ப்பதானல் எவ்வளவோ வணக்கமும், காணிக்கையும் வேண்டும். மூன்றுலகிற்கும் அரசனுகி ஞானச் செங்கோல் நடத்தும் எமது குருநாதனைக் காணச் சில விதிகள் உண்டு.

சிவ: சாமி சொல்லட்டும்.

கப்ஸா: சொன்னபடி கேட்பாயா?

சிவ: சித்தம்.

கப்: ஆயிரம் பூதகணங்கள் அவருடன் வந்திருக்கின்றன; தலைக்கு இரண்டு ரூபாய் வீதம் இரண்டாயிரம் ரூபாய் குருதட்சிணை வைக்க வேண்டும். அஃதில்லா விட்டால் பூதகணங்கள் தொந்தரவு செய்யும்.

சிவ: பணம் மட்டும் போதுமா?

கப்: பணந்தான் முதன்மை. அதற்கு மேல் பாத பூஜைக்கு மலர்; மகேசுர பூஜைக்கு நல்ல கனிகளும் காப்பிக் கடை பலகாரமும் வேண்டும் — சாமி சோறு சாப்பிடுவதில்லை. அந்த வகையில் இருநூறு ரூபாய் ஆகும்; குருநாதருக்கும் அடியார்களுக்கும் அணிய ஆடைகள் தரலாம்.

சிவ: ஏதோ ஏழைக் கேற்றபடி செய்கிறேன்.

கப்: ஏழை கீழை யெல்லாம் அங்கே நடவாது. உனக்கு நல்ல செல்வமுள்ளது. பிக்கோவில் விளையும் நெல்லை என்ன செய்கிருய்? அடியார்களுக்கும் பரமாசாரியார்களுக்கும் அள்ளி விடேன்; உன் கருமந் தொலையும்.

சிவ: என்னுல் இயன்றதைச் செய்கிறேன்; குருநாதரை இன்றிரவு காணலாமா?

கப்: இந்த நாய்க்குட்டி போய், சந்நிதானத்தில் தெரிவித்து, அந்தச் சிங்கம் உத்தரவிட்டு, பிறகு தான் வரலாம்.

சிவ: சித்தம். குருநாதருடைய வரலாறு கொஞ்சம் சொல்லியருள வேண்டும்; பெயரென்ன? எந்த ஊர்?

கப்: சரி, உனக்காகச் சொல்லுகிறேன்; மனதில் வைத்துக் கொள். இந்தக் கலியுகத்திலே, இந்த நூற்றுண்டிலே உலகம் கெட்டுப்போனது; பணக்காரர்களெல்லாம் பணத்தைப் பூட்டி வைத்துக் கொண்டு, ஏழை பரதேசிகளுக்கு ஒன்றுந் தராமல் கருமித்தனம் செய்தனர். அதனுல் தருமம் குறைந்தது; அதனுல் ஆகாயத்தில் மேகம் படரவில்லை; அதனுல் மழை அரிதானது; அதனுல் பயிர் விளையாமல் பஞ்சம் வந்து விட்டது; எங்கும் கொலையும், திருட்டும்,

கொள்ளையும், சள்ளையும் வலுத்துப் போய் உலகம் பாபக்காடானது. உலகத்தைக் காப்பாற்றி மறுபடியும் தருமத்தை நிலை நாட்டிப் பணக்காரர்களையெல்லாம் ஒழுங்காக வைத்து ஏழைகளுக் கெல்லாம் நல்ல உணவு தந்து காப்பாற்றவே குருநாதர் தோன்றினர்; கருவில் தோன்றி பெண்ணுடகத்தில் வளர்ந்து, நீண்ட காலம் காசி மயானத்தில் தவம் புரிந்தார்; ருத்திர பூமிதான் (சுடு காடு) குருநாதர் ஆசிரமம். அங்கே உத்தூளனத்தை அள்ளிப் பூசிக் கொண்டு சிவ நாமங்களைச் சொல்லித் திரு நடனம் புரியும் சாமிக்கு நாங்கள் சுடலையாடி என்று பெயர் தந்தோம். மற்றபடி பெயர் உரு ஒன்றுமில்லை. அடியார்களுக்காகவே மானிடம் பூண்டு வந்தது வேறு உள்ளே எல்லாம் முப் பாழும் பாழ்! சூனியம்! சுடலைச் சாமியின் தபாக்கினியைத் தாங்க முடியாமல் பிரம தேவன் விஷ்ணுவிடம் ஓடி, விஷ்ணு திருக் கைலாயத்திற்கு ஓடி திருக் கைலாயம் காலியாயிருப்பதைக் கண்டு கௌரிசங்கரத்திற்கு ஓடி—தேவருடன் முறையிட்டார்கள். "அம்பிகே காசி மயானத்தில் யாரோ தவம் செய்கிறார். தவக் கனல் விண்ணுலகிற்குத் தாவி வந்து கொளுத்துகிறதே; சிவ பெருமானே எங்களுக்குப் புகல் அளிக்க வேண்டும்" என்று தேவர்கள் முறையிடவே பராசக்தியான உமாதேவி அபயமளித்து, பக்தர்காள் நமது பர்த்தாவே கைலையை விட்டுக் காசியில் தவம் புரியும் சுடலையாடியின் உடலில் இடங் கொண்டு திருவிளையாடல் நடத்துகிறார். இதோ நாமும் நமது தவ சக்தியை பர்மாவிற்கு அனுப்பப் போகிறேம். அங்கே தான் சிவலீலை முதலில் தொடங்கிப் பிறகு உலகெல்லாம் பரவும். நீங்களும் திருவருள் ஆணையைச் செய்யச் சித்தர் கணங்களாகச் சென்று உதவுங்கள் என்றாள் சிவகௌரி. உடனே தேவர்கள் சிவநாமத்துடன் கூடை கூடையாக மலர்களைக் கொண்டு வந்து காசி மயானத்தில் அசையா நிஷ்டை புரியும் சுடலையாடிச் சாமியின் மேல் தூவி வணங்கினர்கள். "தவம் பலித்தது; சிவம் புகுந்தது" என்று சுடலையாடி எழுந்தார். தேவர்கள் கையைக் கோத்து ஆனந்தக் கூத்தாடினர்கள். "சித்தர்காள் இனி நாம் உலகைக் காப்பாற்றப் போவோம்" என்று கிளம்பினர். பிறகு சிறிது நேரம் சிந்தித்தார். "ஆ, மங்கமாரித் தெருவில் நமது பக்தன் இருக்கிறன். நேரே இரங்கோன் சுடுகாட்டிற்குச் செல்வோம்" என்று இங்கே வந்தார். ஒரு வாரமாக நிட்டை கலையவில்லை.

சிவ: சுடலைச் சாமியின் சித்தர் யார்?

கப்: நாம் ஒருவர்; இன்னும் எழுவர் உண்டு; எல்லாரும் பெரிய சித்தர்கள். மந்திரம் தந்திரம், ரசவாதம், ககன குளிகை எல்லாம் தெரிந்தவர்கள். சாதாரண மனிதர் போலத்தான் இருப்பார்கள். உன்னைச் சோதிக்க பல வேடமும் காட்டுவார்கள். பேசாமல் குருநாதன் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உடல் பொருள் ஆவி யெல்லாம் திருவடிக்கே தந்து விட்டால் பிறகு உனக்கு ஒரு தொல்லையுமில்லை. உடனே சிவசாயுச்சியம் கைமேல் கனியாகக் கிடைக்கும்.

சிவ: எல்லாம் குருநாதனுக்கே அர்ப்பணம்.

கப்: அர்ப்...... பணந்தான்

வேண்டும். அஃதிருந்தால் உன்னையே மாற்றிவிடுவார். சரி அன்பினால் உனக்கு அதிகமாகச் சொல்லி விட்டோம். நாளையிரவு 10 மணிக்குத் தயாராயிரு. சித்தர் கூட்டம் வந்து குருவினிடம் அழைத்துச் செல்வோம்.

இத்துடன் கப்ஸாபாய் விடை பெற்றுச் சென்றார். பிறகு மந்திர சித்தரும், ஹோராபாயும் வந்து இதற்கு மேல் பல கட்டுமானங்கள் செய்தனர். மந்திர சித்தர் ஒரு மந்திரக் குளிகை தந்தார். சிவநேசர் உடனே சாப்பிட்டார். பிறகு அப்படியே படுத்தார். விடிந்து தான் நினைவு வந்தெழுந்தார். அதனிடையே சித்தர் கூட்டம் வீட்டைச் சுற்றிப் பார்த்து ஏதேதோ சாடை பேசிச் சென்றது. மறுநாள் வாலைச் சாமி பொன் வலை விரித்து ஆளை மயக்கி விட்டார்.

24. வாலைச்சாமி வேலை

வாலைச்சாமி: "அடே சிவநேசம், உன் சொத்து எவ்வளவிருக்கும்?

சிவ: சாமி இங்கே நிலமாக லட்சம்; ரொக்கமாக இலட்சம்; ஈப்போவில் என் மூத்த மகன் இரண்டு லட்சத்திற்கு லேவா தேவி செய்கிறான்; இராமநாதபுரம் கடையில் ஒரு லட்சம் ஆக ஐந்து லட்சம் மதிக்கலாம்.

வா: பூ! இவ்வளவு தானா? எத்தனை வருஷம் தொழில் செய்கிறாய்?

சிவ: சாமி முப்பது வருஷமாக.

வா: பூ! முப்பது வருஷமாகத் தொழில் செய்து ஐந்து லட்சந் தானா?

சிவ: சாமி தருமத்திற்கு எட்டு லட்சம் செலவிட்டிருக்கிறேன்.

வா: பூ! என்ன பிரமாதம்; நாம் குருநாதர் ஆணையிட்டு நமது வாலை வேலை செய்தால் ஒரு நாளில் ஒன்பது லட்சம் வருமடா! உன் வீட்டுப் பாத்திர பண்டமெல்லாம் பொன்னாகும். கல்லும் கண்ணாடிச் சில்லியும் நவமணித் திரளாகும். நமது வாத சக்தி உனக்குத் தெரியாது. வேண்டுமானால் பார்க்கிறாயா?

சிவ: நமக்கேதுக்குச் சாமி வாதமும் பித்தமும். நியாயமாகச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு பிழைத்துத் தான தருமமும் செய்து கட்டை இருக்கு மட்டும் ஒழுங்காக இருந்து சிவபதஞ் சேர்வோம்.

வா: அசட்டுப் பேச்சு பேசாதே; பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை; பணம் பத்தும் செய்யும்; பணமுண்டானால் பவிஷுண்டு; இனமுண்டு. சிவநேசம் நாம் உன்னைக் கோடீசுவரனாக்குவோம். நமது வாலை சாமானியமன்று; அதற்கு மட்டும் சரியான பூசை வைத்தால் மண்ணைப் பொன்னாக்கும். உன் உடலைக் கூடப் பொன்னாக்கும், பார்க்கிறாயா ஒரு சோதனை.

சிவ: சித்தம்.

வாலைச்சாமி 1835-ல். அடித்த அரையணா, காலணா நாணயங்களைக் கொண்டு வரச் செய்தார். கோளிக்கீரை, குப்பமேனி, மணத்தக்காளி, துத்த நாகம், சீனைக்காரம் இன்னும் என்னென்னமோ போட்டுருக்கிப் புடம் வைத்தார். செம்பு களிம்பு நீங்கிப் பளபளத்தது. அதை ஒரு கரியடுப்பில் வைத் துருக்கி வாலை வரப் போகிறாள். எல்லோரும் வெளியே செல்லுங்கள் என்று கதவை மூடிக் கொண்டு, அடி வாலாம்பா, செம்பைப் பொன்னாக்கு; இன்னும் ஒரு மாதம் இங்கு அருவா

யிருந்து வாதம் சோதி பெறச் சொக்கத் தங்கம் அருளடீ! பாலாம்பா, பகவதி நீலி ஓம் ஹம் ஹும் ஹம்படேஸ்வா ஹா! என்ருர். பக்தா உன் செம்பு பொன்ஞகச் செய்கி றேன் என்ெருரு கீச்சுக் குரல் கேட்டு மறைந்தது. வாலைச் சாமி கதவைத் திறந்தார். கற் பூர தீபாராதனை செய்தார். சிவ நேசம் இதோ பார்! என்று காட்டினர். ஆம், பள பள வென்று பொன் மின்னியது. சிவநேசம் மயங்கி விட்டார். மனித மனந்தானே. சிவநே சம் இப்படியே இரும்பையும் பொன்ஞக்குவோம். நம்மை நம்பி நமது குருவைச் சரண் புகு. பார் ஒரே மாதம்; பிறகு அடையாள்மே தெரியாமல் மா றிப் போவாய்; உன் களஞ்சிய மெல்லாம் பொன்ஞகும். மேனி யெல்லாம் பொன்ஞகும்.

சிவ: சாமி சித்தம் போல நடக் கட்டும்.

வா: நமது சித்த மில்லையப்பா; எல்லாம் குருநாதர் சித்தம். அவர் சொல்லுக்கு வாலை ஆடு வாள்; அவள் சித்தம் இந்த நாய்க் குட்டியை ஆட்டுகிறது. ஆட்டினல் யாரொருவர் ஆடா தாரே..........தானனஞனன ஞ...னனஞ.........

[கழுதைக் காம்போதி ஒரு பெரிய கனைப்பு] தெரிந்ததா?

சிவ: ஏழைக் கென்ன தெரியும்; சாமி விட்ட வழி செல்லு கிறேன்.

வா: அப்படிச் சொல் அன்பா. இன்றிரவு வாலைக்கு 5000 காணிக்கை கொண்டா. வெள்ளி யாக கொண்டா அத்தனையும் செடிப் பவுனும் மோகராவு மாக்கி விடுவோம். குருநாதர் தொட்டால் போதும்.

சிவ: சித்தம்.

வா: சரி, இரவு ஒன்பது மணிக் கெல்லாம் தயாராயிரு. அடி யார் வந்ததுமே பேசாமல் பின்னே வந்து விடவேண்டும். தாமதித்தால் அங்கே மந்திரம் நஷ்டமாகும். பரமாசாரியாரி டம் உன்னைப் பற்றிச் சொல்லு கிருேம். சரி, நமது சித்தர் செல்வுக்கு முப்பது ரூபாய் தா. சிவோ ஹம் ஓம் வாலை.

சிவநேயம் முப்பது ரூபாய் தந் தார். வாலைச்சாமி உடனே அங் கே காத்திருந்த வண்டியிலேறிச் சிட்டாய்ப் பறந்தார்.

25. கந்தன் எச்சரிக்கை

சிவநேசம் மயங்கிப் போஞர். தங்கத்தைக் கண்டதும் பெட்டி யடிச் சுப்பையாவும் மயங்கிப் போஞன். பண வசூல் வேலன் மட்டும் சாமியார் பின்ஞலேயே பதுங்கிச் சென்று உளவு பார்த் தான். வாலைச்சாமி கஞ்சாக் கடையில் நுழைந்து பூரணுதியும் சாராயக் கடையில் இரண்டு பெட் டியும் வாங்கிக் கொண்டு சந்து பொந்தெல்லாம் நுழைந்து விரை வதைப் பார்த்து விட்டான். வேலனை அதற்கே கந்தன் அனுப் பிஞன். கந்தன் விழித்த பேர் வழி; உலகை இடை போட்டுப் பார்த்தவன்: அவனை யாரும் ஏமாற்ற முடியாது. அவனுக்கு கடவுளன்புண்டு; ஆனல் தாமே கடவுள் என்றும் தம்மையன்றி யாரும் கடவுளைக் காண முடியா தென்றும் உலகை ஏமாற்றி அடி யார் கூட்டம் போட்டு உலகை அடிமைக் கூட்ட மாக்கும் பேர் வழிகளிடம் அவனுக்கு துளியும் நம்பிக்கை யில்லை. கந்தன் தமி ழும் ஆங்கிலமும் நன்ருகப் படித் தவன்; வேதாந்த சித்தாந்த நூல் களை உருப் போட்டவன்; சாமி யார் கூட்டங்களிலும் சுற்றிப்

பார்த்து அனுபவத்தவன். அரசியல் மேடைகளிலும் பத்திரிகைகளிலுங் கூடச் சுளமாடினவன். பேனைப் பிடித்தால் மணிமணியாக உயர்ந்த கருத்தடங்கிய கட்டுரையும் கதையும் எழுதுவான்.

கந்தன் திருநெல்வேலியிற் பிறந்து இந்து கல்லூரியில் கற்ருன். பெற்ருேர் பரம ஏழைகள்; ஆதலால் எப். ஏ. முதலாண்டுடன் அவன் படிப்பையே விட நேர்ந்தது. பிறகு அங்குமிங்கும் வேலைக் கலைந்தான்; கிடைக்கவில்லை. வீட்டில் வறுமை; வெளியில் ஏமாற்றம். இரண்டும் அவனைப் புண்படுத்தின. ஒரு நாள் ஆற்று மணலிற் படுத்து எமர்ஸன் எழுதிய தன்னுறுதி என்னும் கட்டுரையைப் படித்தான், அவனுள் ஓர் ஆவேசம் எழுந்தது. அங்கேயே கைக்குறிப்பில் 'தைரியம்' என்ற சிறு கதை எழுதி தேச தூதன் என்ற பத்திரிகைக்கு அனுப்பினன். ஒரு வாரம் காத்திருந்தான்; பிறகு நினைப்பூட்டினன்; கதை திரும்பி வந்து விட்டது. ஏமாற்றம்! ஆனல் உறுதி குன்றவில்லை; அதே கதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து டைம்ஸ் ஆப் இந்தியாவிற்கு அனுப்பினன்; மறுவாரமே, அன்புள்ள ஐயா தாங்கள் எழுதிய Bravado என்ற கதையை அடுத்த இதழில் வெளியிட்டு இருபது ரூபாய் சன்மானமும் அனுப்புகிறேம். பெற்றுக் கொள்ளவும் எனக் கடிதம் வந்தது. அவ்வாறே கதையும் பணமும் வந்தன. ஆங்கிலப் பத்திரிகை ஆதரித்த பிறகே தமிழ் பத்திரிகைகள் அவனைச் சிறிது கண்ணெடுத்துப் பார்த்தன. அவன் கதையை அதே தூதன் தமிழில் மொழி பெயர்த்து உத்தரவு கேட்காமலே வெளியிட்டது. இரகசியன் என்ற இதழ் அங்குமிங்கும் சொற்களை மாற்றி, கைச்சரக்குக் கொஞ்சம் கூட்டித் தன் சொந்தக் கதை போல் வெளியிட்டது. எப்படியோ கந்தன் பெயர் பத்திரிகை உலகுக்குத் தெரிந்தது. கந்தன் சில கதைகள் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பினன். எல்லாம் சும்மா வெளி வந்தன. வீட்டு வறுமை தீர வழியில்லை. அக்காலம் மாதவையா, அரங்க ராஜு, ஆரணி குப்புசாமி முதலியார் முதலியோர் நாவல்கள் எழுதிப் பிரபலமாயிருந்தார்கள். நல்ல வரும்படியுங் கூட. கந்தன் நாவல் எழுதப் புகுந்து "ஏழைக் குடும்பம்" என்ற முதல் நூல் எழுதினன். அதைச் சில பணக்காரர் உதவியால் வெளியிட்டான். ஆனல் புத்தக மூட்டை வீட்டை அடைத்துக் கொண்டிருந்தது. புத்தகம் விற்கவில்லை. சில பத்திரிகைகளுக்கு மதிப்புரைக்காக அனுப்பினன்.

ஒரு பத்திரிகை மட்டும் கந்தனின் நாவலில் கதை ஏதோ இருக்கிறது; ஆனல் உணர்ச்சி வேகமில்லை என்றெழுதியது. மற்றப் பத்திரிகைகளெல்லாம் நூலைக் கண்டபடி தூஷித்தெழுதின. "கத்துக்குட்டி வேலை! இதுவும் நாவலா? இது ஒரு கண்ணருவிக் கதை; இதன் ஆரம்பமும் அழுகை, முடிவும் அழுகை. அழ வேண்டியவர்கள் இந்த ஆசிரியரைக் கட்டி அழலாம். நடை கடினம், சரக்கில்லை. இதை குஜிலிக் கடையில் நல்ல தங்கை பாட்டுடன் பொல்லாத் தங்கைப் பிலாக்கணமாகச் சேர்க்கிறேம்." என்றெல்லாம் குத்தித் தாக்கி ஆசிரியன் உள்ளத்தைக் கொலை செய்து விட்டன. அன்று முதல் கந்தன் பத்திரிகை மதிப்புரைக்கு எதுவுமே அனுப்புவதில்லை; சில எழுத்தாளருக்கு இந்த ஏழையிடம் பொருமை யுண்டானது. இலக்கிய வுலகமே போட்டிப் பொருமையின் சாபத்தால் மதிப்பிழந்திருந்தது. கந்தன் ஒரு பத்திரிகை

யில் துணையாசிரியராகப் புகுந்தான். நாற்பது ரூபாய் சம்பளம் என்று பெயர். சம்பளம் ஒழுங்காய் வருவதில்லை; பத்தும் ஐந்துமாக வரும். ஈ யடிச்சான் காபி யடிக்கும் குமஸ்தாக் கூட சம்பளமும் கிம்பளமுமாக மாதம் ஐம்பது சம்பாதித்தான். நாளெல்லாம் மூளையைச் செலவிட்டெழுதியும் பேனாத் தொழிலுக்கு மதிப்பில்லை, செழிப்பு மில்லை. இது வீட்டுப் பட்டினியைப் போக்காது என்று கந்தன் ஊருக்கு வந்து விட்டான். பெற்றோர் படும் வருத்தம் அவனால் பார்க்கச் சகிக்க வில்லை. அவனது நண்பனொருவன் பர்மாவிலிருந்து வந்திருந்தான். அவன் ஆறு வகுப்பே படித்து பர்மாவில் கொண்டு விற்கச் சென்று மாதம் முன்னூறு நானூறு சம்பாதித்துச் சொத்துக்காரனானன். அந்த நண்பன் கந்தனது நிலைமையைப் பார்த்து அவனைத் தன்னுடன் பர்மாவுக்கு அழைத்துச் சென்றான். பர்மாவில் நண்பன் கடையில் வேலை பழகி கந்தன் கணக்கில் நிபுணனானன். இம்போதும் கதை எழுதினன். ஆனல் பத்திரிகைகளுக்கு அனுப்புவதில்லை. அடக்கமாயிருந்து பணம் சேர்ப்பதில் ஊக்கங் கொண்டான்.

ஒரு நாள் சிவநேசரைக் கந்தன் பார்த்துப் பேசினன்; அவருக்கொரு புள்ளிக் கணக்கு முடித்துக் கொடுத்தான். சிவநேசம் கந்தனிடம் பிரியங்கொண்டு மாதம் இருநூறு ரூபாய் சம்பளங் கொடுத்து தன்னிடமே வைத்துக் கொண்டார்.

கந்தன், சிவநேசன் கடையைக் கருத்தூன்றிக் கவனித்தான். கடைக்கு ஏராளமான லாபம் வந்தது.

சிவநேசம் மனைவி இறந்த பிறகு மகேச பூசையில் பணத்தை அள்ளிவிடுவது மட்டும் அவனுக்குப் பிடிக்க வில்லை. ஏனெனில் யாசகத்திற்கு வரும் பஞ்சைப் பரதேசிகள் சுத்த சோம்பேறிகள். வேலை தந்தாலும் செய்யமாட்டார்கள். வயிற்றை நிரப்பி உறங்குவதே அவர் தொழில். சமுதாயத்திற்கு அவர்களால் ஒரு மண்ணும் பிரயோசனம் இல்லை. இந்தச் சோம்பேறிச் சாவடிகளுக்குச் சும்மா சோறு போடுவது நாட்டில் சோம்பலையே வளர்க்கும். உழைக்காதவனுக்கு உண்ண உரிமையில்லை என்று கந்தன் சிவநேசரிடம் சொல்லி வந்தான்.

சிவ: கந்தா, நாம் இருக்கும் போதே சிவகாருண்யம் செய்வோம். அதைப் பெற்றுக் கொண்டவர்கள் மாறி நடந்தால் அவர் வினை அவருடன். நமக்கு எல்லாம் சிவமயம். நாயன்மார் காட்டிய வழியில் நாம் செல்வோமே.

கந்தன்: அது சரி தான். ஆனல் வெளுத்ததெல்லாம் பாலென்று நம்பக் கூடாது. ஆவின் பாலுக்கும் ஆதானம் பாலுக்கும் வேற்றுமை உண்டு. வைரத்திற்கும் கண்ணாடிக்கும் வேற்றுமை யுண்டு; மின்னுவதெல்லாம் பொன்னாகாது. நான் அனுபவத்தைச் சொல்லுகிறேன்.

சிவ: உன் அனுபவம் என்ன சொல்லு; துறவிகளை நீ நெருங்கிப் பார்த்திருக்கிறாயா? சொல்லு நீ கண்டதை.

கந்: நான் கொஞ்ச காலம் பத்திரிகை எழுத்தாளனயிருந்தேன்; சுயநலப் பொறாமைப் புயல்கள் பேனவைத் திகைக்கச் செய்தன; நான் மனம் வெறுத்து அமைதி தேடத் துறவிகள் கூட்டத்தில் அலைந்தேன். சுமார் ஐந்து நல்ல மகான்களையே காண முடிந்தது; அவர்கள்

மௌன நிலையிலிருந்தே அரிய பணிகளைச் செய்கிறார்கள். அவர்கள் யாரையும் யாசிப்பதில்லை. வெளி வேடமில்லை. அந்த ஞானிகளை வணங்குகிறேன். என் பிரயாணங்களில் காஷாய வுலகை நன்றாகக் கண்டேன். சிலர் பக்தி சாதனம் செய்கிறார்கள். அவர்களையும் நன்கு மதிக்கிறேன். ஆனால் தகுதியின்றிச் சாமிப் பட்டம் வைத்துக் கொண்டு, நீற்றிலும் காவியிலும் மனமலத்தை மறைத்து, நெறியில்லாது நடக்கும் போலிகளால் துறவுக்கே மாசுற்றது. "என்ன சாமி தானே என்ன செய்யப் போகுது அடித்தாலும் அழாது" என்று உலக மாந்தர் செருக்குடன் பழிக்கும் காலம் வந்திருக்கிறது. மனத் துறவில்லாப் போலிகள் விநோதக் கூத்துகள் பல. பூரணாதியை விழுங்கி ஆவேசம் நடித்து முருகையா பெயர் சொல்லி இன்னும் பங்கியடிக்க ஒரு சாமி பணம் வாங்கும். ஒரு இடத்தில் வேலை நட்டு சும்மா கப்பறை குலுக்கிப் பணம் பறிக்கும் ஒன்று. இன்னொன்று மடத்தாயுடன் தன தந்தி நாதந்தி பாடும். இன்னொன்று ரேசை, சோதிடம், உருக்குக் குறி சொல்லி ஆளை மயக்கும். இன்னொன்று போதையில் பரலோகத்திற்குப் பிரம்ம லோகக் கனவுகளைப் பாடிக் கொண்டிருக்கும். இன்னொன்று ஏவல், பில்லி, சூனியம், கருமருந்து வசியம், சொக்குப் பொடி முதலியவற்றால் பயந்தவர்களை ஏமாற்றும். மற்றொன்று துத்தமும் ரசமும் சமனெடை கலந்து கையிலுருக்கி யெடுத்து, அத்துடன் செம்பு, குப்பைமேனி, நத்தைச் சூரி, மணத்தக்காளி சேர்த்துச் சில மண் செய்து உலையிலிட்டுருக்கிப் போலித் தங்கம் காட்டிப் பொன்னைப் பறிக்கும். போலி வித்தை கேலிக் கூத்தாவதும் குடும்பங்களைக் கெடுப்பதும் உண்டு. மற்றொன்று புதையலெடுக்கிறேன் என்று பெரிய குழி வெட்டிப் பூதத்திற்குப் பூசை போடப் பணம் வாங்கி மறையும். இன்னொன்று நாக்கிலும் கையிலும் வேல் ஏற்றிக் கொள்ளும். இப்படி எத்தனையோ அலங்கோலங்கள் புகுந்து தூய துறவறத்தைக் கெடுத்து விட்டன.

சிவ: கந்தப்பா, நமக்கென்னப்பா! உலகம் பலவிதம்; கற்றாழைக்கு முள் பிடுங்க நாமார்? ஏதோ பசி என்று வந்தால் வயிற்றுக்குச் சோறு போடுகிறேன்; ஒரு உயிர் துடிக்கும் போது நமது உள்ளமும் துடிக்கிறது. போலியானாலும் உண்மையானாலும் பசி ஒன்றுதானே. என் ஆயுள் உள்ள மட்டும் பசி என்று வந்தவர்கள் யாரானாலும் சரி, உணவளிக்க உறுதி பூண்டிருக்கிறேன். சிவபெருமான் அந்த உறுதியை நிறைவேற்றத் திறமையளிக்கட்டும். அவனே உயிர்க்குலம். சீவ சேவை சிவ கைங்கரியமே.

கந்தன்: நான் பசியைப் பற்றிச் சொல்லவில்லை. எல்லாரும் பாடுபட்டு சாப்பிடவேண்டும். நாட்டில் சோம்பேறித்தனத்தை வளர்க்கக் கூடாது. இன்னொருவன் உழைப்பைப் பறித்துண்ணக் கூடாது என்கிறேன். காவியும், நீரும், தாவடமும், கட்டையும் துறவாகி விடுமா? எவ்வளவோ காலம் தவஞ் செய்து மகான்கள் மனத்துறவைப் பெறுகிறார்கள். நான் சொல்லுவது என்னவென்றால்

திருப்பதி, காளாத்தி, பழனி, சிதம்பரம், மதுரை, அண்ணுமலே, ராமேசுரம் போன்ற திருத்தலங்களில் ஆசிரமங்கள் ஏற்பட வேண்டும். அவை கோயில் வருமானத்திலிருந்து நடக்கலாம்; அங்கே துறவிகள் வசிக்கலாம்; அவர்கள் கல்விப் பயிற்சியிலும் யோக சாதனத்திலும், கைத்தொழில்களிலும் சமுதாயத்திற்கு அரிய நன்னூல் எழுதுவதிலும் சன்மார்க்கப் பிரசாரத்திலும் பொது நலப் பணிகளிலும் ஒழுங்காக வாணுளேப் பயன்படுத்தலாம். தினம் ஆறு மணி நேரம் மனித சமுதாயத்திற்குப் பயனுள்ள ஒரு பணியைச் செய்தே அவர்கள் உண்ண வேண்டும். மீதி நேரத்தை யோக சாதனத்திலும் சன்மார்க்கப் பிரசாரத்திலும் பயனுக்கலாமே. அப்படியின்றிச் சும்மா தன தந்திநா தந்தி நானே என்று பாடித் தொந்தி சுமந்து திரிவதிற் பயனில்லேயே.

சிவ: அது நியாயந்தான் கந்தப்பா; வரவர அதுவும் நடக்கும். எனக்கு ஆயுளிருந்தால் அப்படியே மதுரையில் ஒரு ஆசிரமம் நாட்டுவேன். ஆனுல் அதுவரையிலும் தர்மம் நடக்கட்டுமே. உதாரணமாக சுடலேயாடிச்சாமி மகான்; அவர் சீட சித்தர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வித்தை கற்றிருக்கிருர்கள். இரவு அந்த மகானேத் தரிசனம் செய்யும் போது எனக்குப் பரிபக்குவம் வந்து அடியார் திருக் கூட்டத்துடன் உண்மையான சிவநேசத்தில் வாழும் வரமே கேட்கப் போகிறேன். மகான் இச்சை நடக்கட்டும்.

கந்: முதலாளிக்கு இதைப் பற்றிச் சொல்லவே இவ்வளவு பேசினேன். சுடலேயாடியை நான் கண்டதுமில்லே கேட்டதுமில்லே. அவரது சித்தர் பலே எத்தர் என்று மட்டும் நான் அறிந்து கொண்டேன். இப்போதோ சித்தரின் பற்று வழி முன்னூறுக்கு எட்டிப் பார்க்கிறது. இரவில் காணிக்கை வேறே ஆயிரம் இரண்டாயிரமாகும். எனக்கு இதெல்லாம் பெருஞ் சந்தேக மாயிருக்கிறது. வாசாபாய் சுத்தக் கப்ஸாபாய். அண்டப் புழுகன் என்று தெரிந்து கொண்டேன். அவன் தன்னே நந்தி தேவர் மரபென்றும் சத்திய ரிசியின் சிஷ்யனென்றும் சொல்லுகிருன். அவனுடைய இலக்கியப் பொய்களோ பொருத்தமான அபத்தமாயிருக்கின்றன. தமிழ் நாட்டில் வத்தலேக்குண்டில் பிறந்த சேசு முதலியாரே எசுநாதராம், வத்தலேக்குண்டே பெத்தல்ஹாமாம், தாமோதரம் பிள்ளேயே தாமஸாம்; பாரி இருந்த ஊர் பாரிஸாம், முத்தையா மாத்யூவானுைம்; ராமசாமி ராம்ஸே ஆனுைம், கிரீசன் கிரீசில் ஆண்டானும்; இராமனிடம் தோற்ற இலங்கணியே பிரிட்டனுக்குச் சென்று இங்கிலாண்டை ஏற்படுத்தினுளாம். ஓமாந்தம் பிள்ளே ஓமரானுராம், தந்தை என்பதே தாந்தே யானதாம்; பிரான் என்பது பிரான்ஸானதாம். இப்படியெல்லாம் கப்பி கட்டுகிருன். இவன் சாகா வரம் பெற்றவனும். சாவா என்பது தலே கீழாக மாறித் தான் வாசாவானதாம். இவன் குரு சுடலேயாடிதான் பிரளய காலத்தில் உலகை யெல்லாம் நீருக்கிப் பூசிக்கொண்டு சக்தியுடன் ருத்ர நடனம் புரிவாராம். இதையெல்லாம் அறிவுள்ளவர் நம்ப மாட்டார். சுத்தப் பொய். வாலேச் சாமியின்

வாதப் புருடாவும் மேற்படி தான். காலேயில் காட்டிய தங்கம் அவர் முன்பே வைத்திருந்த சரக்குத்தான்; ஒன்றைக் காட்டிப் பத்தைப் பிடுங்கும் மோசடிதான்; ஐயா இரும்பையும் செம்பையும், தங்கமாக்கும் பேர்வழி பங்கியடிக்கப் பிச்சை கேட்பானேன்? இதே மாதிரியே மற்றச் சித்தரின் எத்துக் கடையும் வெட்ட வெளிச்சந் தான்.

சிவ: போதும் முருகப்பா. பிறர் குற்றத்தை நாம் பாராட்ட வேண்டா. நமது பிழைகளைத் திருத்திக் கொண்டாலே போதும். அவர்கள் குற்றத்தைத் திருத்த குரு இருக்கிருர், இறைவன் இருக்கிருன். நாம் நமது மனச்சாட்சி மகிழ நடந்து விடுவோம். என் மனம் இன்று அந்த மகானை காணத்துடிக்கிறது, காண்கிறேன். அதனல் கெடுதல் வந்தால் சிவன் என்னைக் காப்பான். நல்லது வந்தால் அவனுக்கே அர்ப்பணம். என் வாழ்வே சிவார்ப்பணமாகும் நாளை எதிர்பார்க்கிறேன்.

கந்: ஐய! இன்றே இராமநாதனுக்கு தந்தி கொடுக்க வேண்டும். அவன் வந்தால் கடை வேலையும் ஒழுங்காக நடக்கும் நமக்கும் நல்ல துணை.

சிவ: அது சரியான யோசனை தான். அவனிடம் கடையை ஒப்பித்து விட்டு நான் சிவத்தைத் தேடுவேன். எழுது தந்தி அண்ணமலை சவுளி வியாபாரி, மேலாவணி மூலவீதி மதுரை'

இராமநாதனை உடனே கப்பலேற்றி இரங்கோனுக்கு அனுப்புக. அவசரம். சிவநேசம், நெல் கடை. மங்க மாரித்தெரு இரங்கோன்.

இந்த தந்தி எழுதும் போதே மந்தரச்சாமி வந்து "என்னடா சொல்லுகிருன் இந்த அஞ்ஞானி—ஆணவமலமே பெரியாரை என்ன பேசுகிருய்—சாபம் வரும்—சாம்பலாய்ப் போவாய்"

"உஃப்" என்று விபூதியை ஊதினர்.

கந்தையா கடகடவென்று சிரித்தான். என்னடா சிரிக்கிருய்! திரிபுரச் சிரிப்புவரும்—எரிந்து போவாய் பஹ பாஹ டமரடுண் மூமிட ஸ்வாஹா—தெரியுமா! என்று மிரட்டினர்.

சாமி இதென்ன பாஷை என்ருன் கந்தையா. 'இது வா இது இது என் குருநாதர் பூதகணங்களுடன் பேசும் தேவ பாஷை.'

கந்: சாமி எனக்கும் இந்தத் தேவ பாஷை சொல்லித் தந்தால்.....

மந்: சை சை, அஞ்ஞானி உன் ஆணவமலம், ஒழியட்டும். நீ நமது கிட்ட வரக் கூடத் தகுதியில்லை.

கந்: இதோ ஓடிப் போறேன் சாமி உங்கள் மந்திரப் பொடியை என் கண்ணில் தூவி விடாதீர்கள்.

சிவ: கந்தப்பா வேலையைப் பார்.

மந்: சிவநேசம் இவன் சுத்த தலையரட்டை பிடித்த அகம்பாவக் குடுக்கை. இவனை விரட்டியடி.

சிவ: இனி அப்படிச் சொல்ல மாட்டான்.

"வா தனியே! உனக்கொரு ரகசியம் சொல்லுகிறேன்" மந்திரச் சாமி செட்டியாரைத் தனியே கூட்டிச் சென்று கண் மூடிக் கொள்ளச் செய்து விபூதியிட்டு, "அப்பா இந்தப் பயல்களை நம்பாதே முழு முடிச்சவுக்கிகள். நீ எப்போதும் கொத்துச் சாவியை இடுப்பிலேயே வைத்துக் கொள்" என்று உபதேசித்தான்.

(தொடரும்)

கிராமியக் காட்சி

பக்தர் கூட்டம் பழனியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. "அரகரா, அரகரா" என்னும் கதம்பக் குரலோடு ரமணியின் சத்தமும் மனதில் வந்து மோதியது.

மத்தியானம் முழுதும் கடூரமாகக் காய்ந்த வெயிலைத் தணிப்பதற்காக, தண்ணீர் தெளித்து, வாசலில் கட்டிலைப் போட்டுப் படுத்துக் கொண்டிருந்த என் மனசில் பக்திப் பெருக்கு எழுந்தது. பக்கத்திலிருந்த பூவரச மரத்துக் காற்று குழுமையாக வீசியது. மரத்துக்குக் கீழே சுகமாகப் படுத்துக் கொண்டிருந்த செல்லப்பனுக்கும் இதே உணர்ச்சி தான் ஏற்பட்டது என்பதற்கு அவன் பாட்டே அத்தாட்சி.

எருக்கலைக்குத் தண்ணி கட்டி
எத்தனை பூப் பூத்தாலும
மரிக்கொழுந்து வாசமுண்டோ
மலைப் பழனி வேலவனே.

இதையே திருப்பித் திருப்பி இசையுடன் பாடிக் கொண்டிருந்தான் செல்லப்பன்.

செல்லப்பனைக் கூப்பிட்டேன். கிட்டத்தில் வந்து கட்டில் அடியில் உட்கார்ந்ததும், "என்ன செல்லப்பா, சோக்காகப் பாடறயே! இன்னும் இந்த மாதிரி எத்தனை உனக்குத் தெரியும்?" என்றேன்.

"அதுக்கொரு கணக்கேது?" என்ருன் சிரித்துக் கொண்டே.

"எனக்கு வெகுநாளாக உங்கிட்டே ஒரு பாட்டு கேக்க வேணுமென்று ஆசையாயிருந்தது. இந்த வெள்ளிரிக்காய்ப் பாட்டுத் தெரியுமல்லவா?" என்றேன்.

"ஆமாமாம்" என்று உற்சாகமாகத் தொடங்கினன்.

அவன் ஆரம்பிக்கறதுக்கு முன்பு, "ஊரான் ஊரான் தோட்டத்திலே, ஒருவன் போட்டானும் வெள்ளிரிக்காய்" அந்த நாலு அடியும் எனக்குத் தெரியுமப்பா. பல பேருக்கு அது மட்டும் தெரிஞ்சிருக்கு அதுக்கு மேலே, இன்னும் சேர்ந்தது ஏதாச்சும் உண்டா?" என்றேன்.

"அப்பறமா" கேக்கறீங்க, மொதல்லிருந்தே பாடறேனே" என்று சொல்லி ஆரம்பித்தான்.

ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டானும் வெள்ளி
ரிக்காய்
காசுக்கு ரண்டா விக்கச் சொல்லி

காயிதம் போட்டானும் வெள்ளைக்
காரன்
வெள்ளைக்காரன் பணம் வெள்ளிப்
பணம்
வேடிக்கை பண்ணுது சின்னப்
பணம்
வெள்ளிப் பணத்துக்கு ஆசைப்
பட்டு
வேசம் குலைந்தாளாம் வீராயி

"அடேயப்பா, கதையாட்டமல்லவா இருக்குது. நல்ல ஆசாமிதான் அவன்! அப்புறம்?" என்றேன்.

ஒரு வருஷமும் ஒண்ணரை மாசமும்
உன்னையும் காணுமல் எண்ணை
யும் தேய்க்காமல்
சடை வளர்ந்ததும் சன்யாசியா
னதும்
சம்மதமோ முத்து வீராயி.

இப்படி ரசமான எளிய பாட்டுக்கள் எத்தனையோ! நாளெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அகராதி, எதுகை, மோனே, கட்டுத்தளை—சிரமமில்லாமல் உதித்த பாடல்களல்லவா? ஆகையால் அனுபவிக்க அனுபவிக்க சலிப்பு ஏன் ஏற்படப் போகிறது?

இராமாயணத்திலே ராமன் அயோத்தியை விட்டு நீங்குகிற கட்டம். அயோத்தி மக்கள் எல்லோருக்குமே நெஞ்சில் நெருப்பை விட்டது போன்ற உணர்ச்சி எழுகிறது. இதைக் கேட்டதும் "ராமனைப் பிரிகிறது" என்பதை அவர்களால் நினைக்கவே முடியவில்லை. சோகத்தை நேருக்கு நேராகப் பார்க்கிறோம். பெண்கள் வாயிலாகத்தான்.

அந்தோ பிரிதுமோ
என்கிறார்கள்.

அடுத்தபடியாக,
ஆ! விதியே, ஓ! என்பார்

அவ்வளவுதான். என்ன நடந்ததோ, அந்தப் பெண்கள் நிலை எப்படி இருந்ததோ, அதை அப்படியே காட்டி விட்டார் கவிஞர்.

ஒரு பெண்ணுக்கு ஏராளமான செல்வம் இருந்தது. கணவன் உயிருடன் இருக்கும் வரையில் சுற்றத்தார் பதில் பேச்சுப் பேசவில்லை. இவள் இஷ்டப்படியே எல்லாக் காரியங்களும் நடைபெற்று வந்தன. கணவன் கண் மூடியதும், அவள் வருந்தும் நாளும் வந்து சேர்ந்தது. அவள் கண்களுக்கு உலகமே சூன்யமாகத் தோன்ற ஆரம்பித்தது. ஒரு கணம், தன்னுடைய திரளான செல்வத்தையும், விசாலமான வயல்ப் பரப்பையும், அங்கு நடை பெறும் காரியங்களையும் எண்ணிப் பார்த்தாள். இவ்வளவும் இருந்துதான் என்ன பயன்? அவள் அருகில் போக முடிகிறதா?

பத்து மலைக் கந்தப்புறம்
பரவு தண்ணி பாயுதுண்ணு
—நான்

பாத்துக் குடிப்ப மிண்ணு
பாசம் கலங்கி வரும்
பசு நாகம் சீறி வரும்
எட்டு மலைக் கந்தப் புறம்
எரவு தண்ணி பாயுதுண்ணு
—நான்

எட்டிக் குடிப்ப மிண்ணு
எண்ணெய் கலங்கி வரும்
இள நாகம் சீறிவரும்

கிராமியப் பாடல்களிலே இது போன்ற மேலான இன்பம் கிடைக்கும் என்பது என் நம்பிக்கை.

கலாசாரம்

ஆர். திருஞானசம்பந்தம்

நம்முடைய பழக்க வழக்கங்களையும் எண்ணங்களையும் உயர்த்தவும், வாழ்க்கையை இன்ப மயமாக்கவும், சகல ஜனங்களுக்கும் சௌக்கியத்தைக் கொடுக்கவும் உண்டானதே தான் கலாசாரம்.

தங்கள் தங்கள் கலாசாரமே சிறந்ததென்பது அவரவர்கள் கருத்து. பாமரர்கள் மட்டுமல்ல பண்டிதர்களிடம் கூட இந்த எண்ணம் பலமாக இருப்பதைக் காண்கிறோம். ஆனால் வாஸ்தவத்திலேயே இந்த கலாசாரங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததான ஒரு கலாசாரம் இருக்கிறதா? அதை எந்த ஜனங்கள் அனுஷ்டிக்கிறார்கள் என்று கேட்கலாம்.

அப்படிப்பட்ட கலாசாரம் ஒன்றும் இன்று இல்லை. இன்றைய உலகில் எந்தக் கலாசாரத்தையும், "இது தான் சகலத்திலும் பெரிது" என்று சுட்டிக் காட்ட முடியாது. ஆனால் சிலர் "எங்கள் நாகரிகம் தான் உலகிலேயே மகோன்னதமானது. இதற்கிணை எங்குமே கிடையாது" என்று சொல்கிறார்களே, இது உண்மை தானா?

இதை நாம் உண்மை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. 'தங்களுடையது' என்ற அபிமானத்தாலே அப்படிச் சொல்கிறார்கள்.

சரி, தனிப்பட்டவர்கள் விவாத விஷயத்தை விலக்கி விட்டு, பொதுவாகப் பார்த்தாலும், "இதுவே சிறந்தது" என்று ஒரு கலாசாரத்தையும் சொல்வதற்கில்லை. ஆனால் கலாசாரங்களின் அடிப்படையான தத்துவம் ஒன்றே. அதாவது வாழ்வில் பூர்ண சுகம் உண்டாக்க முயற்சிப்பதுதான். வேஷ்டி கட்டிக் கொண்டாலும், கால் சட்டை அணிந்து கொண்டாலும், லுங்கி கட்டிக்கொண்டாலும் எல்லாம் ஒன்று தானே? குடுமி வைத்துக் கொண்டால் என்ன? கிராப் செய்து கொண்டால் என்ன? மொட்டை அடித்துக் கொண்டால் தான் என்ன? அவரவர்களுக்கு இஷ்டப் பட்ட மாதிரி செய்து கொள்கிறார்களே தவிர, அடிப்படையான மாறுதல் ஒன்றும் இல்லையே! இப்படி பல்வேறு தோற்றங்களுடன் தோன்றும் ஒவ்வொரு கலாசாரங்களிலும் கோளாறு இல்லாமலில்லை. இதைச் சும்மா சாப்பு மாப்பாகப் பார்த்தால் தெரியாது. விசாலமான மனப் பான்மையுடன் நோக்க வேண்டும், அப்பொழுது தான் உண்மை விளங்கும்.

இது ஒரு மோதல் காலம். விஞ்ஞான ஆராய்ச்சியைத் தழுவின நவீன நாகரிகத்துடன் சகல கலாசாரங்களும் எதிர் எதிராக முட்டிக் கொள்கின்றன. பெரும் போராட்டம் நடை பெறுகிறது. நம் கண்ணுக் கெதிரிலேயே பல பழைய கொள்கைகள் மாண்டு மறைந்து போகின்றன. எனக்குப் பண்டைப் பரம்பரைகளை கண்டிக்கவாவது தள்ளி விடவாவது இச்சை கிடையாது. ஏனென்றால் பண்டை வாழ்விலும் சிறந்தது எவ்வளவோ இருக்கிறது. அவை நிலைத்து நிற்கு மென்பதில் எனக்குத் துளிகூட சந்தேகமே கிடையாது. ஆனால் மிகப் பழைய காலத்து ஆசாரம்—முன்னோர்கள் வழி வழியாகக் கையாண்டது—இதை எப்படி மீறுவது என்ற சந்

தேகம் வந்து குறுக்கிடுகிறதல்ல வா? அப்போது அது, "அனுபவத்திற்கு ஏற்றதா?" என்று ஆராய்ந்து பாருங்கள். மிகப் பழைமை என்பது உண்மைக்கு ருஜுவல்ல. சில சமயம் பழைய வீடுகளை இடிக்க வேண்டியது அவசிய மாகிறது. அது போல வே புதிய விஷயங்கள் என்பதெல்லாம் சிறந்ததென்ற கருத்து மல்ல. நீண்ட காலம் ஸ்திரமாக நின்று விட்டது என்று சொல்வதற்கில்லை அல்லவா? நவீன நாகரிகம் சண்ட மாருதம் போல் புரண்டடித்துக் கொண்டு வருகிறது. சிலர் புதிது என்ற மயக்கத்தில் அப்படியே மயங்கிப் போய் விடுகிறார்கள். இதனால் விளையும் கெடுதல் களைச் சிறிதும் எண்ணிப் பார்ப்பதில்லை.

நேற்று என் நண்பர் ஒருவர் வீட்டிற்குப் போயிருந்தேன். அவர் அப்போதுதான் மனைவி சகிதம் வெளியே புறப்படத் தயாரா யிருந்தார். என்னைக் கண்டதும் தன்னோடு என்னையும் கடற்கரைக்கு வரும்படி சொன்னார். அப்போது அங்கு ஒரு அதிசயத்தைக் கண்டேன். ஆனால் அது அதிசய விஷயமல்ல, எல்லோருக்கும் தெரிந்ததுதான். பல குடும்பங்களில் இன்றும் கையாளப் பட்டு வருவது தான். அவருடைய இரண்டு வயதுக் குழந்தை புட்டிப் பால் கையோடு சுவரோரம் சோர்ந்து கிடந்தது. இதில் அதிசயம் என்ன வென்றால் அந்தக் குழந்தையின் அங்க லக்ஷணம் தான்; அதனுடைய பிஞ்சுக் கரங்கள் வறண்ட குச்சியைப் போலிருந்தன. தளதளவென இருக்க வேண்டிய மேனி வெங்காயச் சருகு போலிருந்தது. இதற்குக் காரணம் என்ன என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியுமே! அந்தக் குழந்தையின் தாயார் முலைப் பால் கொடுக்காது விட்டதற்காக நான் அந்த அம்மாளை குறை கூற வில்லை. நவீனத்தின் போக்கு குருட்டுத் தனமாக நம்மிடையே புகக் கூடாதென்பதுதான் என் எண்ணம்.

மண்பாண்டங்களுக்குப் பதில் அலுமினியமும், அதுவும் இதுவும் புகுந்து வீடுகளை பாழ்படுத்துவதிலிருந்து என்ன தெரிகிறது. நம்முடைய வாழ்க்கைக் கடைக்கு வேண்டிய சாமான்களெல்லாம் பகுத்தறிவில் எடை போட்ட சாமான்களாகவே தான் இருக்க வேண்டு மென்பது விளங்க வில்லையா?

"வாழ்க்கையின் ஓட்டத்திற்கு ஆதாரம் எங்கே யிருக்கிறது? சமயத்துக்கு ஒத்து நடத்தல்—கல்வி— என்ற இந்த இரண்டு அம்சங்களின் பேரிலேயே வாழ்க்கை சுழலுகிறது" என்று மகான் ராம தீர்த்தர் கூறிவிட்டு ஒரு சிறந்த உதாரணம் கொடுக்கிறார். அழகிய சிறு குழந்தையையும், ஒரு நாய்க் குட்டியைப்போல் அவ்வளவு அறிவீனமும, மூடத் தனமும் நிரம்பிய தாய் இருக்கிறது!— இல்லை, இல்லை — சில விஷயங்களில் நாய்க் குட்டியானது சிறு குழந்தையைக் காட்டிலும் புத்தியதிகம் படைத்த தாயிருக்கிறது. அப்படியானால் மனிதனுக்கும் மற்ற பிராணிகளுக்கும் உள்ள பேதம் என்ன வென்றால், நாய்க்குட்டியானது தனக்கு வேண்டிய அம்சங்களை யெல்லாம் பரம்பரை வழக்கத்தின் பேரில் அடைந்து விட்டது. ஆனால் மனிதக் குழந்தையோ கல்விப் பயன் மூலமாக — சந்தர்ப்பங்களை யெல்லாம் உபயோகித்துக் கொண்டு எல்லா வசதிகளையும் அடையும், அடைய முடியும்.

ஆகையால் மனிதன் தன்னுடைய அறிவினால் விஷயங்களின் தராதரங்களை தெரிந்து அதன்படி நடக்க வேண்டும். ஆனால் அப்படி ஆராய்வதிலும், "அறிவுக்குச்

சரியென்று பட்டாலும், அது மனதுக்குப் பழக்கப் பட்டுப் போய்விட்டால், ஒத்துக் கொள்ள மறுக்கிறது.

நான் என் அறையில் உட்கார்ந்து க்ஷவரம் செய்து கொள்கிறேன். பின்பு சமையல் அறைக்குள் தண்ணீர் டம்ளரை வைக்கப் போனல், என் பாட்டி மனதுக்கு சரிப்படுவதில்லே. "குளிப்பதற்கு முன் உள்ளே வரக் கூடாது" என்று சொல்லுகிருள். ஏன்? க்ஷவரம் செய்து கொள்வதற்கு முன்னல் இல்லாதது இப்போது என்னிடம் என்ன வந்து விட்டது? முன்பிருந்ததை விட முகம் சற்று லக்ஷணமாக இருக்கிறது என்று சொல்லலாமே தவிர புதிதாக ஒன்றும் வரவில்லேயே! இது என் பாட்டிக்கும் நன்ருகத் தெரியும். ஆனுலும் க்ஷவரம் செய்து கொண்டால் குளிப்பதற்கு முன் சமையல் அறைகளிலெல்லாம் வரக்கூடாது என்று வழி வழியாகப் பக்குவப் படுத்தப் பட்டு வந்த மனது இதை மறுக்கிறது.

இன்னும் சிலர் தங்கள், தங்கள் கொள்கைக்கு பிறர் துளி வித்தியாசமாக, வேறு பட்டு நடப்பதைக் கண்டாலும், "போச்சு, எல்லாம் போய்விட்டது" என்று சத்தமிடுகின்றனர். இதைத்தான் மூட நம்பிக்கைகள் என்பது. பார்க்கப் போனல் இந்தக் கூச்சல்களுக் கெல்லாம் அர்த்தமே யில்லே. மனிதனே அப்புறம், இப்புறம் முன்னேற விடாமல் அணேபோட்டுத் தடுப்பது இந்தப் பாராங்கற்கள் தான். இந்தப் பெரும் கற்களே புரட்டி யடிக்கத்தான் கல்வி நீர் வேண்டு மென்பது.

ஒரு மனிதன் நோயால் வருத்தமடைகிருன் என்று வைத்துக் கொள்ளுங்கள். 'அவன் மாத்திரம் கஷ்டப் படுவான்' என்று நினேக்க வேண்டாம். உலகில் அவன் தன் வியாதியைப் பரப்புகிருன். ஒருவனுக்குக் காலராக் கண்டதானுல் அது பிறரையும் பீடிக்கக்கூடிய தல்லவா? ஒருவனுக்கு வைசூரி கண்டால் மற்றவர்களேயும் அது பற்றிக் கொள்கிறது. ஆதலால் வியாதியஸ்தனுக்கு சிகிச்சை செய்வது அவசிய மாகிறது. அதுபோல கலாசாரங்களிலுள்ள வேண்டாதவைகளே யெல்லாம் நீக்கிவிட்டு வேண்டிய வற்றை ஒன்று கூட்டி நவரத்தினங்களேச் சேர்த்துக் கட்டிய வைரமாலே போன்று அற்புதமான நாகரிகம் ஒன்றை உண்டாக்க வேண்டும்.

அப்படியானுல் பல கலாசாரங்களின் சத்தும் சாரமும் ஓரிடத்தில் கூடுமா? அல்லது சேர்க்க முடியுமா? உலகம் பூராவுக்கும் பொதுவான நாகரிகம் ஏற்படப் போகிறதா?

ஆம், ஏற்படத்தான் போகிறது.

"நாட்டு நாகரிகம் என்று தனித்துப் பேசும் காலம் விரைவில் போய்க்கொண்டு, உலகம் முழுவதிலும், ஒரு பொதுவான நாகரிகமும் கலேப் பெருக்கும் ஏற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நாடும் தனக்குச் சிறப்பாயுள்ள பாஷையையும், பழக்க வழக்கங்களேயும், இலக்கிய முறைகளேயும் நீண்ட காலம் தனித்து வைத்துக் கொண்டிருக்கலாம். ஆனல் இந்த யுகம் இயந்திர யுகமாகும்; விஞ்ஞான ஆராய்ச்சி முன்னேறி வருகின்றது. விரைவில் பிரயாணம் செய்யும் வசதி வளர்ந்து வருகின்றன. உலகத்தில் நிகழும் செய்திகள் யாவையும் அவ்வப் போது தெரிந்து கொள்ளலாம். ஆகாய வசனியும், சினிமாவும் நிலேத்த பிரசாரக் கருவிகளாய் விட்டன. இவைகள் எல்லாம் சேர்ந்து உலகத்தில் பொதுவான

நாகரிகத்தை உண்டாக்கி விடும்" என்று ஜவஹர்லால் நேரு சொல்கிறார்.

இன்று அமெரிக்காவின் கோடியிலே பேசப்படும் பிரசங்கத்தை இதே நிமிஷம் ரேடியோ மூலம் நாம் கேட்க முடிகிறது.

உலகத்தின் பலதரப் பட்ட போக்குகளை சினிமாப்பட மூலம் நாம் நேருக்கு நேராகப் பார்க்க முடிகிறது. உலகைச் சுற்றி வருவதென்பது ஒரு விளையாட்டுக் காரியமாகி விட்டது விமானங்களின் மூலமாக. இப்படி எல்லோரும் எதிருக் கெதிராகக் கூடிக் கலக்கும் போது அத்துவான ஆசாரமெல்லாம் மறைந்து சத்துள்ள கலாசாரம் மட்டும் நிலைத்து நின்று தான் தீரும். அது ஒரு சமூகத்திற்கோ, அல்லது ஒரு தேசத்துக்கோ சொந்த முடையதா யில்லாமல், உலகத்தின் பொதுச் சொத்தான நாகரிகமாகும்.

"மனிதர்களென்று இருப்போர் எல்லோரும் ஒன்று சேரப் பயிலும் சாதனையே நாகரிகம் என்பதன் உண்மையான பொருள்" என்று கவி ரவீந்திர நாத தாகூர் கூறுகிறார்.

"மாட்டோம், மாட்டோம்" என்று சிலர் விலகி நின்றாலும் காலம் அவர்களைத் தனித்து வாழ விடாது. அவர்களும் அந்த உலக கலாசார சமுத்திரத்தில் போய் கலக்க வேண்டியவர்கள் தான்.

என்று தந்தியும், தபாலும், ரயிலும், சினிமாவும், விமானமும் வந்ததோ, அன்றே உலகப் பொது நாகரிகத்திற்கு அஸ்திவாரம் போட்டாகி விட்டது.

பல தேச கலாசாரங்களை அறிந்து கொள்ள இலக்கியம் நமக்கு பேருதவி செய்கின்றது. இலக்கியம் நம்முடைய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கண்ணடி. நல்ல இலக்கியத்தைச் சிருஷ்டிப்பதனால் நாம் கலாசாரங்களையும் வளர்ச்சியடையச் செய்யலாம். அதனால் கலாசாரங்களில் அண்டியிருக்கும் ஆபாசங்களை யெல்லாம் அப்புறப் படுத்தலாம். இப்படி நம்மிடமிருந்து உற்பத்தியாகும் சிருஷ்டியை உலகம் பூராவும் பரவச் செய்து அந்த மேன்மையை எடுத்துக் காட்டவேண்டும்.

"இதெல்லாம் எப்போது ஏற்படப் போகிறது?" என்ற சலிப்புக் கேள்வியே வேண்டாம்.

சின்னஞ் சிறு மொக்கு இருக்கிறது. அது மலரும் தருவாயிலிருக்கிறது. அழகு கொடுக்கும் போலிருக்கிறது. இதழ்களை விரிக்கும் தருவாயிலிருக்கிறது. இந்த லட்சியம் — அல்லது முடிவு நிறைவேறுகிறது; பூர்த்தியாகிறது. அப்படியிருக்க மனிதனுடைய இச்சை மட்டும் ஏன் நிறைவேறாது?

அந்த மாதிரி எங்கும் ஒரு பொது நாகரிகம் வியாபிக்கும் போது தான் வேதாந்திகள் சொல்கிறமாதிரி, ஏகாக்கிர சித்தி பூர்த்தியடைந்த மோன நிலை, ஆனந்தத்தின் அற்புத சிகரம்!

★

மலர்மணம்

__முகப்புப் படம்:__

ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள். தமிழ்ப் பெரியாரான ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களைப் பற்றி தமிழ் ஆராய்ச்சித் தலைவர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் எழுதி இருக்கிறார்கள். தமிழுக்குச் சிறப்பாகச் சேவை செய்த தமிழ்ப் பெரியார்களைக் குறித்து தெரிந்து கொள்ள வேண்டியது முதற் கடமை. இன்னும் பல தமிழ்ப் பெரியார்களுடைய வாழ்க்கை விவரங்கள் 'வசந்தத்'தில் வரும்

இந்த மலர் ஆர். கே. எஸ் அவர்களுடைய பொருளாதாரக் கட்டுரையுடன் விரிகிறது. தமிழிலே அரிதான ஒரு விஷயத்தை எடுத்து, நல்ல முறையில், யாவரும் தெரிந்து கொள்ளும் படி தெளிவாக எழுதி இருக்கிறார்கள். 'மூடு மந்திரமாக' இருந்த பெரிய விஷயங்கள் வெட்ட வெளிச்சமாகிறது.

"திருவலம் சுழி" ரசம் மிகுந்த ஒரு ஆராய்ச்சிக் கதை. ஆராய்ச்சியில் கற்பனை கலப்பதால் விசித்திரங்கள் நிகழ்வதுண்டு. ஆனால், கற்பனையில் ஆராய்ச்சி கலந்தால் எவ்விதம் இருக்கு மென்பதற்கு உதாரணமாக விளங்குகிறது இந்தக் கதை. இனிமையுடன் அமைத்துத் தந்தவர் அன்பர் "சாமி"

ஒரு சீனப் பெரியார் பட்டுப் பூச்சியாக மாறியதாகக் கனவு கண்டார். பிறகு, விழித்துக் கொண்டதும், தாம் உண்மையிலே மனிதன் தானா? அல்லது ஒரு பட்டுப் பூச்சி மனிதப் பிறவி எடுத்து விட்டதாகக் கனவு கண்டு கொண்டிருக்கிறதா? என்ற சந்தேகம் வந்துவிட்டதாம் அவருக்கு. அவரை விட்டு இந்தச் சந்தேகம் நீங்கவே இல்லையாம்! கனவின் மந்திர சக்தி இது. இங்கு "சுகி"யின் 'எண்ணக் கடல்' கனவின் எல்லையைக் காண முயலுகிறது.

மற்றும் அனுபவிப்பதற்கு வேண்டிய கதைகளும் கட்டுரைகளும் இம்மலரில் நிறைந்திருக்கிறது.

அடுத்த இதழில் டி. கே. சி அவர்கள் எழுதிய அற்புதமான கட்டுரை வருகிறது. பக்திப் பெருக்கின் பரவசத்தைக் கனிவுடன் காட்டுகிறார்கள். நம்மையறியாமல் அதிலே ஈடுபட்டு இதயம் ஒன்றிக் கை கூப்பி வணங்கத் தோன்றுகிறது.

ஆசிரியர்.

தி சென்ட்ரல் பேங் ஆப் இந்தியா
லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)
(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ.	3,50,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ.	3,36,26,400
செலுத்தப் பட்ட மூலதனம்	... ...	ரூ.	1,68,13,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ.	1,48,32,000
டிபாசிட்டுகள் 30-6-1943ல் இருந்தபடி	...	ரூ.	72,27,68,300

தலைமை ஆபீஸ்:
மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-
Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ்
ஆர்டிஷர் B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
விதல் தாஸ் கான்ஜி
நூர்முகமத் M. சினுய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
சர். ஆர்டிஷர் டலால் Kt.,
ஹார்மஸ்ஜி பிரேம்ஜி கனிஷாரியட்

லண்டன் ஏஜண்டுகள்:- மெஸர்ஸ், பார்க்லேஸ் பேங் லிமி., மிட்லண்ட் பேங் லிமி

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லா விதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக் கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

வசந்தம் ஏஜண்டுகளுக்கு

தனிப்பட்டவர் பெயர்களுக்குச் செக்குகளோ, மணியார்டரோ, அனுப்பக்கூடாது. **"மானேஜர், வசந்தம்"** என்றே குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

விளம்பரதாரர்களுக்கு

விளம்பர விஷயங்களையும், பிளாக்குகளையும் ஆங்கில முதல் தேதிக்குள் அனுப்பி வைத்து விடுமாறு வேண்டுகிறோம்.

மேனேஜர்: வசந்தம், கோயமுத்தூர்.

பாதிக்கு மேல்

சென்னை, தான் கைக் கொண்ட காரியத்தைச் சாதித்து விட்டது.

இந்த வருஷம் யுத்தத்திற்காகச் சேர்க்க வேண்டிய தொகை 10 கோடி ரூபாய். இதில் 6 கோடி தான் சேர்ந்திருக்கிறது.

இரண்டு வாரங்களுக்கு ஒரு கோடி வீதம் சேர்த்தால் இரண்டு மாதங்களில் நமது காரியம் கை கூடி விடும்.

அதிகமாகப் பணத்தைச் சேர்த்து வையுங்கள்.

பாது காப்புக் கடன் பத்திரங்களையும், 'நாஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்' களையும் வாங்குங்கள்.

வசந்தம்

சந்தா

வருஷத்திற்கு ரூ.	6-0-0
தனிப் பிரதி	0-8-0

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.

★

வசந்தம்

சிலோன் சோல் ஏஜண்டாக கொழும்பு "வெஸ்டர்ன் நியூஸ் ஏஜன்ஸி"யார் நவம்பர் (1943) மாதத்திலிருந்து நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

மானேஜர் :

"வசந்தம்"

காரியாலயம்.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் மதருஸ்

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ் : நார்த் பீச் ரோடு, மதருஸ்.

மதருஸ் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், மவுன்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

அதிகார மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (28—5—'43)	...	ரூ.	27,55,229
ரிசர்வும் மற்ற நிதிகளும் (25—5—'43)	...	ரூ.	29,44,259

மொத்த ஆஸ்தி 7 கோடிக்கு மேல்.

எல்லாவித பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

வேண்டிய விவரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது எழுதி தெரிந்துகொள்ளலாம்.

சேக்ரடரி: N. கோபால அய்யர்.

நம்பிக்கை!
வந்த விருந்தினரை நரஸுஸ் காபி அளித்து உபசரித்திருக்கிறாள். அவர்கள் அதை வெகுவாக விரும்புவார்களென்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். நரஸுஸ் காபி, டீ மிகச் சிறந்தவை என்பது விஷயமறிந்த வீட்டு எஜமானிகளுக்குத் தெரிந்தது தானே!
நரஸுஸ்
இந்தியத் தயாரிப்பில் தலைசிறந்தது
நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
சேலம்
தென்னிந்தியா
MNK 20

டெலிபோன் : 100. தந்தி: "தாஸ்கௌட்"

N. தாசேகவுண்டர் & கோ.

ஏஜண்டுகள்: அண்டர்வுட் டைப்ரைட்டர், பேவர் லூபா, மெரிடின, ஒமெகா, டிஸ்ஸாட் வாட்சுகளுக்கும் மற்ற வகை கடியாரங்களுக்கும்.

மருந்து வகைகள், வைத்தியக் கருவிகள், நூதன சாமான்கள், எனமல் கண்ணாடி சாமான் தினுசுகள் முதலியவைகளுக்கும் சிறந்த இடம்.

இன்னும்,

உங்கள் தேவைகளுக்கு எங்களை விசாரியுங்கள்.

N. Dasai Gownder & Co.,

CHEMISTS & DRUGGISTS,

Avanashi Road, Coimbatore

தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங், எஸ்பிளனேட், மதருஸ்.

பிராஞ்சுகள்:

ஆலப்புழை, பம்பாய், கண்ணனூர், கோயமுத்தூர், தேவக்கோட்டை, காரைக்குடி, மதுரை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சேலம், சிவகெங்கை.

வெளியிடப்பட்டு வசூலான மூலதனம்	ரூ. 50,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 22,27,000
ரிஸர்வ் நிதி	ரூ. 7,00,000

கனம் எம். ஸிடி. எம். சிதம்பரம் செட்டியார்,
சேர்மன்.

பிக்ஸட் டிபாசிட்டுகளும் கீழ்க்கண்ட விதத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்

6—மாதத்துக்கு	2%
12 "	2¼%
24 "	2½%

எல்லாவித பாங் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்படும்

எஸ். டி. சதாசிவம், ஜெனரல் மேனேஜர்.

ஸ்திரீகள் நீராடுவது

(ஓர் முகலாய சித்திரமெழுத்தைத் தழுவினது)

ஹமாம் ஸோப்பின் புது வடிவத்தைக் கவனிக்கவும். அதன் எடை முன் போலவேதான். குறைவே கிடையாது.

முகலாய சக்கரவர்த்திகளின் அந்தப்புர ஸ்திரீகள் கோடை நாட்களில் தங்கள் ஸ்நான அறைகளில் நுண்ணிய நறுமணம் கமழும் ஜலத்தில் நீராடி தங்கள் யௌவன காந்தியையும் கவர்ச்சியையும் பாதுகாத்து வந்தனர்.

அதுபோலவே இன்று நீங்களும் குளுர்மையும் பரிமளமுமுடைய ஹமாம் ஸோப்பையே தேய்த்து ஸ்நானம் செய்து உங்கள் மேனி காந்தி குன்றாமல் பாதுகாத்து மகிழலாம்.



ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
டாடாபுரம் & பம்பாய்.

டாம்கோ விற்பனை இலாகா,
19. வாணியர் தெரு. த. பெ. நெ. 31
மதராஸ்.

T. S. 4175

PSG

மோட்டார்களை

ஸ்தாபனம் செய்து



செலவை

சிக்கனம் செய்யுங்கள்

PSG அண்டு சன்ஸ், தர்மஸ்தாபன இண்டஸ்டிரியல்
இன்ஸ்டிடியூட், பூளமேடு, கோயமுத்தூர்.

சமையல் வேலைகளை
சீர்படுத்த வருகிறது



காமதேனு
வனஸ்பதி

உயர்தரமான பொரியல் சாதனம் இதோ வந்துவிட்டது. காமதேனு மணமற்றது. ஆகையால் அதைக்கொண்டு தயாரித்த ஆகாரவகைகள் அவற்றின் இயற்கை மணத்தை இழப்பதில்லை. உயர்தர நெய்யைப் போன்று மணல் மணலாக உள்ளது. வைடமின்கள் நிறைந்தது. பரிசுத்தமானது. கைபடாமல் தயாரிக்கப்பட்டது. 4 காலன், 10 பவுண்டு, 5 பவுண்டு கொண்ட சீல் வைத்த டின்களில் விற்கப்படுகிறது. காமதேனுவை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு. நெய், வெண்ணெயைப் போன்ற குணமுள்ளதாயினும் விலையில் மட்டும் மலிவு.

தயாரிப்பவர்கள் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்.

மேட்டூர்டாம் — தென்னிந்தியா

KVK.I.TM.

Use

A. P. R.

GUARANTEED

GINGELLY OIL

Free from Adulteration! Free from Bitterness!
Free from Rancidness! But of Appreciable Smell!
Best and Pure Oil.

Try Once Try
FOR COOKING AND BATHING.

Sales Depot :

A. P. Ramaswamy Chettiar's

Guaranteed Gingelly Oil Stores,
(REGISTERED)
New Market, COIMBATORE.

Factory ;

A. P. R. OIL MILLS,

FORT, COIMBATORE.

R. L. Subramania Chetty,
Managing Secretary.

அன்பர்களுக்கு :

"வசந்தம்" பழைய பிரதிகள் கைவசமில்லை. ஆதலால், தயவு செய்து, ஷை பிரதிகளுக்காக, ஸ்டாம்புகளோ, மணியார்டரோ அனுப்ப வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம். வருஷ சந்தா ரூ. 6 அனுப்பினால் போதும்

மானேஜர்:

வசந்தம் காரியாலயம்

4/12 A. திருச்சி ரோடு
கோயமுத்தூர்.

BOC

THEY KEEP YOUR ENGINE RUNNING AT ITS BEST

SHELL ★ **B O C**

MOTOR SPIRIT — OILS — MOTOR SPIRIT

★

Day & Night Service

Chellam & Palghat Road Stand Pumps

OF

MESSRS. A. N. MARUDACHALAM CHETTIAR

&

A. KRISHNASWAMI CHETTIAR

AGENTS, BURMAH SHELL, COIMBATORE.

Vasantham Novr. 43

199790
சென்னை-600 008

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

(லிமிடெட்.)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஷ கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

மல் சர்டிங்
லாங்கிளாத் சதர்
வேஷ்டிகள் டவல்
தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

Regd. No. M. 4519 VASANTHAM November-1943

Printed at the Vasanta Mills, Press, and Published by A. Krishnaswamy at 4/12. A. Trichy Road, Coimbatore. Editor; R. Thirugnanasambandam.